27.3.2023
திங்கட் கிழமை

*சம்பந்தம் சம்பந்தி  - ஸம்ப்ரதாய விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. பத விளக்கம் :

# *சம்பந்தம்* என்பது பொதுவாக, ‘தொடர்பு - இணைப்பு - உறவு - பொருத்தம்’ என்கிற பொருளோடு ப்ரயோகிக்கப் படும்.

*கர்ம சம்பந்தம்* - சாஸ்த்திர விஹித செய்ல்களினால் புண்யங்களும், சாஸ்த்திர விரோத செயல்களினால் பாபங்களையும், சம்சாரி ஜீவன் சம்பாதிக்கிறான் ; இந்த பாப புண்ய  *கர்ம சம்பந்தம்* சம்சார பந்த ஹேதுவாகிறது.

*சரீர சம்பந்தம்* - முக்குணங்களாலான மூல ப்ரக்ருதியின் பரிணாமமாக, பாப புண்ய கர்ம சம்பந்தம் உடைய சம்சாரி ஜீவர்களுக்கு தேவ-மநுஷ்ய-த்ரியக்-ஸ்தாவர *சரீர சம்பந்தம்* உண்டாகிறது.

*நிரூபாதிக பகவத் சம்பந்தம்* - பரமாத்மாவான ஸ்ரீமந் நாராயணனுக்கும் ஜீவர்களுக்கும், ஸகல காலங்களிலும், ஸகல தேசங்களிலும், ஸர்வ அவஸ்தைகளிலும் நவ வித சம்பந்தங்கள் உண்டு என்பதை ப்ரமாண பலத்தினால் தெளியலாம் ; இதுவே நித்யமான ஒரு காரணத்தை முன்னிடாத  *நிரூபாதிக பகவத் சம்பந்தம்*

*ஔபாதிக பந்துக்களின் சம்பந்தம்* - கர்ம சம்பந்த த்தினல், சரீர சம்பந்தம் உண்டாகி, அதன் விளைவாக தாற்காலிகமாக அந்த ப்ராக்ருத சரீரம் உள்ள மட்டில் ஏற்படும் தாய், தந்தை போன்ற உறவுகள், அநித்யமான பிறப்பாகிற காரணத்தை முன்னிட்டு உண்டான , *ஔபாதிக பந்துக்களின் சம்பந்தம்* என்பதாகிறது.

# *சம்பந்தி* என்பது சம்பந்தம் உடையவற்றைக் குறிப்பிடுவதாகும் ;

*சம்சார ஜீவர்களின் கர்ம சம்பந்தம்* என்பது கர்மா மற்றும் சம்சார ஜீவன் பரஸ்பர *சம்பந்தி* என்பதாகிறது.

*சம்சார ஜீவர்களின் சரீர சம்பந்தம்* என்பது ப்ராக்ருத சரீரம் மற்றும் சம்சார ஜீவன் பரஸ்பர *சம்பந்தி* என்பதாகிறது.

*ஜீவர்களின் நிரூபாதிக பகவத் சம்பந்தம்* என்பதால் ஸர்வேஸ்வரனும் ஸகல ஜீவர்களும் பரஸ்பர *சம்பந்தி* ஆகிறார்கள்.

*ஜீவர்களின் ஔபாதிக பந்து சம்பந்தம்* என்பதால் பிறப்பால் உண்டான பந்துக்களும் அப்பிறப்பைக் கொண்ட சம்சாரி ஜீவர்களும் பரஸ்பர *சம்பந்தி* ஆகிறார்கள்.

2. ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஸ்வாதீனம் உள்ள ஜீவன், மற்றபடி பகவத் அதீனமாக செயல் புரிந்து, பகவத் அதீனமாக கர்ம அநுகுணமாகப் பலனைப் பெறுகிறான்.

# கர்ம மீமாம்ஸை வரி :

*சாஸ்த்திர பலம் ப்ரயோக்தரி*

அதாவது, சாஸ்த்திரம் விதித்த கர்மாக்களை அநுஷ்டிப்பவனுக்கே அதற்காக சொல்லப் படுகிற பாப புண்ய பலன்கள் ஸித்திக்கும். அதாவது, சாஸத்திர விதிகளை மீறும் போது பாபங்களும், சாஸ்த்திர விதிகளை பின்பற்றும் போது புண்யங்களும் ஸித்திக்கும்

*ந புக்தம் க்ஷீயதே கர்ம கல்ப கோடி ஸதைரபி*

என்கிற சாஸ்த்திர விதிப்படி, கல்ப கோடி காலங்களானாலும், பாப புண்ய கர்மாக்கள் அநுபவியாமல் அழியாது.

ஆகையால், சரணாகதனுக்கு விலக்கப் பட்ட பாப புண்ய கர்மாக்களை அவர்கள் மோக்ஷத்தை அடையும் சமயத்தில், ஸர்வேஸ்வரன் அவர்களது புண்ய கர்மாக்களை அவர்களது நண்பர்களிடமும் பாப கர்மாக்களை அவர்களது விரோதிகளிடமும் சேர்த்து விடுகிறான் என சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

# சம்சாரி ஜீவர்களின் வ்யாபாரமும் அதனால் ஸித்திக்கும் பலனும் பகவத் அதீனம் ; சம்சார பந்தத்தை விளக்கும் போது, ஸ்வாமி தேசிகன் ***உபோத்காதாதிகாரத்தில்***

***கர்ம அவித்யாதி சக்ரே ப்ரதிபுருஷம் இஹ அநாதி சித்ர ப்ரவாஹே தத் தத் காலே விபக்தி: பவதி ஹி விவிதா ஸர்வ ஸித்தாந்த ஸித்தா***

என அருளினார். அதாவது, அந்தந்த உரிய காலங்களில், அநாதியாக கர்ம-அவித்யா-வாசனை-ருசி-ப்ரக்ருதி சம்பந்தம் என்கிற சக்ரத்தில், ஒரு வட்ட வடிவத்தில், சுழன்று இருக்கும் சம்சாரி ஜீவன்களுக்கு, அவரவர்கள் கர்ம வினைக்கு ஏற்ப பலன்கள் பலவாறாக வருகின்றன. இந்த சம்சாரி ஜீவர்களின். கர்ம அநுகுணமான பிறப்புக்களுக்கு, தொடர்பு உண்டு என்பது ப்ரமாண ஸித்தம்.

***அவித்யை*** - சரீரத்தையே ஆத்மாவாகவும், ஆத்மாவை சுதந்திரனாகவும் நினைத்தல் போன்ற உண்மைக்கு மாறான எண்ணங்கள்.

***கர்மம்*** - அவித்ய்யையால் ஜீவன் செய்யும் சாஸ்த்திரத்தை மீறிய செயல்கள்.

***வாஸனை*** - அவித்யா மற்றும் கர்மம் காரணமாக ஜீவனுக்கு உண்டாகும் ஸம்ஸ்காரம் (தன்மை).

***ருசி*** - வாஸனைக்கு ஏற்ப உண்டாகும் செயலில் விருப்பம்.

***ப்ரக்ருதி சம்பந்தம்*** - மேலுள்ள நான்கு காரணங்களினால் உண்டாகும் ப்ராக்குத சரீர சம்பந்தம்.

இந்த சரீர சம்பத்தினால் மீண்டும் அவித்யை, கர்மம், வாஸனை, ருசி மற்றும் ப்ரக்ருதி சம்பந்தம். அதுவே மீண்டும் மீண்டும் ஏற்படும் பிறவி. இதையே பிறவிப் பிணி என்கிறோம். இச்சுழலே மோக்ஷ பலனுக்கு தடையாகிறது.

3. சம்சாரி ஜீவர்களுக்கு, கர்ம சம்பந்தத்தினால், ப்ராக்ருத சரீர சம்பந்தம் உண்டாகிறது :

# உபநிஷத் சாரமான பகவத் கீதையில் (2-16) ஸர்வேஸ்வரனான கண்ணன் ப்ராக்ருத சரீரத்தின் தன்மையாயும் ஜீவர்களின் தன்மையையும் விளக்கினான் :

***நாஸதோ வித்யதே பாவோ நாபாவோ வித்யதே ஸத: உபயோரபி த்ருஷ்டோSந்தஸ்த்வநயோ தத்த்வதர்ஸிபி:***

***அஸத: பாவ ந வித்யதே*** - மாறுதல் அடையும் தேஹத்துக்கு நிலைத்திருக்கை என்பது இல்லை

***ஸத: அபாவ ந வித்யதே*** - நிலைத்திருக்கும் ஆத்மாவிற்கு இல்லாமை என்பது இல்லை

*அநயோ உபயோ அபி அந்த:* - இந்த இரண்டுக்குமுள்ள நிலையானது

*தத்த்வதர்ஸிபி: த்ருஷ்டா* - தத்வ ஞானம் பெற்றவர் உணர்வார்

தேஹத்துக்கு நிலைத்திருக்கை கிடையாது. ஆத்மாவிற்கு உற்பத்தி அழிவில்லை. தத்வ ஞானம் பெற்றவர் இவ்விரண்டுக்குமுள்ள வேற்றுமை உணர்வார்.

# உபநிஷத் சாரமான பகவத் கீதையில் (13-33) ஸர்வேஸ்வரனான கண்ணன் ப்ராக்ருத சரீரத்தோடு ஜீவ சம்பந்தத்தை விளக்கினான் :

***யதா ப்ரகாஸயத்யேக: க்ருத்ஸ்நம் லோகமிமம் ரவி: க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்நம் ப்ரகாஸயதி பாரத***

***பாரத*** - பாரதா

***ஏக: ரவி இமம் லோகம் க்ருத்ஸ்நம் யதா ப்ரகாஸயதி*** - எப்படி சூரியன் ஒருவனாய் இவ்வுலக முழுவதையும் ஒளியால் விளங்கச் செய்கிறானோ

***ததா க்ஷேத்ரீ*** - அதுபோல் க்ஷேத்திரத்தை உடையோனான ஜீவன்

***க்ருத்ஸ்நம் க்ஷேத்ரம் ப்ரகாஸயதி*** - க்ஷேத்திரமுழுதையும், அதாவது உடல் முழுவதையும், தன் அறிவு என்கிற ஒளியால் விளங்கச் செய்கிறான்

பாரதா ! எப்படி சூரியன் ஒருவனாய் இவ்வுலக முழுவதையும் ஒளியால் விளங்கச் செய்கிறானோ, அதுபோல் க்ஷேத்திரத்தை உடையோனான ஜீவன் க்ஷேத்திரமுழுதையும், அதாவது உடல் முழுவதையும், தன் அறிவு என்கிற ஒளியால் விளங்கச் செய்கிறான்.

# சரீர ஆத்ம சம்பந்தத்தில், ***தத் ப்ரயுக்த தோஷமாவது*** - அவற்றின் சம்பந்தத்தினால் ஏற்படும் தோஷம் என பொருளாகிறது. சேர்க்கையினால் ஏற்படும் தோஷமாவது, பொதுவாக சம்சாரி ஜீவர்களுக்கு, ***ப்ரக்ருதி சம்பந்தம்*** என்கிற முக்குணங்களாலான சரீர சம்பந்தத்தினால், ஏற்படுகிறது. அநாதியான ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற குணங்கள் கலந்த ப்ரக்ருதி என்கிற அசேதந வஸ்துவின் பரிமாணங்களாலான சரீரத்தை அந்த சம்சாரி ஜீவர்கள் பெற்று, அதன் விளைவாக விபரீத ஞானமுடையவனாய், அழுக்கடைந்திருக்கும் நிலையை, பராசர மஹரிஷி,

***அநேக ஜன்ம ஸாஹஸ்ரீம் ஸம்சார பதவீம் வ்ரஜன். மோஹ ஸ்ரமம் ப்ர்யாதோஸெள வாஸனா ரேணு குண்டித:***

என அருளினார். அதாவது, அநேகமாயிரம் ஜன்மங்காளக, சம்சாரத்தில் சிக்கி, ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற குணங்கள் கலந்த ப்ரக்ருதி என்கிற அசேதந வஸ்துவின் பரிமாணங்களாலான சரீரத்தை பெற்று, மோஹம், அக்ஞானம் போன்ற புழுதிகளால் மூடப்பட்டு, இந்த துக்க மயமான சம்சார வாழ்வே போக்யம் என கருதும் அளவிற்கு 'ப்ரக்ருதியின் சேர்க்கை' ***ஸம்ஸர்கஜா தோஷ குணா பவந்தி*** என்கிற வரிக்கு ஏற்ப, இந்த சம்சாரி ஜீவர்களின் எண்ணத்தையும் செயல்களையும் ஆட் கொள்கின்றன.

4. ஆக, ப்ராக்ருத சரீர சம்பந்தமானது, பல விதமான விபரீத எண்ணங்களுக்கு ஹேதுவாகிறது ; இந்த, ஞானக் குறைப் பட்டின் கொடுமையை, ஸ்ரீராமானுஜர், சரணாகதி கத்யத்தில் தெளிவு படுத்துகிறார்: சம்சாரி ஜீவர்களின் ***ஞான சங்கோசமானது***, சேதநனின் தர்ம பூத ஞானத்தை சங்கோசித்து இருக்கச் செய்யும் ; இந்த ஞான சங்கோசமே ப்ரமமாகிறது ; அதாவது, ஒன்றை மற்றொன்றாக நினைக்கும் நிலையாகிறது.

# ***தேஹாத்ம ப்ரமம்*** - அழியக்கூடிய சரீரத்தை அழிவில்லாத ஆத்மாவாக நினைக்கும் படி ஆகிறது ; இதனால் விபரீத எண்ணங்களிலும் செயல்களிலும், ஈடுபட காரணமாகிறது. இதனால், ஐஹிக, ஆமுஷ்மிக

பலன்களை, அதில் உள்ள தோஷ ஸப்தகங்களை உணராமல், புருஷார்த்தமாக எண்ணத் தோன்றுகிறது. இந்த, ஞானக் குறைப் பட்டின் கொடுமையை, ஸ்ரீராமானுஜர், சரணாகதி கத்யத்தில் தெளிவு படுத்துகிறார்:

*மதீயானாதி கர்ம ப்ரவாஹ ப்ரவ்ருத்தாம் பகவத் ஸ்வரூப திரோதானகரீம் விபரீத ஜ்ஞான ஜனனீம் ஸ்வவிஷயாயாஸ்ச போக்த புத்தேர் ஜனனீம் தேஹேந்த்ரியத்வேன போக்யத்வேன சூக்ஷ்மரூபேண சாவஸ்திதாம் தைவீம் குணமயீம் மாயாம்*

அதாவது, இந்தப் ப்ரக்ருதி எனப்படும் முக்குணங்களாலான (ஸத்வம், ரூஸ் மற்றும் தமஸ்), சம்சாரி ஜீவர்களின் சரீரம் இருக்கிறதே , இது அநாதிகாலமாக அடியேன் செய்த கர்மவினை என்கிற ஆற்று வெள்ளத்தில் அடித்துத் தள்ளப்பட்டு பகவானின் ஸ்வரூபத்தை அறியாதபடி செய்கிறது. ஸ்ரீமந் நாராயணன், பரமன்; அவனுக்கு நாம் நல்லடியார்கள் என்கிற நல்ல எண்ணங்கள் தோன்றாதபடி தடுத்து, அதற்கு எதிரான எண்ணங்களை நினைக்கச் செய்கிறது. ஒரு பொருளை, வேறு ஒரு பொருளாக நினைக்கச் செய்கிறது. தனக்குத் தானே இன்பமானவன் என்கிற எண்ணத்தைத் தோன்றச் செய்கிறது. மாயா வித்யை செய்பவன்,காண்பவரை மயக்க , தன் கையில் மயில்தோகை வைத்திருப்பதைப் போன்று ப்ரக்ருதியானது , சரீரத்தையும் , இந்த்ரியங்களையும் தன்வசம் வைத்து சம்சாரி ஜீவனை மயக்கி அவன் உண்மையை அறியாமல், அவனுக்குத் தவறான அறிவைக்கொடுத்து, புலன் இன்பங்களில் ஈடுபடச் செய்கிறது.

# *ஸ்வதந்த்ராத்ம ப்ரமம்* - பகவத் சேஷத்வத்தை உணராது சாஸ்த்திர விரோத செயல்களில் ஈடு பட ஹேதுவாகிறது. ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹத்தில்,

*அசாஸ்த்ரம் ஆஸுரம் க்ருத்ஸ்நம் சாஸ்த்ரீயம் குணத ப்ருதக் லக்ஷணம் சாஸ்திர சித்தஸ்ய த்ரிதா சப்தத சோதிதம்*

என ஆளவந்தார் அருளிச் செய்தார். அதாவது, சாஸ்த்ரத்திற்கு உட்படாத செயல்கள் அனைத்தும் அசுரத் தன்மை உள்ளவைகளாகும் என்றும் சாஸ்த்திரம் விதித்தவற்றை மறுக்காமல் செய்து போவதே ஜீவர்களின் லக்ஷணம், என அருளினார்.

# *அந்ய சேஷத்வ ப்ரமம்* - ஸர்வ நியந்தாவான, பரம காருணிகனான, ஜீவர்களோடு நவ வித சம்பந்தம் உடையவனான, ஸர்வேஸ்வரன் ஸ்ரீமந் நாராயணன் பரம புருஷார்த்தத்தை, லகு உபாயத்தால் அளிக்க காத்திருக்கும் போது, அதனை உணராது மற்ற கர்ம வச்யரான தேவர்களிடம் மடிப் பிச்சை கேட்கும் அவல நிலை உண்டாகிறது. பரமபுருஷனே ஸர்வ பல ப்ரதன் என்பதை மறந்து, *தேவதாந்தரங்களுக்கும் ஒரு சில பலனளிக்கும் சக்தி இருப்பதாக மனதால் எண்ணி இருப்பது* ; அதனால், உறவினர் மற்றும் நண்பர்களின் தேவதாந்தர சம்பந்தத்தை நிராகரிக்க மனம் தயங்குவது.

ஸர்வேஸ்வரனான கண்ணனே ஸகல பலனையும் கொடுக்க தகுதி படைத்தவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் (7-22) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

*ஸ தயா ஸ்ரத் தயா யுக்த: தஸ்ய ஆராதனமீஹதே. லபதே ச தத: காமான் மயைவ விஹிதான் ஹிதான்*

அதாவது, இதர தேவதையின் ஸ்ரத்தையான ஆராதனத்தாலே பலனை அடைகிறான். அந்த பலன்களும் என்னால் கொடுக்க பட்டவைகளே.

ஸர்வேஸ்வரனான கண்ணன் தன்னை பூஜிப்பதிலும் மற்ற தேவதைகளை பூஜிப்பதிலும் உள்ள வேறுபாட்டை மேலும் பகவத் கீதையில் (9-23) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

*யே து அன்ய தேவதா பக்தா யஜந்தே ச்ரத்தயாந்விதா: தேபி மாமேவ கௌந்தேய யஜந்தி அவிதி பூர்வகம்*

அதாவது, எவர்கள் மற்ற தேவதைகளை ச்ரத்தையுடன் ஆராதிக்கிறார்களோ, அவர்களும் என்னையை ஆராதிக்கிறார்கள், ஆனால் சாஸ்த்ர விதிகளை பின் பற்றாமல்.

5. சாஸ்த்திரம் விதித்த ஆக்ஞா அநுக்ஞா கைங்கர்யங்களும், முக்தனாகும் அளவும் சரணாகதன் செய்ய வேண்டுவதே.

*ஆக்ஞா அநுக்ஞா விபாகேன த்விதா சாஸ்த்ரீய பத்ததி நிக்ரஹ அநுதயா ஆத்யா பல தத்தத் ஆப்தயே*

அதாவது,

சாஸ்த்ரத்தில் விதித்த பகவத் கைங்கர்யம் இரு வகையாக சொல்லப் படுகிறது:

# *ஆக்ஞா கைங்கர்யம்* (செய்தே போக வேண்டிய நித்ய நைமித்திக கர்மாக்கள்)

# *அநுக்ஞா கைங்கர்யம்* (கோவிலுக்கு செல்லுதல், புனித நதியில் நீராட்டம் போன்றவை)

***ஆக்ஞா கைங்கர்யம்*** செய்வதினால் மன ஶுத்தி, புலனடக்கம் போன்றவை ஏற்படுமே அன்றிக்கு ஒரு தனிப்பட்ட புண்யம் வந்து சேராது; அவைகளை செய்யாமல் போனால் பாபம் வந்து சேரும். தீங்கு விளையும்.

***அநுக்ஞா கைங்கர்யம்*** செய்வதினால் புண்யம் வந்து சேரும்; அவைகளை செய்யாமல் போனால் பாபம் வந்து சேராது.

# ஆக, நித்ய நைமித்திக கர்மாக்கள் சாஸ்த்ரப்படி செய்ய வேண்டுபவன ; உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளின ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

*விஹிதத்வாத் ச ஆஸ்ரம கர்மாபி*

என்கிறார்.

அதாவது, இதை ஶ்ரீபாஷ்ய உரையில், ஸர்வேஸ்வரனுடைய ஆணையால் அனைவரும் வர்ண ஆஸ்ரம கர்மாக்களை அநுஷ்டிக்க வேண்டும், என்று கூறப்படுகிறது.

# ஶ்ரீ பாஷ்யகாரர் தனது ***நித்யம்*** எனும் க்ரந்தத்தில் இதை அருளியுள்ளார்.

*தேவாந்ருஷீந் பித்ரூந் பகவத் ஆத்மகாந் த்யாத்வா ஸந்தர்ப்ய:*

அதாவது, தேவர்களையும் ரிஷிகளையும் பித்ருக்களையும் எம்பெருமானை அந்தர்யாமியாக உடையவராகவே எண்ணி தர்ப்பணம் செய்ய வேண்டும். இதைத் தவிர்த்து, சாஸ்த்திர விதி இல்லாத கர்மங்களினால் மற்றபடி தேவதாந்தர சம்பந்தம் / சப்த ப்ரயோகம் மோக்ஷ பலனை அழிக்கும், என்பது சாஸ்த்திர ஸம்ப்ரதாய விளக்கங்கள்.

# தக்ஷ ஸ்ம்ருதி வரிகளாவது :

*யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹூதாஸநாந். ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்திதே*

அதாவது, 'பித்ருக்களையும், தேவர்களையும், ரிஷிகளையும், தன் நித்ய நைமித்திக கர்மா அநுஷ்டானத்தின் போது ஆராதிப்பவர்கள் அவர்களுக்கு அந்தர்யாமியான ஸர்வேஸ்வரனையே ஆராதிக்கிறார்கள்'. மற்றபடி தேவதாந்தர சம்பந்தம் நிஷித்தம்.

6. ஔபாதிகமான சாம்சாரிக சம்பந்தியானவர்கள், சரீர சம்பந்த்தினால் உறவினர்களாகி அவர்களின் ஸுக துக்கங்களை தாம் பகிர்ந்து நிற்கும் அப்ராப்தமான நிலை உண்டாகிறது :

# ஸ்வாமி திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி (1-9-1)

*தாயே தந்தை என்றும் தாரமே கிளை மக்கள் என்றும், நோயே பட்டு ஒழிந்தேன் உன்னைக் காண்பது ஓர் ஆசையினால், வேய் ஏய் பூம்பொழில் சூழ் விரையார் திருவேங்கடவா, நாயேன் வந்தடைந்தேன் நல்கி என்னை ஆள் கொண்டு அருளே*

அதாவது, லௌகீக பந்துக்களைத் துறந்து பரம புருஷார்த்தத்தை அடைய உன் திருவடிகளை அடைந்துள்ளேன். பரம பருஷார்த்தத்தை அடைய தடையாவது, ஔபாதிக சம்பந்தங்கள் ; அதனால் உண்டாகும் அப்ராப்தமான செயல்கள்.

# உபநிஷத் சாரமான பகவத் கீதையில் (1-34) ஔபாதிக சம்பந்த விஷயங்கள் பராமர்சிக்கப் படுகிறது :

*ஆசார்யா: பிதர: புத்ராஸ்ததைவ ச பிதாமஹா: மாதுலா: ஸ்வஸுரா: பௌத்ரா: ஸ்யாலா: ஸம்பந்திநஸ்ததா*

*ஆசார்யா: பிதர: புத்ரா:* - குருமார்கள், தந்தையர், மக்கள்;

*ததா பிதாமஹா: மாதுலா: ஸ்வஸுரா:* - அதே போல, பாட்டன்மார், மாமன்மார், மாமனார்கள்;

*பௌத்ரா: ஸ்யாலா: ஸம்பந்தி⁴ந:* - பேரரும், மைத்துனரும், உறவினர்களும்

குருக்களும், தந்தையரும், மக்களும், பாட்டன்மாரும், மாதுலரும், மாமன்மாரும், பேரரும், மைத்துனரும், சம்பந்திகளும் (இங்குளர்) - அதனால் அவர்களோடு போர் புரிய அர்ஜுனன் தயங்கினான்.

# ஶ்ரீ ஆளவந்தார் அருளிய ஶ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹத்தில்,

தகாத பந்துக்களிடம் பற்றினாலும், தகாத இடத்தில் கருணையினாலும், உண்டான தர்மத்தில் அதர்ம புத்தியாலே, கலங்கி நிற்பவனாய், சரணமடைந்தவனான, அர்ஜுனனைக் குறித்து, கீதா சாஸ்த்ரம் சொல்லப்பட்டது, என்பதை

*அஸ்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்மதியாகுலம் பார்த்தம்ப்ரபந்நமுத்திஶ்ய ஶாஸ்த்ராவதரணம் க்ருதம்*

என்கிற ஸ்லோகத்தில் முதல் அத்யாயம் விளக்கப் படுகிறது. அதாவது, க்ஷத்ரியனுக்கு போர் புரிவது வர்ண தர்மம் ; ஔபாதிக சம்பந்தம் உடைய பந்துகளிடம் ப்ரீதி கொண்டு, தர்மத்தை அதர்மம் என எண்ணினான்.

7. ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன், ஸகல விதமான சம்பந்தி, என்பது ப்ரமாண ஸித்தம் அதாவது, பரமாத்மாவான பகவானுக்கும் ஜீவர்களுக்கும் நவ வித சம்பந்தங்கள் உண்டு என்பதை ப்ரமாண பலத்தினால் தெளியலாம்; இந்த சம்பந்தங்கள் உபமானம் காட்டி விளக்கப் படுகிறது.

*பிதா ச ரக்ஷக: சேஷி பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி, ஸ்வாமி ஆதாரோ மம அத்மா ச போக்தா சாத்யமநூதித:*

என்கிற ஸ்லோகம் கொண்டு விஷயீகரிக்கலாம்.

# *பிதா-புத்ரன்* - பகவானே ஸர்வ காரணபூதன் - கஜேந்திரன், முதலையின் பிடியிலிருந்து தப்பிக்க, *நமோஸ்துதே அகில காரணாய; நிஷ்காரணாய; அத்புத காரணாய* எனக்கூறி, எம்பெருமானை அழைத்தான்.

# *ரக்ஷகன்-ரக்ஷிய வஸ்துக்கள்* - பகவானே ஸர்வ ரக்ஷகன் - ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் *மூல மந்த்ராதிகாரத்தில்* உள்ள வரிகள் தெளிவிக்கின்றன: ***இந்த ரக்ஷகத்வம் (அவ ரக்ஷணே) அவச்சேதகமில்லாமையாலே ஸர்வ விஷயம். ரக்ஷா ப்ரகாரங்கள் விஷயங்கள் தோறும் ப்ரமாணங்கள் காட்டினபடியிலே விசித்திரங்களாயிருக்கும்***

# *சேஷி சேஷ பாவம்* - பகவானே ஸர்வ சேஷி - வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீ ராமானுஜர், ***பரகத அதிசய ஆதான இச்சயா உபாதேய த்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ச சேஷ: பர: சேஷி*** என்று ‘சேஷ - சேஷி’ விஷயத்தை விளக்கி அருளியுள்ளார். பகவானுக்கு போக ரஸத்தையும் லீலா ரஸத்தையும் உண்டாக்கும் ஜீவர்கள் சேஷ பூதர்கள் ; அவன் சேஷி.

# *கணவன்-மனைவி உபமானம்* - பகவானே ஸர்வ நியந்தா - ஸ்ரீ ராம தூதனாக வந்த சிறிய திருவடியிடம், பிராட்டி கூறியதாவது, ***கௌசல்யா லோக பர்தாரம் ஸுஷுவே யம் மனஸ்வினி தம் மமார்த்தம் ஸுகம் ப்ருச்ச சிரஸா ச அபிவாதயா*** கோசலை நந்தனான லோக பர்தாவான ஸ்ரீராமனிடம் என்னுடைய நமஸ்காரங்களைத் தெரிவி.

# *அறிய வேண்டுபவன்- அறிபவன் பற்றிய விளக்கம்* - ***அதாதோ ப்ருஹ்ம ஜிக்ஞாஸா*** என்கிற ப்ருஹ்ம ஸூத்ரமானது கர்ம விசாரானந்தரம் ப்ருஹ்மத்தைக் குறித்த ஆய்வு சரியானதே ; அவனே அறிய வேண்டுபவன், என்றாகிறது.

# *ஸ்வாமி- தாஸ பாவம்* - பகவானே ஸர்வ ஸ்வாமி - கடோபநிஷத் கூறும் போது, ***அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேண உவுச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்*** என்று ***அ*** என்பதால், விஷ்ணு சொல்லப் படுகிறான்; ***உ*** பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லம் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு ***ம*** என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கம், எனப் பொருளாகிறது.

# *ஆதார-ஆதேய விளக்கம்* - பகவானே ஸர்வ ஆதாரன் - நாராயணன், தத் புருஷ சமாஸத்தினால் ***நாராணாம் அயனம்*** - அதாவது ஸகல சேதந அசேதந வஸ்துக்களும் இருப்பிடமாகக் கொண்டவன்; ஆக, நாராயண் ***ஆதாரம்*** ; மற்றவை ***ஆதேயம்***

# *சரீரி சரீர சம்பந்தம்* - பகவானே பரமாத்மா - தைத்ரிய உபநிஷத்தில், ***நாராயண பரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர:*** என்றும், ப்ருஹதாரண்யக உபநிஷத்தில், ***யஸ்ய ஆத்மா சரீரம்*** - ஜீவர்களை நாராயணனுக்கு சரீரம் - என்றும் சொல்லப்படுகிறது.

# *போக்தா-போக்ய விளக்கம்* - பகவானே ஸர்வ போக்தா - உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய ப்ருஹ்ம ஸூத்ரம் ***லோகவத்து லீலா கைவல்யம்*** என்கிறது.

ஆக, பகவத் உறவு ஒழிக்க ஒழியாது ; இதை உணராத போது ***பொய் நின்ற ஞானம்*** என்பதாகிறது.

8. அநாதி மாயையாலே ஸுப்தனாய், அதாவது, அநாதியான ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற குணங்கள் கலந்த ப்ரக்ருதி என்கிற அசேதந வஸ்துவின் பரிமாணங்களாலான சரீரத்தை சம்சாரி ஜீவர்கள் பெற்று, அதன் விளைவாக விபரீத ஞானமுடையவனாய், அழுக்கடைந்திருக்கும் நிலைக்கு பற்பல சம்பந்தங்கள் காரணம் - அதாவது, பிறவிப் பிணிக்கு காரணம் பாப புண்ய ***கர்ம சம்பந்தம்*** என்றும், அதானல் ***ப்ராக்ருத சரீர சம்பந்தம்*** உண்டானது என்றும், அதன் விளைவாக ***நிரூபாதிக பகவத் சம்பந்தத்தை*** மறந்து, ***ஔபாதிக பந்து சம்பந்தத்தில்*** அமிழ்ந்து கிடக்கும் நிலை, சாம்சாரிக பந்த ஹேது என்றபடி.

# ஸ்வாமி தேசிகனால் அருளப்பட்ட ***ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில்***, சம்சாரி ஜீவர்கள், இந்நிலையில் இருந்து விடுபட விளக்கமளிக்கப் பட்டுள்ளது:

***மணிவர இவ சௌரே: நருத்ய ஹ்ருத்யோபி ஜீவஹ. கலுஷ மதிரவிந்தன் கிங்கரத்வாதிராஜ்யம். விதி பரிணதி பேதாத் வீக்ஷி தஸ்தேன காலே குரு பரிஷதுபஞும் ப்ராப்ய கோபாயதே ஸ்வம்***

அதாவது, ஸகல ஜீவர்களும் எப்போதும் பரமபதத்தில், துக்கமற்ற ஸுகங்களோடு, நித்யர் (சம்சார சம்பந்தம் அற்றவர்கள்) முக்தர்களை (சம்சார சம்பந்தம் இருந்து பிறகு பரமபதம் அடைந்தவர்கள்) போல் ஸதா இருக்கக்கூடிய தன்மை கொண்டவர்கள். ஆயினும், அநாதி பாப புண்ய கர்ம சம்பந்தத்தால், சம்சாரி ஜீவர்களின், உண்மை நிலையை அறியாமல் துக்கத்திற்கு காரணமான இந்த ப்ரபஞ்சத்தில் உழல்கிறார்கள். பிறகு, தன்னுடைய ஒரு புண்ய விசேஷத்தினால், ஒரு ஸதாசார்யனை அடைந்து சம்சாரத்தில் உள்ள மீள முடியாத துக்கங்களை உணர்ந்து, தனக்கு இயற்கையாக கிடைக்க பெற வேண்டிய ஸுக ரூபமான மோக்ஷ அநுபவத்தை அறிந்து, அதற்கான ஒரு சரணாகதி அநுஷ்டானத்தை செய்து, உயர்ந்த பலனை அடைகிறார்கள்.

# இந்த சம்சாரி ஜீவர்களின், உண்மை நிலையை, பராசர மஹரிஷி,

*பூமான்ன தேவோ ந நர: ந பசு: ந ச பாதப: சரீர ஆக்ருதி பேதாஸ்து பூபைதே கர்ம யோனய:*

அருளினார். அதாவது, இந்த ஜீவர்கள், தேவன் அல்லன், மனுயன் அல்லன், த்ரியக் (மிருகம்,பறவை போன்றவை) அல்லன், தாவர்கள் அல்லன். ஆனால், இந்த சம்சாரி ஜீவர்களுக்கு ஏற்படும் சரீர சம்பந்தம் கொண்டு தன்னை அதுவாக நினைத்து ப்ரமிக்கிறான். இந்த ப்ராக்ருத சரீரங்கள் அனைத்தும், கர்ம அநுகுணமாக, வந்தவைகளே.

# ஸ்வாமி நம்மாழ்வார் திருவாய்மொழியில்,

*முந்நீர் ஞாலம் படைத்த எம் முகில் வண்ணனே அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன் வெந்நாள் நோய் வீய வினைகளை வேர் அறப் பாய்ந்து எந்நாள் யான் உன்னை இனி வந்து கூடுவேன்*

என அருளினார் ; அதாவது, நான் எப்போதோ செய்த வினைகளுக்காக, நீ எனக்கு இந்த உடலைக் கொடுத்து விட்டாய். அது என்னை எந்தப் பக்கம் இழுத்துச் செல்கிறதோ அந்தப் பக்கம் நான் சென்று சிரமப்படுகிறேன். பிறவி என்கிற இந்தத் துன்பம் எப்போது தீரும்? என்னுடைய வினைகள் வேரோடு அழிவது என்றைக்கு? யான் உன் பாதத்தில் சேரும் நாள் எப்போது வரும்? என வருந்துகிறார்.

# மேலும் ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில்,

*கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐங்கருவி கண்ட இன்பம், தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம், ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் கண்டசதிர் கண்டொழிந்தேன் அடைந்தேனுன் திருவடியே*

என அருளினார். அதாவது, அழகிய கைகளையுடையளாகிய பெரிய பிராட்டியாரும் அவளுடைய நாயகனான நீயுமே களித்து வாழ்கிற அழகிய இருப்பை இப்போது காணப்பெற்று காண்பது கேட்பது தொடுவது மோருவது உட்கொள்ளுவதாகிற வேலைகளைச் செய்துகொண்டு அலைகின்ற பஞ்சேந்திரியங்களுக்கும் வாய்த்த விஷய சுகங்களையும் கைவல்ய ஸுகத்தையும் தவிர்க்கப் பெற்றேன்; உனது திருவடிகளை அடையவும் பெற்றேன்.

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

******

28.3.2023
செவ்வாய் கிழமை

*சிந்திக்கும் திசைக்கும் தேறும் கை கூப்பும்  - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. இந்த ஜீவர்கள், அநாதி மாயையாலே ஸுப்தனாய், அதாவது,  ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற குணங்கள் கலந்த ப்ரக்ருதி என்கிற அசேதன வஸ்துவின் பரிணாமங்களான சரீரத்தை பெற்று, அதன் காரணமாக விபரீத ஞானமுடையவனாய், இருக்கும் நிலையை, பராசர மஹரிஷி, விளக்குகிறார்.

***அநேக ஜன்ம ஸாஹஸ்ரீம் ஸம்சார பதவீம் வ்ரஜன். மோஹ ஸ்ரமம் ப்ர்யாதோஸௌ வாஸனா ரேணு குண்டித:***

ஆக, சரீர சம்பந்தத்தினால் சம்சார ஜீவர்களின் எண்ணங்களும் செயல்களும் வேறுபடுகின்றன. சாஸ்த்திரத்தை ஏற்பதும் ஏற்காததும், சாஸ்த்திரத்தை தெளிவாக அறிவதும் தவறாக அறிவதும், சாஸ்த்திர நெறிகளை பின்பற்றுவதும் பின்பற்றாமல் இருப்பதும், ஹேயமான  முக்குணங்களாலான சரீர சம்பந்தத்தினாலேயே!

***க்ருஷிவலம் தினௌதி*** என்ற கணக்கிலே, விவசாயி பயிரிட்டு அறுவடைக்கு காத்திருப்பது போல, எம்பெருமான் சரீரத்தையும் சாஸ்த்திரத்தையும் சம்சாரி ஜீவர்களுக்கு கொடுத்து அவர்கள் மோக்ஷம் பெற சரணாகதி அநுஷ்டிக்க காத்திருக்கிறான் என்று ஸ்வாமி தேசிகன் தயாசதகத்தில் அருளினார்.

# ஸ்வாமி தேசிகன் ***ஸித்தோபாய சோதனாதிகாரத்தில்***, ஸாத்யோபாய அநுஷ்டான நோக்கை அருளியுள்ளார்;

***பக்தி ப்ரபத்தி ப்ரமுகம் தத் வசீகார காரணம் தத் பலார்த்தி ஸாத்யத்வாத் ஸாத்யோபாயம் விதுர்புத:***

அதாவது,

ஸித்தோபாயனான எம்பெருமானை வசீகரிக்க பக்தி, ப்ரபத்தி காரணமாகிறது; அந்த ஸாத்யோபாயம் பலனை அபேக்ஷிப்பவர்களால் செய்ய வேண்டுவதாகிறது.

# ***ப்ரபத்தி*** பற்றி தெளிவாக ஸ்வாமி தேசிகன் ***சரமஸ்லோகாதிகாரத்தில்*** அருளியுள்ளார் :

***சுதுஷ்கரேண ஷோசேத்யோ யேன யேன இஷ்ட ஹேதுநா ஸ ஸ தஸ்யாம் அஹம் ஏவ இதி சரமஸ்லோக ஸங்க்ரஹ:***

அதாவது,

எவன் தனக்கான இஷ்ட பலனுக்கு ஒரு விதிக்ப் பட்ட சாதன உபாயத்தை செய்ய முடியாமல் வருந்துகிறானோ, அவனுக்கு அந்த சாதனம் நானே என்பதே சரமஸ்லோகத்தில் திரண்ட பொருள்.

# பகவத் ராமானுஜரும் சரணாகதி கத்யத்தில்,

***அன்ருதம் நோக்த பூர்வம்  மே ந ச வக்ஷ்யே கதாசன ராமோ த்விர் -நாபி பாஷதே***

***ஸக்ருதேவ  ப்ரபந்நாய தவாஸ் மீதி ச யாசதே அபயம் ஸர்வ பூதேப் யோததமாம் ஏதத் வ்ரதம்  மம***

என அருளினார்.

அதாவது, இது பெரிய பெருமாள் வரி :

நான் கூறியதில் பொய் கிடையாது ; அதற்கு சான்றாக ஸ்ரீராமாவதாரத்தில் தான் அருளியதை உதாஹரிக்கிறார். அதாவது 'என்னிடம் ஒரு முறை, 'நான் உன்னுடையவன்' என்று ஒருவன் சரண் புகுந்துவிட்டால், அவனை காத்தருள்வது ***ஸர்வ பூதேப்யோ ததாமி*** எனது வ்ரதம்'

# இதையே, ஸர்வேஸ்வரனான கண்ணன் சரமஸ்லோகமாக பகவத் கீதையில் (18-66) அருளிவதாவது,

***ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:***

அதாவது,

இஷ்ட பலனுக்காக, ஒரு விதிக்ப் பட்ட சாதன உபாயத்தை செய்ய முடியாமல் வருந்துகிற நீ, அந்த சாதன உபாயத்தை விட்டு என் ஒருவனையே சரணமாகப் பற்று; அந்த பலனுக்கு தடையான அனைத்து பாபங்களில் இருந்தும் உன்னை விடுவிக்கிறேன்.

என்பது சரமஸ்லோகத்திற்கான பதத்திற்கு பொருளாகிறது.

# வராஹ சரமஸ்லோகத்தில், ஸர்வேஸ்வரன் பூமிப் பிராட்டிக்கு வாக்களிக்கிறான்.

***ஸ்திதே மனஸி ஸு ஸ் வதே சரீரே சதி யோ நர தாது சாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விஸ்வ ரூபஞ்ச மா மஜம் ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட பாஷாண சந்நிபம் அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்***

அதாவது,

'எவனொருவன், தனது உடல் நல்ல நிலையில் இருக்கும் போது, என்னிடம் மோக்ஷத்திற்கான சரணாகதியை அநுஷ்டித்து இருக்கின்றானோ, அவனது கடைசி காலத்தில், மூச்சு, பேச்சின்றி, நாக்கு தடுமாறும் நிலையில், மரக்கட்டையாக இருக்கும்போது, என்னை அவன் நினைக்கத்தேவை இல்லை. நானே அவனுக்கு என் நினைவை உண்டு பண்ணி வழி நடத்துவேன்'

என்றான் ஸர்வேஸ்வரன். இது எம்பெருமான் அளித்த உறுதி மொழி.

# இவ்விஷயத்தில், விபீஷண சரணாகதி ப்ரகரணத்தில், ஸ்ரீராமனும்

***ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்திதச யாசதே. அபயம் ஸர்வ பூதேப்ய: ததாமி ஏதத் வ்ரதம் மம***

என்று ஒரு முறை சரணாகதி செய்தவனை தான் ரக்ஷிக்கும் வ்ரதம் உடையவன் என்றான்.

2. ***பரமபத சோபானத்தில்*** ஸ்வாமி தேசிகன், ஸ்தூல சரீரம் கொண்ட சம்சாரி ஜீவன் மோக்ஷம் அடையும் படிகளை விளக்குகிறார்.

# ***விவேக பர்வம்* -** பர அவர தத்துவங்களை அததற்கான லக்ஷணங்களால் புரிந்து கொள்வது ; இவ்விஷயத்தையே, கத்யத்தில், ஸ்ரீராமானுஜர்

***ஸ்வாதீன த்ரிவித சேதநா அசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ருவ்ருத்தி பேதம்***

என்று ***ஸ்வரூப நிரூபக தர்மங்களையும்*** மற்றும் ***நிரூபித ஸ்வரூப விசேஷணங்களையும்*** கொண்டு, அருளியிருக்கிறார்.

'மூன்று வித சேதநர்கள்' மற்றும் 'மூன்று வித அசேதந வஸ்துக்களின்' இருப்பு, வாழ்வு மற்றும் செயல்களை தன் ஆளுகைக்கு கீழ் கொண்டுள்ள 'சுதந்தரனான ஸர்வேஸ்வரன்', என அருளியுள்ளார்.

அதாவது, சேதநா அசேதந விசிஷ்ட ப்ருஹ்மம், ப்ரளய காலத்தில், சூக்ஷ்ம சேதந அசேதந விசிஷ்ட ப்ருஹ்ம மாக இருந்து, ஸ்ருஷ்டி காலத்தில், ஸ்தூல சேதநா அசேதந ப்ருஹ்மமாக மாறுகிறது, என்றபடி.

# *நிர்வேத பர்வம்* - தத்வ விஷய ஞானம் பெற்றவுடன் மனம் தளர்ந்து போவது ; இதையே ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில்,

*முந்நீர் ஞாலம் படைத்த எம் முகில் வண்ணனே அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன் வெந்நாள் நோய் வீய வினைகளை வேர் அறப் பாய்ந்து எந்நாள் யான் உன்னை இனி வந்து கூடுவேன்*

அதாவது,

நான் எப்போதோ செய்த வினைகளுக்காக, நீ எனக்கு இந்த உடலைக் கொடுத்து விட்டாய். அது என்னை எந்தப் பக்கம் இழுத்துச் செல்கிறதோ அந்தப் பக்கம் நான் சென்று சிரமப்படுகிறேன். பிறவி என்கிற இந்தத் துன்பம் எப்போது தீரும்? என்னுடைய வினைகள் வேரோடு அழிவதுஎன்றைக்கு? யான் உன் பாதத்தில் சேரும் நாள் எப்போது வரும்? என வருந்துகிறார்.

# *விரக்தி பர்வம்* - சார தமத்தை உணர்ந்து உலக சுகங்களில் ஆசையைத் துறப்பது ; சம்சார பந்தத்தை விளக்கும் போது, ஸ்வாமி தேசிகன் *உபோத்காதாதிகாரத்தில்*

*கர்ம அவித்யாதி சக்ரே ப்ரதிபுருஷம் இஹ அநாதி சித்ர ப்ரவாஹே தத் தத் காலே விபக்தி: பவதி ஹி விவிதா ஸர்வ ஸித்தாந்த ஸித்தா*

என அருளினார். அதாவது, அந்தந்த உரிய காலங்களில், அநாதியாக கர்ம-அவித்யா-வாசனை-ருசி-ப்ரக்ருதி சம்பந்தம் என்கிற சக்ரத்தில், ஒரு வட்ட வடிவத்தில், சுழன்று இருக்கும் சம்சாரி ஜீவன்களுக்கு, அவரவர்கள் கர்ம வினைக்கு ஏற்ப பலன்கள் பலவாறாக வருகின்றன. இந்த சம்சாரி ஜீவர்களின். கர்ம அநுகுணமான பிறப்புக்களுக்கு, தொடர்பு உண்டு என்பது ப்ரமாண ஸித்தம்.

*அவித்யை* - சரீரத்தையே ஆத்மாவாகவும், ஆத்மாவை சுதந்திரனாகவும் நினைத்தல் போன்ற உண்மைக்கு மாறான எண்ணங்கள்.

*கர்மம்* - அவித்ய்யையால் ஜீவன் செய்யும் சாஸ்த்திரத்தை மீறிய செயல்கள்.

*வாஸனை* - அவித்யா மற்றும் கர்மம் காரணமாக ஜீவனுக்கு உண்டாகும் ஸம்ஸ்காரம் (தன்மை).

*ருசி* - வாஸனைக்கு ஏற்ப உண்டாகும் செயலில் விருப்பம்.

*ப்ரக்ருதி சம்பந்தம்* - மேலுள்ள நான்கு காரணங்களினால் உண்டாகும் ப்ராக்குத சரீர சம்பந்தம்.

இந்த சரீர சம்பத்தினால் மீண்டும் அவித்யை, கர்மம், வாஸனை, ருசி மற்றும் ப்ரக்ருதி சம்பந்தம். அதுவே மீண்டும் மீண்டும் ஏற்படும் பிறவி. இதையே பிறவிப் பிணி என்கிறோம். இச்சுழலே மோக்ஷ பலனுக்கு தடையாகிறது.

# *பீதி பர்வம்* - செய்த பாவங்களின் பயனாக வர இருக்கும் நரகாதிகளை எண்ணி அஞ்சுதல் ; கர்ம மீமாம்ஸை வரி :

*சாஸ்த்திர பலம் ப்ரயோக்தரி*

அதாவது, சாஸ்த்திரம் விதித்த கர்மாக்களை அநுஷ்டிப்பவனுக்கே அதற்காக சொல்லப் படுகிற பாப புண்ய பலன்கள் ஸித்திக்கும். அதாவது, சாஸத்திர விதிகளை மீறும் போது பாபங்களும், சாஸ்த்திர விதிகளை பின்பற்றும் போது புண்யங்களும் ஸித்திக்கும்

*ந புக்தம் க்ஷீயதே கர்ம கல்ப கோடி ஸதைரபி*

என்கிற சாஸ்த்திர விதிப்படி, கல்ப கோடி காலங்களானாலும், பாப புண்ய கர்மாக்கள் அநுபவியாமல் அழியாது.

# *ப்ரஸாதந பர்வம்* - மோக்ஷத்தை அடைய, சாஸ்த்திரம் விதித்த, உபாயத்தைச் செய்தல் ; அஹிர் புத்ந்ய ஸம்ஹிதையில்,

*பக்த்யா பரமயா வாபி ப்ரபத்யாவா மஹாமதே I ப்ராப்யோஹம் ந அந்யதா ப்ராப்ய: மம கைங்கர்ய லிப்ஸுபி:*

என்று ஸ்ரீயப்பதியான எம்பெருமான் தானே மிகத் தெளிவாக அருளிச் செய்தான் ; அதாவது, பரமபதத்தில் என்னை அடைந்து எனக்கு கைங்கர்யம் செய்ய விரும்புவர்கள் பக்தி யோகத்தை செய்தாவது அல்லது சரணாகதியை செய்தாவது என்னை அடைய வேண்டும். இந்த இரண்டு வழிகளை தவிர வேறு வழியால் என்னை அடைய முடியாது.

# *உத்க்ரமண பர்வம்* - சரீரத்திலிருந்து ஜீவன் வெளியேறுதல் ; ஸ்வாமி தேசிகன் *நிர்யாணாதிகாரத்தில்*

*மனஸி கரண க்ராமம் பிராணே புன புருஷே ச தம் ஜடிதி கடயன் பூதேஷ்வேநம் பரே ச தமாத்மநி ஸ்வவித் அவிதுஷோ இத்தம் சாதாரணே சரணேர்முகை நயதி பரதோ நாடீபேதை யதோசிதம் ஈஸ்வர*

என அருளினார் ; அதாவது, மனத்தில் இந்த்ரியங்களையும், மனத்தை ப்ராணனிடமும், ப்ராணனை ஜீவனிடமும், ஜீவனை பஞ்சபூதங்களிலும், பஞ்ச பூதங்களுடன் கூடிய ஜீவனை (அதாவது ஸூக்ஷ்ம சரீரத்தோடு) தன்னுடனும் எம்பெருமான் விரைவாக சேர்த்துக் கொள்கிறான். ஆக, ஜீவன் வெளிக் கிளம்புதல் என்பது பண்டிதன் முதல் பாமரன் வரை அனைவருக்கும் பொதுவாகவே உள்ளன. ஆனால் அவரவர்களுக்கு ஏற்றபடி, அவர்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு ஏற்ப, அதாவது நரகம், ஸ்வர்கம், கைவல்யம், மீண்டும் பிறவி, பரமபதம் போன்றவைக்கு ஏற்ப எம்பெருமான் மேற்கொண்டு வழி நடத்துகிறான்.

# *அர்ச்சிராதி பர்வம்* - அர்சசிராதி மார்க்கத்தால் செல்லுதல் ; ஸ்வாமி தேசிகன், அர்ச்சிராதி மார்க்கத்தை,

*ஜ்வலந திவஸ ஜ்யோத்ஸ்நா பக்ஷ உத்தராயண வத்ஸரான் பவந தபந ப்ராலேயாம்ஷுன் க்ரமாதச்சிரத்யுதிம் ஜலதர பதிம் தேவாதீஷம் ப்ரஜாபதிம் ஆகத: தரதி விரஜாம் தூரே வாசஸ்தத பரமத்புதம்*

என விளக்குகிறார் ; அதாவது, அக்நி, பகல் பொழுதின் தேவதை, சுக்ல பக்ஷத்தின் தேவதை, உத்தராயணத்தின் தேவதை, ஸம்வத்ஸரத்தின் தேவதை ஆகியோர்களின் இருப்பிடத்தை ஒரு சரணாகதன் சரீரத்திலிருந்து கிளம்பிய பிறகு அடைகிறான்; அதற்கு மேல், வாயு தேவதை, சூரியன், சந்திரன் ஆகியவர்களை அடைகிறான் ; பின், மின்னல் , வருணன் , இந்திர, ப்ரஜாபதி ஆகியவர்களை அடைகிறான் ; அதன் பின்னர் விரஜா நதியை கடக்கிறான் ; அதன் பின்னர் நடக்கவிருக்கும் வியப்பான செயல்கள் வார்த்தைக்கும் மனத்திற்கும் எட்டாதவைகளாகும்.

# *திவ்யதேச ப்ராப்தி பர்வம்* - ஸ்ரீவைகுந்த தேசத்தைச் சேர்தல் ; ஸ்வாமி தேசிகன், பரமபத ப்ராப்தியை,

*விதமஸி பதே லக்ஷ்மீகாந்தம் விசித்திர விபூதிகம். ஸசிவ கமித: ஸம்பத்யாவிர்பவதி ஸஹஜ ஆக்ருதி: ஸ்புடதத் அப்ருதக் ஸித்தி: ஸித்யத் குணாஷ்டக தத்பலோ. பஜதி பரமம் ஸாம்யம் போகே நிவ்ருதி கதோஜ்ஜிதம்*

என விளக்குகிறார் ; அதாவது, ஸாலோக்ய, ஸாரூப்ய, ஸாமீப்ய நிலைகள் ஏற்படுகிறது.

இந்த ப்ரக்ருதிக்கு அப்பால் உள்ள ஸ்ரீவைகுண்டத்தில், வியக்க வைக்கும் இரண்டு விபூதிகைள (நித்ய விபூதி மற்றும் லீலா விபூதி) தன் வசத்தில் கொண்டவனாகிய, மஹாலக்ஷ்மி பிராட்டியின் நாயகனான, ஸ்ரீமந் நாராயணன் நித்ய வாஸம் செய்து கொண்டு உள்ளான் . சரணாகதன், ஆதிவாஹிகர்களால் வழி நடத்தப்பட்டு, அவனை அடைகிறான். அப்போது அந்த ஜீவனுக்கு உண்டான இயற்கையான தன்மைகள் வெளிப்படுகின்றன. அதாவது, பாப புண்ய கர்ம ஸம்பந்தத்தினால் ஏற்பட்ட சுருங்கிய ஞானம் அகன்று விடுகிறது. அனைத்தையும், அனைத்து கலத்திலும் உள்ளது உள்ள படி அறியும் தெளிவான ஞானம் உண்டாகிறது. தான் எம்பெருமானை விட்டு ஒரு போதும் அகல முடியாதவன் என உணர்கிறான். பாபம் அற்ற தன்மை போன்ற ஜீவனுக்கு உண்டான இயல்பான எட்டு நற்குணங்களை கிடைக்கப் பெறுகிறான். எம்பெருமானுக்கு ஸமமான ஸுக அநுபவங்களைப் பெறுகிறான். கர்மத்தின் அடிப்படையில் ப்ராக்ருத லோகத்திற்கு வரமுடியாத நிலையையும் அடைகிறான்.

# *பராப்த்தி பர்வம்* - கைங்கரியங்களைச் செய்துகொண்டு அந்த அநுபவத்திலேயே மூழ்கி இருப்பது ; ஜிதந்தே ஸ்தோத்தரத்தில்,

***மோக்ஷம் ஸாலோக்ய ஸாரூப்யம் ப்ரார்தயே ந கதாசந இச்சாம்யஹம் மஹாபாஹோ ஸாயுஜ்யம் தவ ஸுவ்ரத***

என்று சொல்லப் படுகிறது.

அதாவது, ஸாலோக்ய ஸாரூப்யம் போன்றவைகள் மோக்ஷமாகாது. ஸாயுஜ்யத்தையே மோக்ஷமாக ப்ரார்த்திக்கிறேன் என்று இந்த ஸ்தோத்தரத்தில் கூறப்படுகிறது.

3. ஸ்வாமி தேசிகனின் ***ஸ்ரீ பரம பத சோபானம்*** :

***மண்ணுலகில் மயல் தீர்ந்து, மனம் ததும்பி, மன்னாத பயன் இகழ்ந்து, மாலே யன்றிக் கண் இலது என்று அஞ்சி, அவன் கழலே பூண்டு, கடும் சிறை போய்க், கரை ஏறும் கதியே சென்று, விண்ணுலகில் வியப்பு எல்லாம் விளங்கக் கண்டு, விண்ணவர் தம் குழாங்களுடன் வேதம் பாடிப் பண்ணுலகில் படியாத விசையால் பாடும் பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே***

ஒன்பது படிகளையும் ஒரு சேர அருளிச் செய்கிறார்

***மண்ணுலகில் மயல் தீர்ந்து*** - இப்புவியில் அக்ஞானம் நீங்கி - ***விவேக பர்வம்*** - பர அவர தத்துவங்களை அததற்கான லக்ஷணங்களால் புரிந்து கொள்வது

***மனம் ததும்பி*** - மனத்தில் சோகமுற்று - ***நிர்வேத பர்வம்*** - தத்வ விஷய ஞானம் பெற்றவுடன் மனம் தளர்ந்து போவது

***மன்னாத பயன் இகழ்ந்து*** - ப்ராக்ருத பலனில் இச்சையை விடுத்து - ***விரக்தி பர்வம்*** - சார தமத்தை உணர்ந்து உலக சுகங்களில் ஆசையைத் துறப்பது

***மாலே யன்றிக் கண் இலது என்று அஞ்சி*** - துஷ்க்ருத்தால் வர இருக்கும் நரகாதிகளால் பயமுற்று - ***பீதி பர்வம்*** - செய்த பாவங்களின் பயனாக வர இருக்கும் நரகாதிகளை எண்ணி அஞ்சுதல்

***அவன் கழலே பூண்டு*** - ஸாத்யோபாயத்தை அநுஷ்டித்து - ***ப்ரஸாதன பர்வம்*** - மோக்ஷத்தை அடைய, சாஸ்த்திரம் விதித்த, உபாயத்தைச் செய்தல்

***கடும் சிறை போய்க்*** - சரீரமாகிற சிறையை விடுவித்து - ***உத்க்ரமண பர்வம்*** - சரீரத்திலிருந்து ஜீவன் வெளியேறுதல்

*கரை ஏறும் கதியே சென்று* - சம்சாரத்திலிருந்து ஸ்ரீவைகுண்ட பாதையில் சென்று - *அர்ச்சிராதி பர்வம்* - அர்சசிராதி மார்க்கத்தால் செல்லுதல்

*விண்ணுலகில் வியப்பு எல்லாம் விளங்கக் கண்டு* - நித்ய விபூதியில் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத விஷயங்களை தெளிவாக கண்டு - *திவ்ய தேச ப்ராப்தி பர்வம்* - ஸ்ரீவைகுந்த தேசத்தைச் சேர்தல்

*விண்ணவர் தம் குழாங்களுடன் வேதம் பாடிப் பண்ணுலகில் படியாத விசையால் பாடும் பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே* -நித்ய முக்தர்களோடு சேர்ந்து பகவத் கைங்கர்யங்களை செய்து அநுபவிப்போம் *பராப்தி பர்வம்* - கைங்கரியங்களைச் செய்துகொண்டு அந்த அநுபவத்திலேயே மூழ்கி இருப்பது

4. ஆக, ஒரு முமுக்ஷுவானவன்,

*பரமாத்மனி யோ ரக்த: விரக்த: அபரமாத்மனி ஸர்வேஷணா விநிர்முக்த: ஸ பைக்ஷம் போக்தும் அர்ஹதி*

என்கிற ஸ்ம்ருதி ப்ரமாணத்தின் படி,

எவன் உலக அநுபவங்களில் உள்ள தோஷங்களை உணர்ந்து, பரமனை அடைவதையே முக்கிய ப்ரயோஜனமாகக் கொண்டு முமுக்ஷுவாக இருக்கிறானோ, அவன் கர்ம அநுகுணமாக பிக்ஷை எடுத்து புஜிக்க வேண்டிய நிலையிலும் கலங்க மாட்டான்.

# ஸ்வாமி தேசிகனின் **பரமபத சோபாந** பாசுரம்.

*அறிவுருவானவை அனைத்தும் அறிவார் ஏனும் - அரும் கலைகள் கற்று உரைக்க வல்லார் ஏனும் - தரும வழி அழியாமல் காப்பார் ஏனும் - தனி மறையின் தாத் பர்யம் தருவார் ஏனும் - இரு வினையின் ஒழுக்கத்தால் ஏவல் ஓராது இங்கே - நாம் சிறை இருந்த வீனம் தீர்க்கும் திரு மகளார் பிரியாத தேவன் திண்ணம் தேறாதார் திண் படியில் ஏறாதாரே*

அதாவது,

*அரு உரு ஆனவை அனைத்தும் அறிவாரேனும்* - சேதன அசேதன விஷயத்தை விசதமாக அறிந்திருந்தாலும்

*அரும் கலைகள் கற்று உரைக்க வல்லாரேனும்* - ஸகல ஞானத்தையும் பெற்று மற்றவர்க்கு உரைக்க வல்லவர்களாயினும்

*தரும வழி அழியாமல் காப்பாரேனும்* - தர்ம விஷயங்களை அழியாமல் பாதுகாத்து நிற்பவனாயினும்

*தனி மறையின் தாத்பரியம் தருவாரேனும்* - ஒப்பற்ற வேத சராத்தை பிறர்க்கு உபதேசிப்பனாக இருந்தாலும்

*இரு வினையின் ஒழுக்கத்தால் ஏவல் ஓராது* - பாப புண்ய கர்ம விடுதலைக்கு நாம் செய்ய வேண்டிய க்ருத்யத்தை செய்து

*இங்கே நாம் சிறையிருந்த ஈனம் தீர்க்கும்* - சம்சார பந்தமாகிய சிறையை போக்குகின்ற

*திருமகளார் பிரியாத தேவன் திண்ணம் தேறாதார்* - பிராட்டி ஸமேதனான எம்பெருமானின் திருவுள்ளத்தை அறியாத போது

*திண் படியில் ஏறதாரே* - அர்ச்சிராதி மார்க்கத்தில் சென்று மோக்ஷம் பெற ஸாத்யமில்லை

5. இவ்விஷயத்தில், ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய்மொழி (7-2-5) விளக்குவதாவது :

***சிந்திக்கும் திசைக்கும் தேறும் கை கூப்பும் திரு அரங்கத்து உள்ளாய் என்னும் வந்திக்கும் ஆங்கே மழைக் கண் நீர் மல்க வந்திடாய் என்று என்றே மயங்கும் அந்தி போது அவுணன் உடல் இடந்தானே அலை கடல் கடைந்த ஆரமுதே, சந்தித்து உன் சரணமே சார்வதே வலித்த தையலை மையல் செய்தானே***

# ***சிந்திக்கும்*** - தத்வ விஷய ஞானம் பெற்றவுடன் மனம் தெளிந்து

# ***திசைக்கும்*** - உலக சுகங்களில் ஆசையைத் துறப்பது

# ***தேறும்*** - செய்த பாவங்களின் பயனாக வர இருக்கும் நரகாதிகளை எண்ணி சார தமத்தை உணர்ந்து

# ***கை கூப்பும்*** - மோக்ஷத்தை அடைய, சாஸ்த்திரம் விதித்த, சரணாகதி உபாயத்தை அநுஷ்டித்து

# ***திரு அரங்கத்து உள்ளாய் என்னும் வந்திக்கும்*** - அதனை ஏற்கும் சரண்யனான திவ்யதம்பதிகளை வணங்கி

# ***ஆங்கே மழைக் கண் நீர் மல்க வந்திடாய் என்று என்றே மயங்கும்*** - அவ்ளவிலே கண்ணீர் தாரை தாரையாகப் பெருகநின்று

# ***அந்தி போது அவுணன் உடல் இடந்தானே அலை கடல் கடைந்த ஆரமுதே*** - ஒரு பக்தனை காக்க ஒரு மாலைப் பொழுதிலே ந்ருஸிம்ஹ அவதாரம் செய்து ஹரண்யனை சம்ஹரித்த ஆராவமுதமே!

# ***சந்தித்து உன் சரணமே சார்வதே வலித்த தையலை மையல் செய்தானே*** - பகவத் சம்பந்தத்தை உணர்ந்து, உன் திருவடிகளைப் பற்றுவதாகிற சாஸ்த்ரீய லகு உபாயமே, ஸித்தோபாயனை வரீகரிக்க விரகாகிறது என சம்சார பந்த நிவர்த்திக்கு மதியை அளித்தவனே

6. ***உன் சரணமே சார்வதே வலித்த தையலை மையல் செய்தானே*** என்கிற பாசுர பதங்களைக் கொண்டு, ‘பரதந்த்ர ஜீவர்களுக்கு சேஷத்வ அநுஸந்தானம்’ அறிவுறுத்தப் படுகிறது என்று விளக்கமளித்து, பகவத் ராமானுஜ க்ரந்த நோக்கான, வேத மார்க்கமான, பூர்வாசார்யர்கள் வழியான, மோக்ஷ உபாயத்துக்கு ப்ரதிபாத்யனாக திவ்ய தம்பதிகளிடம் அநுஷ்டிக்க வேண்டிய சாஸ்த்திரீயமான ஸாத்யோபாயத்தை பத்த தசையில் அநுஷ்டிக்க வேண்டுவதாக ஏற்காமல், சேஷத்வ அநுஸந்தானமே ஸர்வேஸ்வரன் மோக்ஷமளிக்க போதுமானதாக நிர்வஹிப்பர், ஸித்தாந்த பூர்வபக்ஷிகள். ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில், பூர்வாசார்ய பக்ஷத்தையும், அதன் விரோத பக்ஷத்தையும் ப்ரமாண பூர்வகமாக கண்டித்தும் விளக்கி அருளியுள்ளார்.

பராதீன பரார்த்த கர்த்ருத்வ போக்த்ருத்வத்தை உடைய ஜீவனுக்கு, ஸ்வ ரக்ஷணார்த்த வ்யாபாரம் அடுக்குமோ என ஸித்தாந்த பூர்பக்ஷிகள் சந்தேஹிப்பர்.

அதாவது, பிள்ளைலோகாசார்யர் அருளிய ஸ்ரீவசனபூஷணம் - எண் 71 :

***ஸ்வ யத்ன நிவ்ருத்தி பாரதந்த்ரிய பலம்; ஸ்வ ப்ரயோஜன நிவ்ருத்தி சேஷத்வ பலம். அதாவது, பாரதந்த்ரிய ஸ்வரூபத்தை அநுஸந்தித்தால் எம்பெருமானைப் பெறுவதற்கு தான் ஒரு யத்னம் பண்ணுகையாகிற ஸ்வ யத்னம் குலையும். சேஷத்வத்தை அநுஸந்தித்தால் ஸ்வ ப்ரயோஜன ருசி குலையும்***

இது விஷயமாக, ப்ரமாண பலத்தை காட்ட முற்படுவர் பூர்வபக்ஷிகள் :

# *ஸோஜ்ஜீவனேச்சா யதிதே ஸ்வ ஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி, ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர*

என மஹரிஷி விஷ்ணு தர்மத்தில் அருளியுள்ளார்; அதாவது ஆத்ம உஜ்ஜீவனத்திற்காக எப்போதும் ஹரி ஸ்மரணமே வேண்டும்.

# *ஸ்வயம் ம்ருத் பிண்ட பூதஸ்ய பரதந்த்ரஸ்ய தேஹிந: ஸ்வ ரக்ஷணேபி அஸக்தஸ்ய கோ ஹேது பர ரக்ஷணே*

என்கிறது இதிஹாஸ ஸமுச்சயம்; அதாவது மண் கட்டிபோல் பரதந்தரனான ஜீவன் தன் ரக்ஷணத்திற்கான அநுஷ்டானம் செய்யத் தகாதவன்.

# *ப்ரபத்தி: விவாஸ:, ஸக்ருத்ப்ரார்தநா மாத்ரேண அபேக்ஷிதம்  தாஸ்யதீதி, விஸ்வாஸ பூர்வகம் ப்ரார்தநமிதியாவத்*

என பகவத் ராமானுஜர் அருளியுள்ளார்; அதாவது எம்பெருமானிடம் மஹாவிச்வசமே ப்ரபத்தி.

# *யே நாதவந்தோ ஹி பவந்தி லோகே, தே நாத்மகர்மாபி சமார பந்தே, தேஷாம் ஹி கார்யேஷூ பவந்தி நாதா, சைப்யாதயோ ராம யதா யயாதே*

என ஐந்தாவது வேதமாக போற்றப் படும் மஹாபாரத வரி உள்ளது; அதாவது, உலகில் எவர்களுக்கெல்லாம் நாதன் இருக்கிறானோ, அவர்கள் தன்னை ரக்ஷித்துக் கொள்ளும் காரியத்தை செய்வதில்லை.

# மேலும், ஜீவ ஸ்வரூபத்தைக் காட்டும் திருவஷ்டாக்ஷரத்தில், ***நம:*** என்னும் பத அர்த்தத்தைக் காணும் போது,  ***ந மம ஸ்வாதந்த்ரியம்* -** சேஷனான ஜீவர்கள் ஸ்வதந்த்ரமாக செயல் புரியும் தன்மை அற்றவர்கள்.

ஆக, ***ஸ்வ ரக்ஷணார்த்த வ்யாபாரம்*** ஜீவ கர்தவ்யம் அன்று என்பது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதம் ; வேத மார்க்கமான பகவத் ராமானுஜரால் ஶ்ரீபாஷ்ய கத்யாதிகளில் சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை விளக்கி இருக்க, ஸாத்யோபாயத்தை நிஷேதித்து விளக்குவது, பூர்வபக்ஷிகளின் ஸம்ப்ரதாய விரோத நோக்கம். அசாஸ்த்ரீயம்.

7. ஸ்வாமி தேசிகன், ஶ்ரீராமானுஜ ஸித்தாந்த ரீதியாக, சம்சாரி ஜீவர்கள் ***பக்தி யோகமோ*** அல்லது ***சரணாகதி அநுஷ்டானமோ*** மோக்ஷம் பெறுவதற்காக நிச்சியம் செய்து போக வேண்டும் என தெளிவாக விளக்குகிறார், ஏன் ஏன்றால் பற்பல சாஸ்த்திரங்கள் அவ்வாறு கூறுவதினால்.

# *ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:*

என்கிறது  பிரகதாரண்யக உபநிஷத். அதாவது மோக்ஷமடைய பரமாத்மாவை, தான் (அகக் கண்ணால்) பார்க்கப்பட வேண்டியது, (அகக் காதால்) கேட்கப்பட வேண்டியது, (உள்)மனதால் நினைக்கப்பட வேண்டியது, (இதய ஐக்கியத்துடன்) பக்தி யோகம் செய்ய வேண்டியது என்று கூறியது இந்த உபநிஷத் வாக்யம்.

# *யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம், யோவை வேதாம்ச ப்ரஹிணோதி தஸ்மை, தகும் ஹ  தேவம் ஆத்ம்புத்தி ப்ரகாசம் முமுக்ஷூர்வை சரணமஹம் ப்ரபத்யே*

என்கிறது  ஸ்வேதாசுதர உபநிஷத்.  அதாவது, எவன் நாபியிலிருந்து ப்ருஹ்மா உதித்தானோ, எவன் ப்ருஹ்மாவிற்கு வேதத்தை உபதேசித்தானோ, எவன் ஒருவன் சாஸ்த்திரங்களினால் ஆத்மாவையும், பரமாத்மாவையும் அறிவித்தானோ, அவனை மோக்ஷத்தில் விருப்பமுடையவர்கள் சரணமாக அடைய வேண்டும்.

# *கிம் புநர் ப்ராஹ்மணா புண்யா: பக்தா ராஜர்யஸ் ததா. அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்*

என்கிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (9-33). அதாவது, 'அர்ஜுனா ! நிரந்தரம் அற்றதாயும், துக்கமயமான இந்த உலக அநுபவத்தை விட்டு என்னை அடைவதற்காக என்னை குறித்து செயல்களை செய்.' என்று கண்ணன் இந்த ஸ்லோகத்தில் தெளிவு படுத்துகிறான்.

# *ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:*

என்கிறான் ஸர்வேஸ்வரனா ன கண்ணன் பகவத் கீதையில் (18-66) அதாவது, 'மோக்ஷ ஸாதனமான அனைத்து நிவ்ருத்தி தர்மங்களை யும் விட்டு என் ஒருவனையே சரணமாக பற்று. நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே' - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

# மேலும், உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளிய *ப்ருஹ்ம ஸூத்ரங்களும்* இதனை அறுதியிடுகின்றன. ஶ்ரீ பாஷ்யத்தில் *ஸாதனாத்யாயமே* அநுஷ்டானத்தோடு கூடிய மோக்ஷத்திற்கான வழி ! அதாவது,

*நாநா சப்தாதி பேதாத்*

பெயர் வேறுபட்டிருப்பதால், மோக்ஷத்தை அடைவிக்கிற ப்ருஹ்ம வித்யைகள் வெவ்வேறானவை, என்றும்,

*விகல்போ அவிஸிஷ்ட பலத்வாத்*

அனைத்து ப்ருஹ்ம வித்யைகளும் ஒரே மோக்ஷ பலனையே கொடுக்கும், போன்ற ப்ருஹ்ம ஸூத்ரங்களைக் கொண்டு, 32 ப்ருஹ்ம வித்யைகளில் இருக்கிற உபாஸனமோ அல்லது ந்யாஸ வித்யையோ (சரணாகதி அநுஷ்டானமோ) மோக்ஷத்திற்கு உபாயமாகிறது என தெளியலாம்.

# *தாவதார்த்தி ததா வாஞ்சா தவான் மோஹ ததா அஸுகம், யாவன் நயாதி சரணம் த்வாமஸேஷ அக நாசனம்*

என பராசர மஹரிஷி, ஶ்ரீவிஷ்ணு புராணத்தில், சரணாகதி அநுஷ்டானம் நான்கு வித (தர்ம, அர்த்த, காம, மோக்ஷ) பலன்களையும் அளிக்க வல்லது என விளக்குகிறார்.

# ஸ்வாமி தேசிகனின் *அதிகாரி விபாகதிகாரம்* வரிகள்:

*ப்ரபன்னாத் அந்யேஷாம் ந திஷதி முகுந்தோ நிஜபதம்*

*ப்ரபத்திக்கு அல்லது ஸர்வேஸ்வரன் பரம புருஷார்த்தம் கொடுக்க இரங்கான்*

அதாவது,

இப்படிப்பட்ட நிவ்ருத்தி தர்மத்திலே (மோக்ஷ பலனிலே) இச்சை கொண்ட அதிகாரிகள் இரு வகையாக சாஸ்த்திரங்கள் கூறுகின்றன:

*அத்வாரக ப்ரபத்தி நிஷ்டன்* (மோக்ஷத்திற்காக செய்யப்படும் சரணாகதி அநுஷ்டானம்)

மற்றும்

***ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டன்*** (மோக்ஷ பலனுக்கான பக்தி யோகம் தடைபடிமல் இருக்க செய்யப்படும் சரணாகதி)

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

29.3.2023
புதன் கிழமை

***மாதவன்பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்***

1. ஸ்வாமி பூதத்தாழ்வாரின் இரண்டாம் திருவந்தாதி (4-9)

***ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே, உத்தமன் பேர் ஏத்தும் திறம் அறிமின், ஏழைகாள், ஓத்து அதனை வல்லீர் ஏல் நன்று, அதனை மாட்டீர் ஏல் மாதவன் பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு***

அதாவது,

வேதத்தினுடைய அர்த்தங்களில் நிஷ்கர்ஷிக்கப் படடதும் இவ்வளவே ! புருஷோத்தமனான எம்பெருமானை அடைய அவனை உபாஸிக்கும் வகையை சாஸ்த்திரம் கொண்டு தெரிந்து கொள்ளுங்கள் ; கண்ட கண்ட தேவதைகளின் கால்களில் எல்லாம் விழுகிற அறிவு கேடர்களே! அர்த்த அநுஸந்தானத்தோடு வேதம் அறிந்து அதன் படி மோக்ஷ உபாய உபாஸந்த்தைச் செய்ய ஸமர்த்தர்களாய் இருப்பீர்களாகில் (ஸகிஞ்சனர் விஷயத்தில்) அப்படியே செய்வது நல்லது ; அது செய்ய சக்தி அற்றவர்கள் ஆகில் (அகிஞ்சனர் விஷயத்தில்) திவ்ய தம்பதிகளின் வ்யாபக மந்திரம் மூலமாக ப்ரபத்தி அநுஷ்டிப்பதே ஸகல வேதங்களின் ஸாரமாகும்.

\# ***ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே*** - வேதத்தினுடைய அர்த்தங்களில் நிஷ்கர்ஷிக்கப் படடதும் இவ்வளவே !

\# ***உத்தமன் பேர் ஏத்தும் திறம் அறிமின்*** - புருஷோத்தமனான எம்பெருமானை அடைய அவனை உபாஸிக்கும் வகையை சாஸ்த்திரம் கொண்டு தெரிந்து கொள்ளுங்கள் ;

\# ***ஏழைகாள்*** - கண்ட கண்ட தேவதைகளின் கால்களில் எல்லாம் விழுகிற அறிவு கேடர்களே!

\# ***ஓத்து அதனை வல்லீர் ஏல் நன்று*** - அர்த்த அநுஸந்தானத்தோடு வேதம் அறிந்து அதன் படி மோக்ஷ உபாய உபாஸந்த்தைச் செய்ய ஸமர்த்தர்களாய் இருப்பீர்களாகில் (ஸகிஞ்சனர் விஷயத்தில்) அப்படியே செய்வது நல்லது ;

\# ***அதனை மாட்டீர் ஏல் மாதவன் பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு*** அது செய்ய சக்தி அற்றவர்கள் ஆகில் (அகிஞ்சனர் விஷயத்தில்) திவ்ய தம்பதிகளின் வ்யாபக மந்திரம் மூலமாக ப்ரபத்தி அநுஷ்டிப்பதே ஸகல வேதங்களின் ஸாரமாகும்.

2. தான் அனைத்தையும் தாங்குபவனாயும், அனைத்தையும் நியமிப்பவனாயும், அனைத்தையும் தன் அதீனத்தில் கொண்டவனாயும் உள்ள போதிலும், அவனை தவிர்த்து, மற்ற தேவதைகளை மக்கள் வணங்குவதன் நோக்கத்தை பகவத் கீதையில் (4-12) அர்ஜுனனுக்கு கண்ணன் விளக்குகிறான்.

***காங்க்ஷந்த கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா: க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர் பவதி கர்மஜா***

அதாவது, ‘கர்மாக்களின் ப்ராக்ருத பலனை உடனே கால தாமதமின்றி விரும்புகிறவர்கள் ப்ரக்ருதியில் உள்ள தேவதைகளை பூஜிக்கிறார்கள். அதன் மூலமாக விரைவிலேயை பலன் உண்டாகிறது.’

# ஸர்வேஸ்வரனான கண்ணனே ஸகல பலனையும் கொடுக்க தகுதி படைத்தவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் (7-22) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

***ஸ தயா ஸ்ரத் தயா யுக்த: தஸ்ய ஆராதனமீஹதே. லபதே ச தத: காமான் மயைவ விஹிதான் ஹிதான்***

அதாவது, ‘இதர தேவதையின் ஸ்ரத்தையான ஆராதனத்தாலே பலனை அடைகிறான். அந்த பலன்களும் என்னால் கொடுக்க பட்டவைகளே.’

# ஸர்வேஸ்வரனான கண்ணன் தன்னை பூஜிப்பதிலும் மற்ற தேவதைகளை பூஜிப்பதிலும் உள்ள வேறுபாட்டை மேலும் பகவத் கீதையில் (9-23) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

***யே து அன்ய தேவதா பக்தா யஜந்தே ச்ரத்தயாந்விதா: தேபி மாமேவ கௌந்தேய யஜந்தி அவிதி பூர்வகம்***

அதாவது, ‘எவர்கள் மற்ற தேவதைகளை ச்ரத்தையுடன் ஆராதிக்கிறார்களோ, அவர்களும் என்னையை ஆராதிக்கிறார்கள், ஆனால் சாஸ்த்ர விதிகளை பின் பற்றாமல்.’

# இதை உபநிஷத்தோடு கணிசிக்கும் போது,

***யே து ஸாமான்ய பாவேன மன்யன்தே புருஷோத்தம தே வை பாஷாண்டினோ க்ஞேய: ஸர்வ கர்ம பஹிஷ்க்ருதா:***

என்பதால், எவன் ஒருவன் புருஷோத்தமனான ஸ்ரீமந் நாராயணனையும் இதர தேவதைகளையும் ஸமமாக நினைக்கிறானோ, அவன் பாஷாண்டி ஆகிறான்; எந்த ஒரு வைதீக கர்மாக்களை செய்யவும் தகுதி அற்றவனாகிறான், என்பதாகிறது.

# காலத்தின் தன்மை யுகந்தோரும் வேறுபடும். தர்மமானது, யுகந்தோரும் க்ஷீணிக்கும். இதனை விளக்கும் வகையில் அமைந்திருக்கிறது, ஸ்ரீபராசர மஹரிஷியின், விஷ்ணு புராண வரி :

***கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீஸ்வரம். நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷாண்ட உபஹதோ ஜநா:***

என்கிறார் . அதாவது, மைத்ரேயரே! உலக நாயகனாக உள்ள ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், கலி யுகத்தில் பாஷாண்டிகளால் ஆராதிக்கப் பட மாட்டார்கள் என கவலை கொள்கிறார் ஸ்ரீபராசர மஹரிஷி.

# ஸர்வேஸ்வரன் பக்கலிலே ஸர்வார்த்த க்ரஹணம் செய்த திருமங்கை ஆழ்வார், பெரிய திருமொழியில் (8-10-3)

***மற்றுமோர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு உற்றிலேன் உற்றதும் உன்னடியார்க்கு அடிமை மற்றெல்லம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் கண்ணபுரத்து உறை அம்மானே***

என அருளினார். அதாவது, கண்ணபுரத்து உறை அம்மானே! உன்னைக்காட்டிலும் வேறொரு தெய்வம் ஆஸ்ரயிக்க உண்டு என்று நினைத்து இருப்பவர்களோடே சேர மாட்டேன்; உனது திருவஷ்டாக்ஷர

மந்திரமானது அறியவேண்டிய அனைத்துப் பொருள்களையும் சொன்னாலும் (அத்திருமந்திரத்தை) நான் அதிகரித்துத் தெரிந்து கொண்ட பொருள், பாகவத சேஷத்வமேயாம்.

# இவ்விஷயத்தில் ஸ்வாமி நம்மார்வாரின் திருவாய்மொழி பாசுரம் (2-2-4)

*தேவும் எப் பொருளும் படைக்கப், பூவில் நான்முகனைப் படைத்த, தேவன் எம் பெருமானுக்கு அல்லால், பூவும் பூசனையும் தகுமே?*

அதாவது, பலர் தெய்வமாக துதிக்கும் தேவர்களையும் மற்றெல்லாப் பொருள்களையும் படைக்க, தன் திருநாபிக் கமலத்திலே சதுர்முக ப்ருஹ்மாவை உண்டாக்கின பரதெய்வமாகிய ஸ்ரீமந் நாராயணனை அன்றி வேறு எவருக்கும் புஷ்பங்களும் திருவாராதனமும் தகுமோ ? (தகாது)

3. ஆக, தேவதாந்தர சம்பந்தம் நிஷேதமாகும் போது, ஆக்ஞா கைங்கர்யங்களில் தேவதாந்தர உச்சாரணம் ஸித்திக்கிறதே !

# தக்ஷ ஸ்ம்ருதி வரிகளாவது :

*யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹூதாஸநாந். ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்திதே*

அதாவது, 'பித்ருக்களையும், தேவர்களையும், ரிஷிகளையும், தன் நித்ய நைமித்திக கர்மா அநுஷ்டானத்தின் போது ஆராதிப்பவர்கள் அவர்களுக்கு அந்தர்யாமியான ஸர்வேஸ்வரனையே ஆராதிக்கிறார்கள்'. ஆக, நாம் செய்யும் ஸந்த்யாவந்தன கர்மாக்களில் வரும் இதர தேவதைகளின் பெயர்களும் (சூர்யன், அக்நி) மற்றும் தர்ப்பண மந்த்ரத்தில் வரும் '**வசு, ருத்ர, ஆதித்யன்**' போன்ற சப்தங்களும் ஸர்வ அந்தர்யாமியான விஷ்ணுவையே குறிக்கிறது எனப் பொருள்.

# ஸ்ரீ பாஷ்யகாரரும் தனது ***நித்யம்*** எனும் க்ரந்தத்தில் இதை அருளியுள்ளார்.

***தேவாந்ருஷீந் பித்ரூந் பகவத் ஆத்மகாந் த்யாத்வா ஸந்தர்ப்ய:***

அதாவது, தேவர்களையும் ரிஷிகளையும் பித்ருக்களையும் எம்பெருமானை அந்தர்யாமியாக உடையவராகவே எண்ணி தர்ப்பணம் செய்ய வேண்டும். இதைத் தவிர்த்து, சாஸ்த்திர விதி இல்லாத கர்மங்களினால் மற்றபடி தேவதாந்தர சம்பந்தம் / சப்த ப்ரயோகம் மோக்ஷ பலனை அழிக்கும், என்பது சாஸ்த்திர ஸம்ப்ரதாய விளக்கங்கள்.

4. ***மாதவன் பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு*** என்கிற பாசுர பதங்களைக் கொண்டு, 'திருமாலின் திருநாமங்களை உச்சரிப்பதே ஸகல வேதங்களின் ஸாரமாகும்' என்று விளக்கமளித்து, பகவத் ராமானுஜ க்ரந்த நோக்கான, வேத மார்க்கமான, பூர்வாசார்யர்கள் வழியான, மோக்ஷ உபாயத்தை நிஷேதிப்பர், ஸித்தாந்த பூர்வபக்ஷிகள். ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில், பூர்வாசார்ய பக்ஷத்தையும், அதன் விரோத பக்ஷத்தையும் ப்ரமாண பூர்வகமாக கண்டித்து விளக்கி அருளியுள்ளார்.

# மஹரிஷி, விஷ்ணு தர்மத்தில் சொல்லுமிடத்தில்,

*ஸோஜ்ஜீவனேச்சா யதிதே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர*

என்கிறார். அதாவது, உயர்ந்த பலனாகிய மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்கள், ஸர்வேஸ்வரன் ஸ்வாமி என்றும் ஜீவர்கள் இயற்கையாகவே அவனுக்கு தாஸனென்றும் அறிந்து, சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டுவதாயிற்று ; ஆக, இந்த வரிகளைக் கொண்டு, எம்பெருமான், ஸர்வருக்கும் ஸ்வாமியாகையாலும், தாஸர்களாகிய சம்சாரி ஜீவர்கள், அந்த நினைவைக் கொண்டு வாழ்வதே மோக்ஷத்திற்கான உபாயம், என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் கூறுவர்.

# சௌநக மஹரிஷியின் வரி:

***யோ மே கர்பக தஸ்யாபி வ்ருத்திம் கல்பிதவான் ப்ரபு: சேஷ வ்ருத்தி விதானேபி கிம் ஸுப்தஸ்ஸோத வா ம்ருத:***

என்பதாவது, கர்ப்பத்தில் சிசுவைக் காப்பாற்றும் ஈஸ்வரன், அந்த சிசு பிறந்து வளர்ந்த பிறகு ரக்ஷக கார்யத்தை செய்யாமல் இருக்க, அந்த ஈஸ்வரன் தூங்கி விட்டானா அல்லது இறந்து விட்டானா?

என்கிற ப்ரமாணத்தால், ஸித்தோபாய ப்ரதிபத்தியே மோக்ஷ காரணமென ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் கூறுவர்.

5. ஒரு பலனை அடைய இரண்டு உபாயங்கள் உள்ளன; இவ்விஷயத்தை, ஸ்வாமி தேசிகனின் ***ரஹஸ்ய ரத்னாவளி ஹ்ருதயம்*** உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

***ப்ராப்தி உபாயமாவது இஜ்ஜீவன் சம்சார ஸாகரத்தைக் கடந்து அக்கரைப் படுகைக்கு அனபாய ஸாதனமாக ஸ்வ புத்தியாலே கோரும்படி சாஸ்த்தர உக்தமான அர்த்தம். இது ஸித்தமென்றும் ஸாத்யமென்றும் இரண்டு படியாய் இருக்கும்***

***ஸித்தோபாயம்* -** பலன் கொடுப்பனிடம், எப்போதுமே பலன் தர தயாராக இருக்கக் கூடியதான நிலை; அது, ஒரு உபாயம். இதுவே ப்ரதான உபாயம்.

திவ்ய தம்பதிகள் ஸர்வ சேஷி, என சாஸ்த்திரங்கள் அறிவிக்கின்றன. ஆக, பிராட்டியோடு கூடிய பெருமாளே ஸித்தோபாயம்.

***ஸாத்யோபாயம்* -** பலன் பெறுபவனால், ஸித்தோபாயனின் விதிப்படி, செய்ய வேண்டிய அநுஷ்டானம்; அது, ஒரு உபாயம். இது பகவத் அதீனமான அப்ரதான உபாயம். பகவத் சாஸ்த்திர விதி இருப்பதால், ஸாத்யோபாய அநுஷ்டானமும் பலனுக்கு தேவையாகிறது.

# மோக்ஷ பலன் பெற, ப்ருஹ்ம வித்யையைத் தவிர வேறு ஒரு வழி கிடையாது என்கிறது,

***நாந்யப்பந்தா அயனாய வித்யதே***

என்கிற தைத்ரீய உபநிஷத்.

மேலும், உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளிய ***ப்ருஹ்ம ஸூத்ரங்களும்*** இதனை அறுதியிடுகின்றன. ஸ்ரீ பாஷ்யத்தில் ***ஸாதனாத்யாயமே*** அநுஷ்டானத்தோடு கூடிய மோக்ஷத்திற்கான வழி!

அதாவது, ***நாநா சப்தாதி பேதாத்*** பெயர் வேறுபட்டிருப்பதால், மோக்ஷத்தை அடைவிக்கிற ப்ருஹ்ம வித்யைகள் வெவ்வேறானவை, என்றும்,

***விகல்போ அவிஸிஷ்ட பலத்வாத்***

அனைத்து ப்ருஹ்ம வித்யைகளும் ஒரே மோக்ஷ பலனையே கொடுக்கும், போன்ற ப்ருஹ்ம ஸூத்ரங்களைக் கொண்டு, 32 ப்ருஹ்ம வித்யைகளில் இருக்கிற உபாஸனமோ அல்லது ந்யாஸ வித்யையோ (சரணாகதி அநுஷ்டானமோ) மோக்ஷத்திற்கு உபாயமாகிறது என தெளியலாம்.

# உபநிஷத் ப்ரமாணங்களும், ப்ருஹ்ம ஸூத்ர வ்யாக்யனமான ஸ்ரீபாஷ்யமும், ஸாத்யோபாயத்தை அங்கீகரிக்க, ஆழ்வார் பாசுரங்களில் உள்ள, செயல் ரூபமான ஸாத்யோபாயத்தை நிஷேதித்து கூறும் அர்த்தங்கள், ஆழ்வார் பாசுரங்களின் ப்ராமாண்யத்தை குலைக்கும் ; இம்மாதிரியான அர்த்த நிர்தேசம், ஆழ்வார்களிடம் உண்டாகிற பெருத்த அபசாரம்.

*பொய்கையாழ்வார்* - முதல் திருவந்தாதி - *உயநின் திருவடியே சேர்வான்*

*பூதத்தாழ்வார்* - இரண்டாம் திருவந்தாதி - *விண்ணோர் முடி தோயும் பாதத்தான் பாதம் பயின்று*

*பேயாழ்வார்* - மூன்றாம் திருவந்தாதி - *விண்ணோர் முடிதோயும், பாதத்தான் பாதம் பணிந்து*

*திருமழிசை ஆழ்வார்* - திருச்சந்தவ்ருத்தம் - *இலங்குபாதம் அன்றி மற்றொர் பற்றிலேன்*

*ஸ்வாமி நம்மாழ்வார்* - திருவாய் மொழி - *அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே*

*மதுரகவி ஆழ்வார்* - கண்ணிநுண்சிறுத்தாம்பு - *செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்*

*பெரியாழ்வார்* - பெரியாழ்வார் திருமொழி - *அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்*

*ஆண்டாள் நாச்சியார்* - திருப்பாவை - *உன்னை அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்*

*குலசேகர ஆழ்வார்* - பெருமாள் திருமொழி - * உன் சரண் அல்லால் சரண் இல்லை*

*தொண்டரடிப்பொடி ஆழ்வார்* - திருமாலை - *நின் பாத மூலம் பற்று இலேன் பரம மூர்த்தி*

*திருப்பாணாழ்வார்* - அமலனாதிபிரான் - *திருக்கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன வொக்கின்றதே*

*திருமங்கையாழ்வார்* - பெரிய திருமொழி - *நானுடை தவத்தால் திருவடி அடைந்தேன்*

# ஸ்வாமி தேசிகனின் **பரமபத சோபாந** பாசுரம்.

***அறிவுருவானவை அனைத்தும் அறிவார் ஏனும் - அரும் கலைகள் கற்று உரைக்க வல்லார் ஏனும் - தரும வழி அழியாமல் காப்பார் ஏனும் - தனி மறையின் தாத் பர்யம் தருவார் ஏனும் - இரு வினையின் ஒழுக்கத்தால் ஏவல் ஓராது இங்கே - நாம் சிறை இருந்த வீனம் தீர்க்கும் திரு மகளார் பிரியாத தேவன் திண்ணம் தேறாதார் திண் படியில் ஏறாதாரே***

அதாவது, ஸகல உலக விஷயங்களை அறிந்திருந்தாலும், *ஸகல வித்தைகளிலும் தேர்ச்சி இருந்தாலும்*, அநுஷ்டான சீலர்களாக இருந்து விதித்த தர்மங்களை கை கொள்பவராயானும், சாஸ்த்திர விஷயத்தின் முக்ய அர்த்தங்களை கலக்கமற தெளிந்திருந்தாலும், இது போன்ற பல தன்மைகள் இருந்தாலும், திவ்ய தம்பதிகளிடம் சரணாகதி அநுஷ்டானத்தை சாஸ்த்திரப்படி அநுஷ்டியாதவர்கள் பரம புருஷார்த்தத்தை அடைய மாட்டார்கள்.

6. பெரிய பிராட்டிக்கு ஸித்தோபாயத்வம் (பலனை அளிக்கும் தன்மை) சொல்லும் ப்ரமாணங்கள் இருப்பதால், *பிராட்டியோடு கூடிய நாராயணன் ஒருவனை பரம்பொருள்* என கொள்ள வேண்டும்.

*தாம் பத்மிநேமீம் சரணம் அஹம் ப்ரபத்யே: லக்ஷ்மீர்மே நஷ்யதாம் த்வாம் வ்ருணே*

என்கிற ஸ்ருதி வாக்யத்தால், லக்ஷ்மி தேவியை சரணமடைந்து இல்லாமையைப் போக்கி அருளப் ப்ரார்த்திப்பதாக கூறுவதால், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

*லக்ஷ்ம்ய ஸஹ ஹ்ருஷிகேச: தேவ்யா காருண்ய ரூபயா. ரக்ஷக ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே* என்கிற பாஞ்சராத்ர சாஸ்த்திரங்களினாலும்,

எப்போதும் பிரியாத லக்ஷ்மி பிராட்டியுடன் சேர்ந்து எம்பெருமான் ரக்ஷண கார்யத்தை செய்கிறான், என அறியலாம்.

இதனாலும், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

*யக்ஞ வித்யா மஹாவித்யா குஹ்ய வித்யா ச ஷோபனே. ஆத்ம வித்யா ச தேவி, த்வம் விமுக்தி பல தாயிநி* என்று பராசர மஹரிஷி,

பெரிய பிராட்டியாருக்கு முக்தி அளிக்கும் தன்மை உடையவள் என்கிறார்.

7. சதுர்வித புருஷார்த்தங்களிலும், மோக்ஷமாகிற *பரிபூரண ப்ருஹ்மானுபவமே* சம்சாரி ஜீவர்களுக்கு பரம புருஷார்த்தம் என பராசர மஹரிஷி ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் விளக்கியுள்ளார் :

*கத்வா கத்வா நிவர்தந்தே சந்த்ர ஸூர்யாதயோ க்ரஹா: அத்யாபி ந நிவர்தந்தே த்வாதசாக்ஷர சிந்தகா:*

அதாவது, சந்திரன் சூரியன் போன்ற பல தேவர்களும் ப்ரளயத்தில் தங்கள் பதவிகளை இழந்தவர்களாக இந்த சம்சார லோகத்தை அடைகிறார்கள். ஆனால், எம்பெருமானின் வ்யாபக மந்த்ரத்தை அநுஸந்தித்து ஸ்ரீவைகுண்டத்தை அடைந்த முக்தர்கள் மீண்டும் கர்மாவின் அடிப்படையில் இந்த லோகத்திற்கு திரும்புவதில்லை.

# இவ்விஷயத்தில் ஸ்வாமி தேசிகனின், பரமபத சோபானம் (7)

*தந்திரங்கள் அளவிலராய் தனத்தால் மிக்க தார் வேந்தர் தொழ வையம் ஆண்டார் மாண்டார் சந்திரனும் சூரியனும் வீயும் காலம் தாரகையின் வடமும் அற்று தனி வான் ஆளும் இந்திரனும் ஏறு உயர்த்த வீசன் தானும் ஈர் இரண்டு முகத்தானும் இல்லா அந்நாள் நம் திருமால் நிலை கண்டார் நாகம் எல்லாம் நரகு என்று நற்பதமே நாடுவாறே*

அதாவது, லோகத்தை ஆண்ட பல பேரரசர்களும் ஒரு காலத்தில் மாண்டு ஒழிகின்றனர் ; அதே போல மஹா ப்ரளய காலத்தில், நக்ஷத்திரங்கள், சந்திரன், சூர்யன், முக்கண்ணனும் சதுர்முகனும் அழிகின்றனர் ; அப்போது, மகா பிரளயத்தில் நம் திருமால் ஒருவரே இருக்கும் நிலை அறிந்து ஸ்வர்க்கமும் நரகமே என்று நினைத்து சம்சார ஸுகதத்தை வெறுப்பதே உசிதம்.

# கடோபநிஷத் கூறும் போது,

*அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேணோவுச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்*

என்று

*அ* என்பதால், ஸர்வ லோகங்களுக்கும் ஈஸ்வரனாகிய விஷ்ணு சொல்லப் படுகிறான்; *உ* என்பதால் பகவானோடு சேர்ந்தே இருக்கும் பெரிய பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லப் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு *ம* என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கும், எனப் பொருளாகிறது.

அதனால், ஆழ்வாரும் *மாதவன் பேர் சொல்லுவதே ஒத்தின் சுருக்கு* (திவ்ய தம்பதிகளின் வ்யாபக மந்திரம் மூலமாக ப்ரபத்தி அநுஷ்டிப்பதே ஸகல வேதங்களின் ஸாரமாகும்) என பிராட்டியோடு கூடிய எம்பெருமனே பரம புருஷார்த்தம் பெற உத்தேச்யம் என அறுதியிட்டார்.

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

******

30.3.2023
வியாழன் கிழமை

***வேடுவச் சேரி கிளி ; திருநெடுந்தாண்டக கிளி - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்***

1. ஸ்வாமி தேசிகனால் அருளப்பட்ட, சம்சாரி ஜீவர்களின், நிலையை விளக்கும் ஸ்லோகம்:

***மணிவர இவ சௌரே: நிருத்ய ஹ்ருத்யோபி ஜீவஹ. கலுஷ மதிரவிந்தன் கிங்கரத்வாதிராஜ்யம். விதி பரிணதி பேதாத் வீக்ஷி தஸ்தேன காலே குரு பரிஷதுபஞும் ப்ராப்ய கோபாயதே ஸ்வம்***

அதாவது,

ஸகல ஜீவர்களும் எப்போதும் பரமபதத்தில், துக்கமற்ற ஸுகங்களோடு,

நித்யர் (சம்சார சம்பந்தம் அற்றவர்கள்)

முக்தர்களை (சம்சார சம்பந்தம் இருந்து பிறகு பரமபதம் அடைந்தவர்கள்) போல்

ஸதா இருக்கக்கூடிய தன்மை கொண்டவர்கள்.

ஆயினும், அநாதி பாப புண்ய கர்ம சம்பந்தத்தால், சம்சாரி ஜீவர்களின், உண்மை நிலையை அறியாமல் துக்கத்திற்கு காரணமான இந்த ப்ரபஞ்சத்தில் உழல்கிறார்கள்.

பிறகு, தன்னுடைய ஒரு புண்ய விசேஷத்தினால், ஒரு ஸதாசார்யனை அடைந்து சம்சாரத்தில் உள்ள மீள முடியாத துக்கங்களை உணர்ந்து, தனக்கு இயற்கையாக கிடைக்க பெற வேண்டிய ஸுக ரூபமான மோக்ஷ அநுபவத்தை அறிந்து, அதற்கான ஒரு சரணாகதி அநுஷ்டானத்தை செய்து, உயர்ந்த பலனை அடைகிறார்கள்.

இவ்வாறு பொருள் கொண்டது இந்த ஸ்லோகம்.

# இதை ஸ்வாமி தேசிகன், ஒரு ராஜகுமார த்ருஷ்டாந்தம் கொண்டு விளக்குகிறார்.

அதாவது, ஸர்வேஸ்வரனாகிய ஶ்ரீமந் நாராயணனை மறந்து, இங்குள்ள உறவுகளையும் அதனால் ஏற்படும் ஸுக துக்கங்களையுமே தனக்கு இயல்பு என நினைத்து வாழும், இந்த சம்சாரி ஜீவர்களுக்காக, ஒரு உலக உதாரணம் இது :

ஒரு ராஜகுமாரன் பேச்சுக்களை அறியாத இளம் வயதினிலே, வழி தவறி சென்று விட்டான்.

அவனை ஒரு வேடன் எடுத்து வளர்க்கிறான்.

வேடர் தொழிலையே தன் தொழிலாக நினைத்து வளர்கிறான் அந்த ராஜகுமாரன்.

அவனுடைய ராஜ லக்ஷணத்தைக் கண்ட அங்கு வந்த சில தார்மீகர் அவனுக்கு தான் யார் என்பதை புரிய வைத்து அவன் பெற்றோர்களைப் பற்றியும் அறிவிக்கின்றனர்.

தன்னை உணர்ந்த அந்த ராஜகுமாரனுக்கு, தன் பெற்றோரிடத்தில் தானாகவே அன்பு உண்டாகிறது.

பிறகு சில ராஜ அந்தரங்கர்கள், அந்த ராஜகுமாரனுக்கு ப்ரிய தமங்களையும் ஹித தமங்களையும் உபதேசிக்க தன் பெற்றோரிடம் சேர அந்த வழி தப்பிய ராஜகுமாரனுக்கு ஆசை வருகிறது

# இந்த உதாரணத்தில் உள்ள ராஜகுமாரன் என்பவன் தான் இங்குள்ள, நம்மைப் போன்ற, சம்சாரி ஜீவர்கள்.

ராஜகுமாரன், வழி தவறி சென்ற இடமானது, சம்சாரி ஜீவர்கள் வந்தடைந்த இந்த ப்ராக்ருத கர்ம பூமி.

ராஜகுமாரன் அடைந்த வேடர்களின் சேர்க்கை தான் இந்த ஜீவர்களுக்கு கிடைத்த ப்ராக்ருத சரீர மற்றும் புலன்களின் சம்பந்தம்.

ராஜகுமாரன் கொண்ட வேடர்களின் வ்ருத்த்தி தான், இந்த ஜீவர்கள் தன் தொழிலாக கருதும், (சரீர மற்றும் புலன்களால் செய்யப்படும்), ப்ராக்ருத லோகங்களில் உள்ள ஸுக துக்கங்களுக்கான, காரியங்கள்.

இந்த ராஜகுமாரனுக்கு தார்மீகர்கள் உணர்த்திய உண்மை நிலை தான், ஸாத்வீக ஸம்பாஷணத்தில் ப்ராக்ருத பலன்களில் உள்ள தோஷ ஸப்தகங்களை சம்சாரி ஜீவர்களுக்கு உணர்த்தியவர்கள். இந்த ஜீவர்களுக்கு புரிய வைத்தது என்பது இந்த ஜீவர்களின் உண்மை நிலையையும் மற்றும் இவனுக்கும் ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்கியது.

பிறகு உண்டாகும் ஆசார்ய சம்பந்தத்தினால் (உபமானத்தில் - ராஜ அந்தரங்கர்கள்) சாஸ்த்ரப்படி தத்வ ஹித தங்களை சம்சார் ஜீவர்கள் பிழையற கற்றுக் கொண்ட ப்ரகாரம்.

ஆக, சம்சாரி ஜீவர்களுக்கு பரம புருஷார்த்தமாகிய பரமபததத்தை அடையச் செய்யும் ஆசார்ய ஸ்ரேஷ்டர்களை, எம்பெருமான் மிகவும் உகக்கிறான்,

என்கின்றன சாஸ்த்திரங்கள்.

2. ப்ராக்ருத சரீர சம்பந்தத்தினால், சம்சாரி ஜீவர்கள் ஸ்வ ஸ்வரூபத்தை உணராது கிடக்கும் விஷயத்தை, ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (3-27)

*ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வஸ: அஹங்காரவிமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே*

என அருளினான்.

அதாவது,

சம்சாரி ஜீவர்களின் சரீரமானது மூன்று குணங்களாகிய ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் உடைய ப்ரக்ருதி என்ற அசேதந தத்வத்தினால் ஆனது. ஆக, சம்சாரி ஜீவர்களின் எண்ணமும் செயல்களும், அந்த குணத்திற்கு ஏற்ப அமைகிறது.

# இதையே, ஸ்வாமி நம்மாழ்வார், திருவிருத்தம் (1-1) :

***பொய் நின்ற ஞானமும், பொல்லா ஒழுக்கும் அழுக்கு உடம்பும், இந் நின்ற நீர்மை, இனி யாம் உறாமை, உயிர் அளிப்பான்- எந் நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா! மெய்ந் நின்று கேட்டருளாய், அடியேன் செய்யும் விண்ணப்பமே***

அதாவது,

ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தத்தில் கூறியபடி, ‘எம்பெருமானே! சம்சார பந்தத்துக்கு காரணமான தவறான எண்ணங்களும், அதனால் ஏற்பட்ட தீய ஒழுக்கங்களும், அதனால் உண்டான இந்த சரீர சம்பந்தங்களும், இனி நான் அடையாத படி இருக்க, நீ பல்வேறு அவதாரங்களைச் செய்தாய்.

ஞான சங்கோசத்தால் உண்டாகும் தவறான எண்ணங்களாவது ; தேஹாத்ம ப்ரமம், ஸ்வதந்த்ராத்ம ப்ரமம் மற்றும் அந்ய சேஷத்வ ப்ரமம்.

3. ஆக, இந்த தேஹாத்ம ப்ரமம், ஸ்வதந்த்ராத்ம ப்ரமம், அந்ய சேஷத்வ ப்ரமம் சரீர சம்பந்தமாக சம்சாரி ஜீவர்களுக்கு உண்டாகிறது ; சம்சாரி ஜீவர்களின் ***ஞான சங்கோசமானது***, சேதநனின் தர்ம பூத ஞானத்தை சங்கோசித்து இருக்கச் செய்யும் ; இந்த ஞான சங்கோசமே ப்ரமமாகிறது ; அதாவது, ஒன்றை மற்றொன்றாக நினைக்கும் நிலையாகிறது.

# ***தேஹாத்ம ப்ரமம்*** - அழியக்கூடிய சரீரத்தை அழிவில்லாத ஆத்மாவாக நினைக்கும் படி ஆகிறது ; இதனால் விபரீத எண்ணங்களிலும் செயல்களிலும், ஈடுபட காரணமாகிறது. இதனால், ஐஹிக, ஆமுஷ்மிக பலன்களை, அதில் உள்ள தோஷ ஸப்தகங்களை உணராமல், புருஷார்த்தமாக எண்ணத் தோன்றுகிறது. இந்த, ஞானக் குறைப் பட்டின் கொடுமையை, ஸ்ரீராமானுஜர், சரணாகதி கத்யத்தில் தெளிவு படுத்துகிறார்:

***மதீயானாதி கர்ம ப்ரவாஹ ப்ரவ்ருத்தாம் பகவத் ஸ்வரூப திரோதானகரீம் விபரீத ஜ்ஞான ஜனனீம் ஸ்வவிஷயாயாஸ்ச போக்த புத்தேர் ஜனனீம் தேஹேந்த்ரியத்வேன போக்யத்வேன சூக்ஷ்மரூபேண சாவஸ்திதாம் தைவீம் குணமயீம் மாயாம்***

அதாவது, இந்தப் ப்ரக்ருதி எனப்படும் முக்குணங்களாலான (ஸத்வம், ரூஸ் மற்றும் தமஸ்), சம்சாரி ஜீவர்களின் சரீரம் இருக்கிறதே , இது அநாதிகாலமாக அடியேன் செய்த கர்மவினை என்கிற ஆற்று வெள்ளத்தில் அடித்துத் தள்ளப்பட்டு பகவானின் ஸ்வரூபத்தை அறியாதபடி செய்கிறது. ஸ்ரீமந் நாராயணன், பரமன்; அவனுக்கு நாம் நல்லடியார்கள் என்கிற நல்ல எண்ணங்கள் தோன்றாதபடி தடுத்து, அதற்கு எதிரான எண்ணங்களை நினைக்கச் செய்கிறது. ஒரு பொருளை, வேறு ஒரு பொருளாக நினைக்கச் செய்கிறது. தனக்குத் தானே இன்பமானவன் என்கிற எண்ணத்தைத் தோன்றச் செய்கிறது. மாயா வித்யை செய்பவன்,காண்பவரை மயக்க , தன் கையில் மயில்தோகை வைத்திருப்பதைப் போன்று ப்ரக்ருதியானது , சரீரத்தையும் , இந்த்ரியங்களையும் தன்வசம் வைத்து சம்சாரி ஜீவனை மயக்கி அவன் உண்மையை அறியாமல், அவனுக்குத் தவறான அறிவைக்கொடுத்து, புலன் இன்பங்களில் ஈடுபடச் செய்கிறது.

# ***ஸ்வதந்த்ராத்ம ப்ரமம்*** - பகவத் சேஷத்வத்தை உணராது சாஸ்த்திர விரோத செயல்களில் ஈடு பட ஹேதுவாகிறது. ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹத்தில்,

***அசாஸ்த்ரம் ஆஸுரம் க்ருத்ஸ்நம் சாஸ்த்ரீயம் குணத ப்ருதக் லக்ஷணம் சாஸ்திர சித்தஸ்ய த்ரிதா சப்தத சோதிதம்***

என ஆளவந்தார் அருளிச் செய்தார். அதாவது, சாஸ்த்ரத்திற்கு உட்படாத செயல்கள் அனைத்தும் அசுரத் தன்மை உள்ளவைகளாகும் என்றும் சாஸ்த்திரம் விதித்தவற்றை மறுக்காமல் செய்து போவதே ஜீவர்களின் லக்ஷணம், என அருளினார்.

# ***அந்ய சேஷத்வ ப்ரமம்*** - ஸர்வ நியந்தாவான, பரம காருணிகனான, ஜீவர்களோடு நவ வித சம்பந்தம் உடையவனான, ஸர்வேஸ்வரன் ஸ்ரீமந் நாராயணன் பரம புருஷார்த்தத்தை, லகு உபாயத்தால் அளிக்க காத்திருக்கும் போது, அதனை உணராது மற்ற கர்ம வச்யரான தேவர்களிடம் மடிப் பிச்சை கேட்கும் அவல நிலை உண்டாகிறது. பரமபுருஷனே ஸர்வ பல ப்ரதன் என்பதை மறந்து, ***தேவதாந்தரங்களுக்கும் ஒரு சில பலனளிக்கும் சக்தி இருப்பதாக மனதால் எண்ணி இருப்பது*** ; அதனால், உறவினர் மற்றும் நண்பர்களின் தேவதாந்தர சம்பந்தத்தை நிராகரிக்க மனம் தயங்குவது.

ஸர்வேஸ்வரனான கண்ணனே ஸகல பலனையும் கொடுக்க தகுதி படைத்தவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் (7-22) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

***ஸ தயா ஸ்ரத் தயா யுக்த: தஸ்ய ஆராதனமீஹதே. லபதே ச தத: காமான் மயைவ விஹிதான் ஹிதான்***

அதாவது, இதர தேவதையின் ஸ்ரத்தையான ஆராதனத்தாலே பலனை அடைகிறான். அந்த பலன்களும் என்னால் கொடுக்க பட்டவைகளே.

ஸர்வேஸ்வரனான கண்ணன் தன்னை பூஜிப்பதிலும் மற்ற தேவதைகளை பூஜிப்பதிலும் உள்ள வேறுபாட்டை மேலும் பகவத் கீதையில் (9-23) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

*யே து அன்ய தேவதா பக்தா யஜந்தே ச்ரத்தயாந்விதா: தேபி மாமேவ கௌந்தேய யஜந்தி அவிதி பூர்வகம்*

அதாவது, எவர்கள் மற்ற தேவதைகளை ச்ரத்தையுடன் ஆராதிக்கிறார்களோ, அவர்களும் என்னையை ஆராதிக்கிறார்கள், ஆனால் சாஸ்த்ர விதிகளை பின் பற்றாமல்.

4. ஈஸ்வரனே உபாதான ஜகத் காரணம் எனும் போது வரும் சங்கைகளை பகவத் ராமானுஜர் ஶ்ரீபாஷ்ய க்ரந்தத்தில் விளக்கியுள்ளார். ஸ்ருஷ்டி தசையில், ஸூக்ஷ்ம சேதந அசேனங்களை தனக்கு சரீரமாகக் கொண்ட ப்ருஹ்மம், ஸ்தூல சேதந அசேனங்களை தனக்கு சரீரமாகக் கொண்ட ப்ருஹ்மம் ஆகிறது. ஆக, ஸகல சேதந அசேதந வஸ்துக்களுக்குள், ஶ்ரீமந் நாராயணன், வ்யாபித்து இருக்கிறான், என்பதால், அதைத் தொட்டு இரு வித தோஷங்கள் எம்பெருமானுக்கு சம்பவிக்குமோ எனக் கொண்டு, அதை ப்ரமாண பலத்தாலே (ஹேய ப்ரத்யநீகத்வம் மற்றும் கல்யாணைக தாநத்வம் உடைய எம்பெருமான் என அருளி) நிராகரிக்கின்றனர், பூர்வாசார்யர்கள்; அந்த தோஷங்களாவது:

*தத்கத தோஷம்* மற்றும் *தத் ப்ரயுக்த தோஷம்*

# இதில், *தத்கத தோஷமாவது* - அவற்றில் உள்ள தோஷம் என பொருளாகிறது.

எம்பெருமான் ஸர்வ வ்யாபியாக இருந்தும், கர்ம ஸம்பந்தம் என்கிற சேதந தோஷமும், முக்கணங்களாகிய (அசேதநமான) ப்ரக்ருதி தோஷமும், அவனை களங்கப் படுத்துவதில்லை.

இதற்கு ப்ரமாணம் முண்டகோபநிஷத்:

*த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம் வ்ருக்ஷம் பரிஷ்ஸ்வஜாதே தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அனச்னன் அன்யோ அபிசாகசீதி*

என்கிறது. அதாவது, 'ஜீவன் மற்றும் பரமாத்மா என்கிற இரு பறவைகள் ஒரே மரத்தில், அதாவது ஒரே உடலில், இருக்கின்றனர். இயற்கையில், எட்டு விதமான குணங்களினால் ஒன்று பட்டவர்களாக இருவரும் இருக்கின்றனர். இருவரும் நண்பர்களைப் போல் இருக்கின்றனர். அதில் ஒரு பறவை (சம்சாரி ஜீவன்) மரத்தில் உள்ள பழங்களை (உடல் ரீதியான கர்மாவினால் ஏற்படும் ஸுக துக்கங்களை) அநுபவிக்கிறது. மற்றொறு பறவை (பரமாத்மா) அத்த பழத்தை சுவைக்காமல் (கர்மாவினால் வரும் ஸுக துக்கங்களை அநுபவியாமல்) மிகப் பொலிவுடன் திகழ்கிறது. ஆக, சம்சாரி ஜீவர்களின் கர்ம சம்பந்தம் எனும் தோஷம், எம்பெருமானை *தத்கத தோஷமாகத்* தீண்டுவதில்லை, என்றபடி.

இதை உலக உதாரணம் கொண்டும் தெளியலாம். சிறைச்சாலையில், தண்டனைப் பெற்ற கைதிகளும் உள்ளனர். சிறைச்சாலை அதிகாரிகளும் இருக்கின்றனர். *குற்றத்திற்கான தண்டனை* எனும் தோஷம் சிறைச்சாலை கைதிகளுக்கு இருந்த போதும், சிறைச்சாலை அதிகாரிகளை, அந்த தோஷம் தீண்டுவதில்லை.

# இதில், *தத் ப்ரயுக்த தோஷமாவது* - அவற்றின் சம்பந்தத்தினால் ஏற்படும் தோஷம் என பொருளாகிறது. சேர்க்கையினால் ஏற்படும் தோஷமாவது, பொதுவாக சம்சாரி ஜீவர்களுக்கு, *ப்ரக்ருதி சம்பந்தம்* என்கிற முக்குணங்களாலான சரீர சம்பந்தத்தினால், ஏற்படுகிறது ; இதுவும் ஸர்வேஸ்வரனைத் தீண்டுவதில்லை, என்பது ப்ரமாண ஸித்தம்.

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (7-14) கூறும் போது,

*__தைவி ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யா. மாமேவயே ப்ரபத்யந்தயே மாயாமேதாம் தரந்திதே__*

அதாவது, 'என்னுடைய அதீனத்தில் உள்ள முக்குணங்களாலான ப்ரக்ருதி என்கிற மாயையை கடப்பதற்கு என்னையே சரண் அடைய வேண்டும்', என்கிறான். ஆக, ப்ரக்ருதியைத் தன் அதீனத்தில் உடைய எம்பெருமானுக்கு *__தத் ப்ரயுக்த தோஷமும்__* தீண்டுவதில்லை, என்றபடி.

பொதுவாக, *__தத் ப்ரயுக்த தோஷம்__* எப்படி ஏற்படுகிறது என ஒரு உலக உதாரணம் கொண்டும் தெளியலாம். ஸ்வாமி தேசிகன் *__உபோத்காத அதிகாரத்தில்__* உதாஹரண பூர்வகமாக இதனை தெளிவித்திருக்கிறார்.

*__மாதாப்யேகா பிதாப்யேகொ மம தஸ்ய ச பக்ஷிண: அஹம் முனிபி: ஆனித: ஸ ச ஆனிதெள கவாஷனை: அஹம் முனினாம் வசனம் ஸ்ருணோமி கவாஷனானம் ஸ வசஸ் ஸ்ருணோதி ப்ரத்யக்ஷதாம் ஏதத் பவதாபி த்ருஷ்டம் ஸம்ஸர்கஜா தோஷ குணா பவந்தி__*

அதாவது, ஒரு ரிஷி வீதி வழி சென்றுக் கொண்டிருந்தார்; அவர் வழியில் ஒரு கசாப் கடை இருந்தது; அங்கு அமர்ந்திருந்த கிளி, 'வெட்டுவேன்' 'கொல்வேன்' என்று உச்சரித்த வண்ணம் இருந்தது; சிறிது தொலைவில் அந்த ரிஷி, ஒரு முனிவரின் ஆஸ்ரமம் வந்தடைந்தார். அங்கு இருந்த கிளி, 'வணக்கம்' 'ஆசனத்தில் அமருங்கள்' என்று உச்சரித்த வண்ணம் இருந்தது. இரண்டுமே கிளி இனத்தை சேர்ந்திருந்தாலும், எவ்வளவு வித்யாசம் தென் படுகிறது; அந்த ரிஷிக்கு ஒரே ஆச்சர்யம். இரண்டு கிளிகளின் பேச்சைக் கேட்ட அந்த ரிஷியிடம், ஆஸ்ரமத்தில் வளர்ந்த கிளி சொன்னது : 'எனக்கும் இன்னொரு கிளிக்கும் தாயும் ஒருத்தி; தகப்பனும் ஒருவனே ! நான், ஆஸ்ரமவாசிகளான ரிஷிகளால், வளர்ப்பப் பட்டேன்; இன்னொரு கிளி பசுமாம்ஸம் தின்பவர்களால் வளர்க்கப்பட்டது. நான், தினந்தோறும் முனிவர்களின் பேச்சுக்களைக் கேட்கிறேன்; அந்தக் கிளியோ மாட்டிறைச்சி உண்பவர்களின் பேச்சுக்களைக் கேட்கிறது. நான் பேசும் பேச்சுக்களின் தன்மையையும், அந்தக்கிளி பேசும் பேச்சுக்களின் தன்மையையும் கேட்டு, இவற்றிலுள்ள வேறுபாட்டை நீ தெரிந்துகொண்டு இருக்கலாம். இவற்றிலிருந்து, குணங்களும் குற்றங்களும், நல்ல பண்புகளும் தீய பண்புகளும் , சேர்க்கையால் ஏற்படுகின்றன' ( *__ஸம்ஸர்கஜா தோஷ குணா பவந்தி__* என்றபடி) என்று சொல்லிற்று.

ஆக, இம்மாதிரியாக, ஸ்வரூப விருத்தமான ப்ராக்ருத பலன்களில் இச்சை உடைய சம்சாரி ஜீவர்களோடு சேர்ந்திருக்க, *__தத் ப்ரயுக்த தோஷமும்__* எம்பெருமானைத் தீண்டுவதில்லை, என்பது ப்ரமாண ஸித்தம்.

5. கிளியின் தன்மையாவது, பிறர் சொல்வதை மாற்றமில்லாமல் திருப்பிச் சொல்லும் ; இதனால், *__ஸம்ஸர்கஜா தோஷ குணா பவந்தி__* என்பதனை விளக்க, கிளி உதாஹரிக்கப் பட்டது ; அதாவது, பேச்சை திருப்பிச் சொல்லும் தன்மை கிளிக்கு பொதுவான போதும், அந்த கிளி வளர்கிற இடம், அந்த பேச்சின் தன்மையை பாதிக்கச் செய்கிறது, என வளக்கப் படுகிறது இந்த உபமானத்தில் ;

அது போல, நம் பூர்வர்கள் ஆசார்யர்களை, கிளிக்கு ஒப்பிடுவார்கள்; ஏனெனில் கிளி தான் சொன்னதை திருப்பிச் சோல்லக் கூடியது ; ஸம்ப்ரதாய பூர்வர்களின் வழி மீறாமல் சாஸ்த்திர ப்ரவர்த்தகம் செய்ய வேண்டுவது ஆசார்ய கர்தவ்யம் என்பதாகிறது.

# திருமங்கை ஆழ்வாரின் திருநெடுந்தாண்டகம் (2-4)

*__முளைக் கதிரைக் குறுங்குடியுள் முகிலை மூவா மூவுலகும் கடந்து அப்பால் முதலாய் நின்ற, அளப்பு அரிய ஆர் அமுதை அரங்கம் மேய அந்தணனை, அந்தணர் தம் சிந்தையானை விளக்கொளியை மரகதத்தைத் திருத்தண்காவில், வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு, வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக என்று மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே__*

இளங்கதிரவனைப் போன்றவனும் திருக்குறுங்குடியில்கால் காள மேகம் போல் விளங்குபவனும் நித்யமாய் த்ரிவித சேதந வர்க்கத்துக்கும் சேஷியாய் பரமபத்திலே உபய விபூதிக்கும் முதல்வனாய்க் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், ஸ்வரூப ரூப குணங்களில் அளவிட முடியாதவனும் அருமையான அம்ருதம் போன்றவனும் திருவரங்க மாநகரில் இருக்கிற பரம பரிசுத்தனும், வைதிகர்களின் உள்ளத்தை இருப்பிடமாக உடையவனும் திருத்தண்காவில் விளக்கொளி எம்பெருமானாய் ஸேவை ஸாதிப்பவனும் மரகதப்பச்சைப்போல் விரும்பத்தக்க வடிவுபடைத்தவனும், திருவெஃகாவில் எழுந்தருளி இருக்கிற திவ்ய தம்பதிகளின் பெருமைகளை பாசுரங்களாக பாடக் கேட்டு, பாடிய அக்கிளியை நோக்கி ‘உன்னை வளர்த்ததன் பிரயோஜனம் கிடைக்கப் பெற்றேன்; இங்கே வா‘ என்றழைத்து அதற்கு ஒரு அஞ்சலியும் செய்து நமஸ்கரித்தாள்.

இங்கு, ஆழ்வாரும், ***விளக்கொளியை மரகதத்தைத் திருத்தண் காவில் வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக என்று மடக்கிளியைக் கைகூப்பி வங்கி னாளே*** என பூர்வர்களின்  வழி மீறாத் தன்மையைக் காட்ட, கிளியை ஒப்பிடுவதைக் காண்கிறோம்.

ஆக, ஞான ப்ரதானம் செய்யும் ஆசார்ய வழி மீறாமல், ப்ரவர்த்தகம் செய்து போக வேண்டும் என ஆழ்வார் அறிவுறுத்துகிறார்.

# சேஷ ஸம்ஹிதா வாக்யமானது,

***குரும் ப்ரகாசயேத் தீமான் மந்த்ரம் யத்னேன கோபயேத் அப்ரகாச ப்ரகாசாப்யாம் க்ஷீயதே ஸம்பதாயுஷீ***

என்கிறது. அதாவது, நல்லதொரு குரு பரம்பரையில் உதித்த குருவை (மற்றும் அவர் மூலமாக க்ரஹித்த ஸ்ரீஸூக்திகளையும்) பலர் அறிய, அவர் அநுக்கஹித்த வழி மீறாமல், ப்ரகாசப் படுத்த வேண்டும். அதாவது, சிஷ்யனின் எண்ணங்களிலும் தன் ஆசார்யனுக்காக தன்னிடம் உள்ள ப்ரதிபத்தியை வெளியிட வேண்டும். ஆக, ***காலக்ஷேப குரு பரம்பரை*** ஆத்ம உஜ்ஜீவனத்திற்கு ஹேதுவாகிறது என்றபடி ; இவ்வாறு, ***ஓராண் வழி*** இருக்க, பூர்வர்களின் வழி மீறி விஷய தானம் செய்வதும், லௌகீக காரணம் கொண்டு அந்த அநாப்தர்களை ஆதரிப்பதும், ஆசார்ய த்ரோஹம் எனக் கூறக் குறையில்லை ; இவ்விஷயத்தில், பூர்வாசார்ய வழி மீறுவதனால் ப்ரத்யவாயகரம் என்பது, ***சிஷ்யக்ருத்யாதிகார*** வரி விளக்குகிறது :

***குருவை ப்ரகாசிப்பிக்கா நிற்க செய்தே அவன் பண்ணின சாஸ்த்ரீய உபதேசத்திற்கு  விருத்தம் சொல்லுமாகில் விப்ரலம்பகம் பேருமாய்...என்கிறபடியே பாபிஷ்டனாம்***

விப்ரலம்பகமாவது, சிஷ்யர்களை வஞ்சிக்கும் தன்மையைக் குறிக்கும் ; இது ஆசார்யனுடைய பாபச் செயலாகும் என்கிறார் ஸ்வாமி தேசிகன் ; ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகமாவது, தனது பாண்டித்யத்தினால், அதாவது வ்யாகரண தர்க்க சாஸ்த்திர அறிவினால், உலக போக்கை அநுஸரித்து, பூர்வர்களின் வழியை சிதைப்பது,  இழிவானவன் செய்யும் செயலாக, ***ஆசார்ய க்ருத்யாதிகாரத்தில்*** ஸ்வாமி தேசிகன் நிந்திக்கிறார்.

***ஏகஸ்த்வ அபவர்கார்த்தம் அநுஷ்டானாது கௌஷலம்; லோக அநுஸாரஸ்த்வேகத்ர குரு: பஸ்சாதுதீரித:***

அதாவது, முமுக்ஷுவின் க்ருத்யங்களைச் செய்து கொண்டு, உலக போக்கை அநுஸரித்து விஷய மாற்றம் செய்யும் பண்டிதனும் இழிவானவனே.

# ஆக, ஸ்ரீபாஷ்யத்தை தொடங்கும் போது, மங்கள ஸ்லோகத்தில்,

***பகவத் போதாயன க்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்திம் பூர்வாசார்யா: ஸஞ்சிக்ஷிபு: தன் மத அநுசாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே***

என ஸ்ரீ ராமானுஜர் அருளினார் ; ’பகவத் போதாயனர் செய்தருளிய மிகவும் விஸ்தாரமான ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்தியை பூர்வாசார்யர்கள் சுருக்கமாக அருளிச் செய்துள்ளார்கள். அவர்களுடைய ***மதத்தை**

**அநுஸரித்து*** ஸூத்ரத்தில் உள்ள அக்ஷரங்களுக்கு வ்யாக்யானம் பண்ணுகிறோம்' என்று அருளிச் செய்துள்ளார் ; இதனால் உணர வேண்டியது, நம் ஸம்ப்ரதாயத்தில், வேத வேதாந்தங்களைப் ப்ரமாணமாக ஏற்கிறோம்; அதன் வழியிலே வ்யாஸர் ப்ரஹ்ம ஸூத்ரம் அருளினார்; அதற்கு வ்ருத்தி க்ரந்தத்தை பகவத் போதயனர் அருளினார்; அதை அநுஸரித்தே பகவத் ராமானுஜரால் ஸ்ரீ பாஷ்யம் அருளப் பட்டது.

# ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் அருளிய, தத்வ-ஹித-புருஷார்த்த விஷயமான ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில்,

***இப்படி ரஹஸ்யத்ரயத்தைப் பற்றின கீழும் மேலும் உள்ள பாசுரங்களை எல்லாம் வேதாந்த உதயன ஸம்பரதாயமான மடைப் பள்ளி வார்த்தையை ஆசார்யன் பக்கலிலே தாம் கேட்டருளினபடியே கிடாம்பி அப்புள்ளார் தன்னை கிளியைப் பழக்கி வைக்குமாப் பொலே பழக்கி வைக்க அவர் திருவுள்ளத்திலே இரக்கமடியாக பெருமாள் தெளிய ப்ராகாசிப்பித்து மறவாமற் காத்து பிழையற பேசுவித்த பாசுரங்கள்***

என கிளியை உதாஹரித்து, தான் பூர்வர் வழி மீறாமல் செய்த க்ரந்த நிர்மாணத்தை தெளிவித்தருளினார்.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

31.3.2023
வெள்ளிக் கிழமை

***முத்தீ - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்***

1. யாகம் / யக்ஞம் என்றால் ஒரு தேவதையைக் குறித்து ஒரு த்ரவ்யத்தை ஸமர்பித்தல், என்பதாகும்.

# எந்த ஒரு யாகத்திற்கும் அதில் கொடுக்கப்படும் ***த்ரவ்யமும்*** வணங்கப்படும் ***தேவதையும்*** தான் முக்கியமான பகுதிகள்.

***த்ரவ்யம்*** – பால் (பயஸ்), தயிர் (ததி), நெய் (ஆஜ்யம்), ப்ருஷதாஜ்யம் (தயிர் கலந்த நெய்) போன்றவை

***தேவதை*** – அக்நி, இந்த்ரன், ஸோமன், வருணன், வாயு, மித்ரன், ருத்ரன், ப்ரஜாபதி, விஷ்ணு போன்ற பல தேவதைகள் வேதங்களில் சொல்லப் பட்டுள்ளனர்.

# ஸர்வேஸ்வரனான கண்ணன், கர்ம யோக ப்ரகரணத்தில், யாக / யக்ஞ விளக்கமளிக்கிறான் - பகவத் கீதை - அத்யாயம் 5 (கர்ம ஸந்யாஸ யோகம்) - ஸ்லோகம் 29 :

***போக்தாரம் யக்ஞ தபஸாம் ஸர்வ லோக மஹேஸ்வரம் ஸுஹ்ருதம் ஸர்வ பூதாநாம் ஞாத்வா மாம் ஸாந்திம் ருச்சதி***

***மாம் யக்ஞ தபஸாம் போக்தாரம்*** - என்னை ஸர்வ யக்ஞங்களாலும், தபஸ்களாலும் ஆராதிக்க படுபவனாயும்

***ஸர்வ லோக மஹேஸ்வரம்*** - உலகுகட்கெல்லாம் ஒருபேரரசன் என்றும்

*ஸர்வ பூதாநாம் ஸுஹ்ருதம்* - ஸர்வர்கள் விஷயத்திலும் ஸுக்ருதாய் (நல் எண் ணம் கொண்டவனாய்) இருப்பது நான் என்பதை

*ஞாத்வா ஸாந்திம் ருச்சதி* - அறிந்து என்னை ஆராதித்து கர்ம யோகி ஸந்தோஷத்தை அடைகிறான்

ஸர்வ யக்ஞங்களாலும், தபஸ்களாலும் ஆராதிக்க படுபவனாயும், ஸர்வ லோகங்களுக்கும் மகேஸ்வரனாயும், ஸர்வர்கள் விஷயத்திலும் ஸுக்ருதாய் (நல் எண் ணம் கொண்டவனாய்) இருப்பது நான் என்பதை அறிந்து என்னை ஆராதித்து கர்ம யோகி ஸந்தோஷத்தை அடைகிறான், என விளக்குகிறான் கண்ணன்.

# ஸர்வேஸ்வரனான கண்ணன், ஞான யோக ப்ரகரணத்தில், யாக / யக்ஞ விளக்கமளிக்கிறான் - பகவத் கீதை - அத்யாயம் 9 (ராஜ வித்யா ராஜ குஹ்ய யோகம்) - ஸ்லோகம் 24 :

*அஹம் ஹி ஸர்வயக்ஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச ந து மாமபிஜாநந்தி தத்த்வேநாதஸ்ச்யவந்தி தே*

*அஹம் ஹி ஸர்வயக்ஞானாம்* - நான் அன்றோ, ஸர்வ கர்மாக்களால் ஸமர்ப்பிக்கப் படும் ஹவிஸை

*போக்தா ச ப்ரபு ச* - ஏற்று பலனளிக்கிறேன்.

*மாம் தத்த்வேந ந து அபிஜாநந்தி* - என்னை இவ்வாறு உள்ளபடி அறிகிறார்கள் அல்லர்

*அத: தே ச்யவந்தி* - ஆகையால் அவர்கள் அற்ப பலனைப் பெற்று அதையும் இழக்கிறார்கள்

நான் அன்றோ, ஸர்வ கர்மாக்களால் ஸமர்ப்பிக்கப் படும் ஹவிஸை ஏற்று பலனளிக்கிறேன் ; என்னை இவ்வாறு உள்ளபடி அறிகிறார்கள் அல்லர் ; ஆகையால் அவர்கள் அற்ப பலனைப் பெற்று அதையும் இழக்கிறார்கள்.

ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணனை தவிர்த்து மற்ற தாழ்ந்த தேவதைகளை பூஜிப்பவர்கள், அதற்கான பலனைப் பெற, கண்ணனின் உயர்த்தியையும் மற்ற தேவதைகளின் தாழ்த்தியையும் உணர்ந்து பூஜிக்க வேண்டும், என்றாகிறது ; எந்த ஒரு தேவதையை பூஜித்தாலும் ஸர்வ அந்தர்யாமியான கண்ணன் அன்றோ அவர்கள் செய்யும் பூஜைகளை ஏற்று கொள்பவனாயும் பலனை கொடுப்பவனாயும் இருக்கிறான். இதை அறியாதவர்கள் மற்ற தேவதைகளை பூஜித்து, அற்ப பலனை பெற்று அதனையும் பறி கொடுக்கின்றனர்.

# ஆக, யாகம் செய்ய அதிகாரத்தை அறிய வேண்டும் - ஒருவன் யாகம் செய்ய வேண்டும் என்றால் மூன்று தகுதிகள் இருக்க வேண்டும்

*வித்யை* – அத்யயநம் செய்து, அதன் மூலம் ஞான ரூபமான கர்மத்தை அறிந்திருக்க வேண்டும்

*அக்நி* – அக்நி ஹோத்ரம் என்ற வைதிகச் செயலைச் செய்து, அதன் மூலம் மூன்று அக்நிகளைப் பெற்றிருக்க வேண்டும்

*ஸாமர்த்யம்* – யாகத்தைச் செய்வதற்கு வேண்டிய பொருள், பண வசதி, உடல் ஆரோக்யம், உதவிக்கு மக்கள், முதலிய சக்திகள் இருக்க வேண்டும்

2. சாஸ்த்திர விதியாவது, நான்காம் வர்ணத்தவனுக்கு வேத அத்யயனத்தை தடை செய்கிறது. ஏனெனில், உபநயனம் (ப்ருஹ்மோபதேசம்) என்கிற விதி, வேத அத்யயனத்திற்கு இருப்பதால்.

மநு தர்ம சாஸ்த்திரம்,

*ந சூத்ரே பாதகம் கிஞ்சிந்ந ச ஸம்ஸ்காரம் அர்ஹதி*

என்கிறது ; அதாவது, நான்காம் வர்ணத்தவன் வேத மந்திர பூர்வகமான ஸம்ஸ்காரங்களுக்கு தகுதி அற்றவன் என்பதால் அவனுக்கு அதனால் பாபங்கள் சம்பவிப்பதில்லை.

# பக்தி யோகமான உபாஸனம் அநுஷ்டிக்க ***த்ரைவர்ணிக புருஷர்களுக்கு*** மட்டுமே அதிகாரம் இருப்பதாக ஸ்ருதி ப்ரமாணம் உள்ளது.

சாந்தோக்ய உபநிஷத்.

***உப த்வா நேஷ்யே***

அதாவது, ப்ருஹ்ம வித்யை உபதேசத்திற்கு உபநயனம் தேவையாகிறது.

# வேத வ்யாஸரின் ப்ருஹ்ம ஸுத்ர விளக்கமான, பகவத் ராமானுஜரின் ஸ்ரீபாஷ்யத்தில், ப்ருஹ்ம வித்யைக்கு அதிகாரம் பற்றி சொல்லப் பட்டிருக்கிறது.

இதை பகவத் ராமானுஜர் ஸ்ரீ பாஷ்யத்தில் ***அபசூத்ராதிகரணத்தில்*** (1ம் அத்யாயம்; 3ம் பாதம்; 9வது அதிகரணம்) தெளிவு படுத்தியுள்ளார்.

***ததபாவ நிர்தாரணே ச ப்ரவ்ருத்தே***

சூத்ர தன்மை இல்லாமையை நிச்சயித்தே ப்ருஹ்ம வித்யையை உபதேசிக்க வேண்டும்.

# உபநயனம், வேத அத்யயனம் ஆகியவற்றிற்கு தகுதி உடையவரே, யாக , யக்ஞ, ப்ருஹ்ம வித்யை அநுஷ்டானத்துக்கு தகுதி பெற்றவர் ; உத்தவ கீதையில், ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளியது :

***வைதிக: தாந்த்ரிகோ மிஸ்ர: இதி மே த்ரிவிதோ மக: த்ரயாணாம் ஈப்ஸி தேனைவ விதினா மாம் ஸமர்சரேத்***

எனக்கு செய்யக்கூடிய ஆராதனமாவது, மூன்று விதமாக இருக்கின்றன. அவைகள் ***வைதிக கர்மா***, ***தாந்திரிக கர்மா***, இவையிரண்டும் கலந்த * **வைதீக தாந்த்ரீக கர்மா*** ஆகும்.

***வைதீக கர்மாக்களாவது*** வேத மந்திரங்களை உபயோகித்து செய்யும் ஆராதனம்.

***தாந்த்ரீக கர்மாக்களாவது*** செயல் அடிப்படையில் செய்யும் ஆராதனம்.

இவையிரண்டும் கலந்து இருக்க கூடிய ஆராதனம் * **வைதீக தாந்த்ரீக கர்மாக்களாகும்***.

அனைத்து நித்ய, நைமித்திக, காம்ய கர்மாக்களும் அததற்கான விதிகளின் படி அநுஷ்டிக்க வேண்டும்.

இது பாஞ்சராத்ர சாஸ்த்திரங்களில் தெளிவு படுத்தப் பட்டிருக்கிறது.

# வேதவ்யாஸர், மஹாபாரதத்தில்,

***பாஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸனஸ்ய வக்தா நாராயண ஸ்வயம் ஸர்வேஷு ச ந்ருப் ஸ்ரேஷ்ட ஞாநீஷ் வேதேஷு த்ருஷ்யைதே***

என அருளினார்.

அதாவது, வேத சாரமான பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் தானே வெளியிட்டான், என்பதாகிறது. ***நூற்றுக்கும் மேற்பட்ட ஸம்ஹிதைகள், பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தில் உள்ளன***.

ஸ்ரீபாஷ்யம், அவிரோதாத்யாயம், தர்க்க பாதம், ***உத்பத்தி அஸம்ப்வாதிகரணத்தில்*** , ஸ்ரீ பாஞ்சராத்ர சாஸ்த்திரமும் ப்ரமாணமே, என அறுதியிட்டிருக்கிறார், ஸ்ரீ ராமானுஜர்.

3. ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதையில் (16-24) சாஸ்த்ர ப்ரமாணத்தை அடியொற்றியே நடக்க வேண்டும் என வலியுருத்துகிறான் :

***தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்ய அகார்ய விவஸ்திதௌ. க்ஞாத்வா சாஸ்த்ர விதானோக்தம் கர்ம கர்தும் இஹ அர்ஹஸி***

அதாவது,

வேத வேதாந்த சாஸத்ரத்திர ***ப்ராமாணத்தில்*** விதித்தபடி 'எது எவ்வாறு செய்ய தக்கது' மற்றும் 'எது செய்யத் தகாதது' என்பதை அறிந்து அதற்கேற்ப செயல் படவேண்டும்.

# பரமேகாந்திகளான ஸ்ரீவைஷ்ணவ அந்தணர்களுக்கு, அக்நி தேவதை நிமித்தமான அக்நிஹோத்ரம் அநுசிதமா ?

இது சம்பந்தமாக, ஸ்வாமி தேசிகன் ***சரமஸ்லோக அதிகாரத்தில்*** ,

***இத்தேவதைகள் பக்கல் பரத்வ புத்தியும் ஸாம்ய புத்தியும் ஸ்வநிஷ்டத்வ புத்தியும் ஆராத்யத்வ புத்தியும் பல ப்ரதத்வ புத்தியும் இல்லாமையாலே உபாஸ்ய விசேஷணங்களான ப்ராண வைஷ்வானர த்ரைலோக்யாதிகளால் இவனுக்கு வ்யபிசாரம் வாராதாப் போலே சாஸ்த்திர ஸித்தங்களான அக்நி இந்திர விசேஷணங்களாலும் இவனுக்கு ஐகாந்த்ய விரோதம் வாராது***

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

***இத்தேவதைகள் பக்கல்*** **-** வர்ண ஆஸ்ரம கர்ம அநுஷ்டானத்தின் போது, தேவதாந்தர நாம உச்சாரணம் செய்யப்படும் தேவதாந்தரங்களின் விஷயத்தில்

***பரத்வ புத்தியும்*** **-** இந்த தேவதைகளே பரம் பொருள் என்கிற எண்ணமும்

***ஸாம்ய புத்தியும்*** **-** ஸர்வேஸ்வரனுக்கு ஸமமானவர்கள் இந்த தேவதைகள் என்கிற எண்ணமும்

***ஸ்வநிஷ்டத்வ புத்தியும்*** **-** அந்த தேவதைகளின் ஆராதனம் ஜீவர்களின் வ்வரூப ப்ராப்தமானது என்கிற எண்ணமும்

***ஆராத்யத்வ புத்தியும்*** **-** இந்த தேவதைக்ள் ஆராதிக்கத் தக்கவர்கள் என்கிற எண்ணமும்

***பல ப்ரதத்வ புத்தியும்*** **-** இந்த தேவதைகள் பலன் அளிக்க வல்லவர்கள் என்கிற எண்ணமும்

***இல்லாமையாலே*** **-** இம்மாதிரியான சாஸ்த்திர விரோதமான கருத்துக்களைக் கொள்ளாமல் இருப்பதாலே

***உபாஸ்ய விசேஷணங்களான ப்ராண வைஷ்வானர த்ரைலோக்யாதிகளால் இவனுக்கு வ்யபிசாரம் வாராதாப் போலே*** **-** பல மோக்ஷ உபாய உபாஸநங்களில் விதிக்கப் பட்ட தேவதா நாம உச்சாரணமானது தேவதாந்தர ஸ்பர்சம் உபாஸகனுக்கு ஏற்படுத்தாது என சாஸ்த்திரம் விளக்குவது போல

*சாஸ்த்திர ஸித்தங்களான அக்நி இந்திர விசேஷணங்களாலும் இவனுக்கு ஐகாந்த்ய விரோதம் வாராது* - நித்ய நைமித்தக கர்மாக்களில் வரும் தேவதாந்தர நாம உச்சாரணம் சரணாகதனுக்கு பரமேகாந்தித்வத்தை போக்காது.

# தக்ஷ ஸ்ம்ருதியில்,

*யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹூதாஸநாந். ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்திதே*

அதாவது, 'பித்ருக்களையும், தேவர்களையும், ரிஷிகளையும், தன் நித்ய நைமித்திக கர்மா அநுஷ்டானத்தின் போது ஆராதிப்பவர்கள் அவர்களுக்கு அந்தர்யாமியான ஸர்வேஸ்வரனையே ஆராதிக்கிறார்கள்'. ஆக, நாம் செய்யும் ஸந்த்யாவந்தன கர்மாக்களில் வரும் இதர தேவதைகளின் பெயர்களும் (சூர்யன், அக்னி) மற்றும் தர்ப்பண மந்த்ரத்தில் வரும் '**வசு, ருத்ர, ஆதித்யன்**' போன்ற சப்தங்களும் ஸர்வ அந்தர்யாமியான விஷ்ணுவையே குறிக்கிறது எனப் பொருள்.

# ஸ்ரீ பாஷ்யகாரரும் தனது ***நித்யம்*** எனும் க்ரந்தத்தில் இதை அருளியுள்ளார்.

***தேவாந்ருஷீந் பித்ரூந் பகவத் ஆத்மகாந் த்யாத்வா ஸந்தர்ப்ய:***

அதாவது, தேவர்களையும் ரிஷிகளையும் பித்ருக்களையும் எம்பெருமானை அந்தர்யாமியாக உடையவராகவே எண்ணி தர்ப்பணம் செய்ய வேண்டும்.

# இதைத் தவிர்த்து, சாஸ்த்திர விதி இல்லாத கர்மங்களினால் மற்றபடி தேவதாந்தர சம்பந்தம் / சப்த ப்ரயோகம் மோக்ஷ பலனை அழிக்கும், என்பது சாஸ்த்திர ஸம்ப்ரதாய விளக்கங்கள் ; இவ்விஷயத்தில் ஸ்வாமி நம்மார்வாரின் திருவாய்மொழி பாசுரம் (2-2-4)

***தேவும் எப் பொருளும் படைக்கப், பூவில் நான்முகனைப் படைத்த, தேவன் எம் பெருமானுக்கு அல்லால், பூவும் பூசனையும் தகுமே?***

அதாவது, பலர் தெய்வமாக துதிக்கும் தேவர்களையும் மற்றெல்லாப் பொருள்களையும் படைக்க, தன் திருநாபிக் கமலத்திலே சதுர்முக ப்ருஹ்மாவை உண்டாக்கின பரதெய்வமாகிய ஸ்ரீமந் நாராயணனை அன்றி வேறு எவருக்கும் புஷ்பங்களும் திருவாராதனமும் தகுமோ ? (தகாது)

# வைதீக கர்மாக்களாவது:

***நித்ய கர்மாக்கள்*** : சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட ஸந்த்யாவந்தனம், திருவாராதனம் போன்றவைகள் (தினமும் செய்ய வேண்டுவபவை)

***நைமித்திக கர்மாக்கள்*** : சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட விவாஹ, ஸீமந்த, க்ருஹப்ரவேஸ, ஏகாதசி விரதம், ஸ்ராத்தம், தர்ப்பணம் போன்றவைகள் (ஒரு காலத்தில் செய்ய வேண்டுவபவை)

***காம்ய கர்மாக்கள்*** : கோவில் செல்லுதல், புண்ய நதியில் நீராட்டம், அன்ன தானம், ஞான சம்பாத்யம் போன்றவைகள் ( சமயம் கிடைக்கும் போது செய்யலாம்)

4. இவ்விஷயத்தில், அந்தணரின் க்ரியைகளை விளக்கும், திருமங்கை ஆழ்வாரின், ***திருவெழு கூற்றிருக்கை*** வரி

***முத்தீ நான்மறை ஐவகை வேள்வி , அறுதொழில் அந்தணர் வணங்கும் தன்மையை***

# ***முத்தீ*** – மூன்று வித அக்நிகளாவது ***கார்ஹபத்யம்*** , ***தக்ஷினாக்னி*** மற்றும் ***ஆஹவநீயம்*** என்பன.

# *நான் மறைகள்* – ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்பன.

# *ஐவகை வேள்வி* – ப்ருஹ்ம யக்ஞம், தேவ யக்ஞம், பித்ரு யக்ஞம், பூத யக்ஞம், மநுஷ்ய யக்ஞம் என்பது பஞ்ச மஹா யக்ஞம் எனப்படுவது.

*ப்ருஹ்ம யக்ஞம்* : வேத அத்யயனம் செய்வது.

*தேவ யக்ஞம்* : சாஸ்த்திரங்களில் விதிக்கப்பட்ட த்ரி கால ஸந்த்யாவந்தனம், யாகங்கள், அக்நி ஹோத்திரம் போன்ற கர்மாக்கள்.

*பித்ரு யக்ஞம்* : வஸ்த்ர நிஷ்பீடனம், தர்ப்பணம், ஸ்ராத்தம் போன்ற கர்மாக்கள்.

*பூத யக்ஞம்* : க்ருஹங்களில், சாஸ்த்திர அநுமதியோடு, வளக்கப்படும் பசு, குதிரை போன்ற ஜீவர்களுக்கு அளிக்கும் ஆகாரம்.

*மனுஷ்ய யக்ஞம்* : வேத வித்துக்களான அதிதிகளுக்கு செய்யப் படும் ததீய ஆராதனம்

# *அறு தொழில்* – தான் வேதம் ஓதுதல், பிறர்களுக்கு ஓதுவித்தல், தான் யாகம் செய்தல், பிறர்களுக்கு யாகம் செய்வித்தல், தானம் கொடுத்தல், தானம் வாங்கிக் கொள்ளுதல் என்பன.

ஆக, *த்ரேதாக்நிகளையும்* ( *முத்தீ* ) நான்கு வேதங்களையும், பஞ்ச மஹா யக்ஞங்களையும் ஷட்கர்மங்களையும் நிரூபகங்களாகவுடைய வேதியர்களாலே - அந்தணர்கள் - ஸேவிக்கப்படுபவன் எம்பெருமான் என்றதாயிற்று.

# இவ்விஷயத்தில், அதாவது *மூன்று தீ* விஷயத்தில், ஸ்வாமி திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழி (2-10-2) பாசுரம்

***கொந்து அலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம் தீபம் கொண்டு அமரர்த் தொழப் பணம் கொள் பாம்பில், சந்து அணி மென்முலை மலராள் தரணி மங்கை தாம் இருவர் அடி வருடும் தன்மையானை வந்தனை செய்து இசை ஏழ் ஆறு அங்கம் ஐந்து வளர் வேள்வி நான்மறைகள் மூன்று தீயும், சிந்தனை செய்து இரு பொழுதும் ஒன்றும் செல்வத் திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே***

கொத்தாக மலர்ந்த நல்ல மணம் வீசும் துளசி மாலையையும், சந்தனத்தையும், நல்ல மணம் வீசும் தூபத்தையும், தீபத்தையும் கொண்டு வானத்தில் உள்ள தேவர்கள் வழிபட, படமெடுத்து ஆடும் ஆதிசேஷன் பாம்பின் மேல் படுத்து கொண்டிருப்பவனை, மகாலட்சுமியும், பூமி தாயாரும் பாதத்தை மென்மையாக தடவும் எம்பெருமானை

*ஏழு இசையும்* - ஸப்த ஸ்வரம்

*ஆறு வேதங்களின் பகுதியும்* - சீக்ஷா - உச்சரிப்பு முறைகளை விளக்குவது ; வியாகரணம் - இலக்கணம் ; சந்தஸ் - செய்யுள் இலக்கணம் ; நிருக்தம் - சொல் இலக்கணம் ; ஜோதிடம் - வானசாஸ்திரம் ; கல்பம் - செயல்முறை

*ஐந்து பெரிய வேள்வியும்* - ப்ருஹ்ம யக்ஞம் ; தேவ யக்ஞம் ; பித்ரு யக்ஞம் ; பூத யக்ஞம் ; மனுஷ்ய யக்ஞம்

*நான்கு வேதமும்* - ரிக், யஜுர், ஸாம, அதர்வண

*மூன்று தீயும்* - கார்ஹபத்யம், தக்ஷினாக்னி, ஆஹவநீயம்

கொண்டு வழிபாடு செய்து கொண்டிருக்கும் எம்பெருமானை பற்றியே இரவும் பகலும் சிந்தனை செய்யும் பக்தர்கள் ஒன்று கூடும் வளம் மிகுந்த திருக்கோவிலூர் அதனுள் கண்டேன் நானே.

5. அந்தணர்களுக்கு நியமமான ***மூன்று தீ*** விஷயத்தில், ஸ்வாமி தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமாலையில் தெளிவித்து அருளியுள்ளார்.

***குளித்து மூன்று அனலை ஓம்பும் குறிகொள் அந்தணமை தன்னை ஒளித்திட்டேன் என் கண் இல்லை நின் கணும் பத்தன் அல்லேன் களிப்பது என் கொண்டு நம்பீ கடல்வண்ணா கதறுகின்றேன் அளித்து எனக்கு அருள் செய் கண்டாய் அரங்கமா நகருளானே***

அதாவது,

# ***குளித்து மூன்று அனலை ஓம்பும் குறிகொள் அந்தணமை தன்னை ஒளித்திட்டேன்***

என்றபடி ஸ்நானம் பண்ணி, மூன்று அக்நிகளை வளர்த்து காக்கப்பட வேண்டிய அந்தணத் தன்மை என்னிடம் இல்லை; ஆகிஞ்சன்ய அநுஸந்தானம்

மூன்று வித அக்நிகளாவது ***கார்ஹபத்யம்*** , ***தக்ஷினாக்னி*** மற்றும் ***ஆஹவநீயம்*** ஆகும் ;

இந்த மூன்று அக்நிகளும் சாஸ்த்திரத்தில் விதிக்கப்பட்ட தேவதா, பித்ரு மற்றும் இதர யாக யக்ஞங்களுக்காக நியமத்தோடு, அததற்கு உரிய அக்நியை, உபயோகிக்க வேண்டுவதாகிறது.

***கார்ஹபத்யம்*** (இல்லத்தின் அதிபதியான க்ருஹபதிக்கு உரியது. இந்த கார்ஹபத்ய குண்டத்திலேதான் அணையாமல் எப்போதும் ச்ரௌதாக்னி எரிந்து கொண்டிருக்க வேண்டும் ; இதிலே நேராக ஒரு ஹோமமும் கூடாது),

***ஆஹவநீயம்*** (இதிலே இருக்கிற அக்நியை எல்லா தேவதைகளுக்கும் ஹோமங்களை செய்வதற்காக ஒரு குண்டத்தில் எடுத்து வைத்துப் பண்ண வேண்டும். இந்தக் குண்டம் கிழக்குப் பக்கமாக பண்ண வேண்டும்.)

***தக்ஷிணாக்நி*** (இதிலே இருக்கிற அக்நியை பித்ரு காரியம் செய்வதற்காக ஒரு குண்டத்தில் எடுத்து வைத்துப் பண்ண வேண்டும். இந்தக் குண்டம் தெற்கே இருப்பதால் இந்த அக்நிக்கு 'தக்ஷினாக்நி' என்று பெயர்)

என்பவை த்ரேதாக்நிகளாம்

# ***நின் கணும் பத்தன் அல்லேன்***

என சாஸ்த்திரத்தில் விதித்த கர்ம ஞான யோக பூர்வகமாக பக்தி யோகத்தை அநுஷ்டிக்கத் தக்கவனும் அல்லேன் ; ஆகிஞ்சன்ய அநுஸந்தானம்

# ***களிப்பது என் கொண்டு நம்பீ கடல்வண்ணா கதறுகின்றேன்***

எம்பெருமானே! முமுக்ஷுவான அடியேன் மோக்ஷமடைய வழி தெரியாமல் வருந்துகிறேன்; அநன்ய கதி அநுஸந்தானம்; வேறு பலனில் ஆசை அற்று வேறு தேவதையை நாடாமல் இருப்பது.

# ***அளித்து எனக்கு அருள் செய் கண்டாய்***

இவ்வாறு இருந்தும், *ஸர்வரிடமும் க்ருபை என்கிற பகவத் குணம்* காரணமாக, என்னை உபேக்ஷிக்காமல் காத்து அருள் புரிவாயாக, என ப்ரார்த்திக்கிறார் ஆழ்வார்.

அந்தணனின் செயல் - ***யாவத் ஜீவம் அக்நிஹோத்ரம் ஜுஹோதி*** என்று இந்த சரீர சம்பந்தம் உள்ளவரை அக்நிஹோத்ர அநுஷ்டானம் விதிக்கப் பட்டிருக்கிறது. அதில் உள்ளது மூன்று அக்நி - ***கார்ஹபத்யம்*** , ***தக்ஷினாக்னி*** மற்றும் ***ஆஹவநீயம்***

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

1.4.2023
சனி கிழமை

***அடியவர் பிழைகள் நின் கருத்து அடையாது என்பது கேசவம் தோஷ போக்யமா? - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா***

1. பரம காருணிகனான எம்பெருமான், மஹா ப்ரளய காலத்தில் ஸகல சேதநர்களையும் தன் திருவயிற்றில் வைத்து காப்பாற்றி, ஸ்ருஷ்டி தொடக்கத்தில், தேஹ இந்த்ரியங்களைக் கொடுத்து ரக்ஷிக்கிறான் ; ஸ்வாமி திருமங்கை ஆழ்வார், பெரிய திருமொயியில்,

***நில்லாத பெருவெள்ளம் நெடுவிசும்பின் மீது ஓடி நிமிர்ந்த காலம், மல்லாண்ட தடக்கையால் பகிரண்டம் அகப்படுத்த காலத்து, அன்று எல்லாரும் அறியாரோ எம்பெருமான் உண்டு உமிழ்ந்த எச்சில் தேவர், அல்லாதார் தாம் உளரே? அவன் அருளே உலக ஆவது அறியீர்களே?***

என அருளினார் ; அதாவது,

மஹாப்ரளய வெள்ளமானது ஆகாசத்தின் மீது வழிந்தோடி ப்ரவஹித்த போது எம்பெருமான் தனது பெரிய திருக்கையினாலே பிரளய நீர் சூழாதபடி மஹாப்ரளயம் காலம் அல்லாத மற்ற அண்டங்களை தனிப் படுத்திக் கொண்ட அந்த ஸமயத்திலே தேவதைகளெல்லாம் எம்பெருமானது திருவயிற்றில் புகுந்து புறப்பட்ட எச்சிலாகிய தேவதைகள் தானே! லோகமானது ஸத்தை பெற்றிருப்பது எம்பெருமானுடைய க்ருபையின் காரியம் என்பதை அறிகின்றிலீர்களோ?

# ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில் (4-10-4)

***பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே கபால நல் மோக்கத்துக் கண்டுகொண்மின் தேச மா மதிள் சூழ்ந்து அழகு ஆய திருக்குருகூர் அதனுள் ஈசன்பால் ஓர் அவம் பறைதல் என் ஆவது இலிங்கியர்க்கே?***

என அருளினார்.

இதற்கு வ்யாக்யானமாவது - உங்களால் பரதெய்வமாகப் பேசப்படுகின்ற சிவனுக்கும், சதுர்முகனுக்கும், மற்ற அனைத்து தேவதைகளுக்கும், எம்பெருமானே தலைவன், என்றபடி.

# மந்த்ர ராஜ பத ஸ்தோத்திரத்தில், சிவன் கூறும் வரிகள் :

***தாஸபூதா ஸ்வதஸ் ஸர்வே ஹ்யதாத்மானஹ பரமாத்மனஹ. அதஹ அஹமபி தே தாஸஹ இதி மத்வா நமாம்யஹம்***

அதாவது,

எல்லா ஜீவாத்மாக்களும் பரமாத்மாவிற்கு இயற்கையிலேயே தாஸர்கள். அவ்வழியிலே, நானும் அவனுக்கு தாஸனே.

# சௌநக மஹரிஷி அருளியதாவது :

*ஆப்ருஹ்ம ஸ்தம்ப பர்யந்தா ஜகதந்தர வ்யவஸ்திதா: ப்ராணின: கர்ம ஜநித சம்சார வச வர்தின: யதஸததோ ந தே த்யானே ஞானினாம் உபகாரகா: அவித்ய அந்தர்கதா: ஸர்வே தே ஹி சம்சார கோசரா:*

அதாவது, சதுர்முகன் முதல் புழு பூச்சி வரை அனைவரும் கர்மத்துக்கு வசப் பட்டவர்கள். அவர்களை த்யானம் செய்வதில் உதவி உண்டாகாது.

# சம்சாரி ஜீவர்களிடம் பிரிக்க முடியாத சம்பந்தம் கொண்டுள்ள ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன், இந்த ஜீவர்களிடம் மிகுந்த கருணை கொண்டவனாக, சாஸ்த்திரங்கள் கூறுகின்றன.

அதாவது, அவனது க்ருபை (கருணை) இருவிதம்:

***நிர்ஹேதுக க்ருபை*** (காரணம் இல்லாமல் வரும் கருணை)

***ஸஹேதுக க்ருபை*** (காரணத்தை முன்னிட்டு வரும் கருணை)

ஆனால் இந்த இரண்டு க்ருபைகளுக்கும் உள்ள விஷயங்கள் வேறுபட்டிருக்கின்றன :

அதாவது,

# ***நிர்ஹேதுக க்ருபை*** (காரணம் இல்லாமல் வரும் கருணை) என்பதற்கு விஷயமாவது -

ஆத்மாவை நித்யமாக வைத்திருத்தல், அவனது ஞானத்தை நித்யமாக வைத்திருத்தல், ப்ரளய தசையில் அசித் துல்யமாக இருந்த சம்சாரி ஜீவர்களுக்கு ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் சரீரத்தையும் புலன்களையும் கொடுக்க ஸங்கல்பித்தல், இந்த ப்ரபஞ்சத்தை உண்டாக்குதல், சம்சாரி ஜீவர்களின் நலனுக்காக சாஸ்த்திரத்தை வெளியிடுதல், அந்த சாஸ்த்திரத்தில் எளிமையான மோக்ஷ வழியை அமைத்துக் கொடுத்தல், முக்தரை ஶ்ரீவைகுண்டத்திலிருந்து மீண்டும் சம்சாரதிதிற்கு அநுப்பாமல் இருத்தல் போன்றவைகள் எம்பெருமானுக்கே உள்ள, ஜீவர்களிடம் எதையும் எதிர் பார்க்காத, ஒரு கருணையின் காரியம்.

# ***ஸஹேதுக க்ருபை*** (காரணத்தை முன்னிட்டு வரும் கருணை) என்பதற்கு விஷயமாவது -

ஸர்வேஸ்வரன் சாஸ்த்திரத்தில் விதித்த கார்யங்களை செய்து போகின்ற சம்சாரி ஜீவர்கள் பக்கலிலே உண்டாகும் கருணை. அதாவது, ஸஹேதுக க்ருபைக்கு காரணமாவது, அவனால் சாஸ்த்திரத்தில் சொல்லப் பட்ட, விதி (செய்ய வேண்டுவன) மற்றும் நிஷேத (செய்யக் கூடாதவன) என்கிற பாகுபாடு, பயன் உள்ளதாக இருப்பதற்கு.

# ஆக, ***மோக்ஷயிஷ்யாமி*** என கண்ணன் அருளியது, ***நிர்ஹேதுக க்ருபையால்*** மோக்ஷ காரணமாக, ஒரு லகு உபாயத்தை விதித்து, பரம காருணிகனான எம்பெருமான், அம்முகத்தாலே, பல கோடி ஜந்மாக்களை பெற வழியாக்கும் கர்மாக்களை, தன் ***ஸஹேதுக க்ருபையாலே*** சரணாகதன் விஷயத்தில் களைகிறான், என்றபடி.இதனை சாஸ்த்திரம் கொண்டு அறிய வேண்டும்.

2. ஸகல ஜீவர்களிடமும் காருண்யம் கொண்டவன் அந்த ஸர்வேஸ்வரன்.

# ச்வேதாசுதர உபநிஷத்தில்,

*ஸர்வேந்த்ரிய குணாபாஸாம் ஸர்வேந்த்ரிய விவர்ஜிதம் ஸர்வஸ்ய ப்ரபுமீசானாம் ஸர்வஸ்தம் சரணம் ஸுக்ருத்*

என்கிறது, அதாவது

கருணைமிக்க ஸர்வேஸ்வரன் அனைவராலும் சரணம் புக ஏற்றவனாக உள்ளான்.

# ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (9-38)

*மாம் ஹி பார்த்த வ்யபாச்ரித்ய யே அபி ஸ்யு பாப யோனய. ஸ்திரியோ வைச்யாஸ்ததா வேளாளாஸ்தே அபி யாந்தி பராம் கதிம்*

எனப்படுகிறது.

அதாவது,

பார்த்த ! அனைத்து வர்ணத்தவரும், ஆண் பெண் வித்யாஸமின்றி, என்னை சரணடைபவர்கள், உயர்ந்த கதியான மோக்ஷத்தை அடைவார்கள், என்கிறான் கண்ணன். அதாவது, பக்தி யோகத்திற்கு தடையான பாபங்கள் உள்ள பக்தி யோகத்துக்கு அதிகாரமற்ற அந்தண பெண்களாயினும், பக்தி யோகத்துக்கு ஜாதி அதிகாரமுள்ள வைச்யனாயினும், ஜாதி யோக்யதை அற்ற பக்தி யோக அதிகாரமற்ற வேளாளனாயினும், சரணாகதி அநுஷ்டானத்தால் மோக்ஷம் பெறலாம்.

# ஸந்த்குமார ஸம்ஹிதையில்,

*யகுயோநிஷ்வபி ஸஞ்சாதோ ஸ: ஸக்ருத் சரணம் கத: த மாதா பித்ரு ஹந்தாரம்பி பாதி பவர்திஹா*

என்கிறது, அதாவது

எந்த ஜாதி பிறந்தவராயினும், தாய் தந்தையை கொல்லும் அளவிற்கு தீய குணங்களைக் கொண்டவனாயினும், ஒரு முறை ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனிடத்தில் சரணாகதி அநுஷ்டித்தானேயானால், கருணை உள்ளம் கொண்ட ஸர்வேஸ்வரன், அவனை சம்சார பந்தத்திலிருந்து விடுவித்து மோக்ஷமளிக்கிறான்.

# இதையே ஸ்வாமி நம்மாழ்வார் திருவாய்மொழியில் (2-2-9),

*காக்கும் இயல்வினன் கண்ண பெருமான் சேர்க்கை செய்து தன் உந்தி உள்ளே வாய்த்த திசைமுகன் இந்திரன் வானவர் ஆக்கினான் தெய்வ உலககுகளே*

என அருளியுள்ளார்.

அதாவது,

எல்லா உயிர்களையும் பாதுகாத்தலையே தனக்கு இயல்பாகவுடையவன் கண்ணபிரான் ஆகிய நம் இறைவன்; அவன், அழிக்கும் காலம் வந்தவாறே, எல்லா உயிர்களையும் தன் திருமேனியில் சேரச் செய்து, பின்னர், தனது திருநாபிக்கமலத்திலே, எல்லாக்குணங்களும் பொருந்திய பிரமனையும், இந்திரனையும், தேவர்களையும், தேவர்களுக்குரிய உலகங்களையும் உண்டாக்கினான்.

3. பகவானின் இந்த கருணையாவது, ஸர்வ ஜீவ சாமான்யம் ; அதாவது, நிர்ஹேதுக க்ருபா விஷயம் ; ஆனால், விதி நிஷேத சாஸ்த்திரங்களை வெளியிட்டு, அதனை பின்பற்ற ஸர்வ நியந்தாவான அவன் சம்சாரி ஜீவர்களை விதிக்கிறான்.

# விஷ்ணு தர்மத்தில் கூறுவதாவது :

*ஸ்ருதி ஸ்ம்ருதி மமை ஆக்ஞா யஸ்தாமுவ்லங்ய வர்த்தே ஆக்ஞாஸ்சேதீ மம த்ரோஹீ மத் பக்த: அபி ந வைஷ்ணவ:*

என்ற எம்பெருமானின் திருவாக்குப் படி, 'வேதாந்தங்களும், ஸ்ம்ருதிகளும் என் கட்டளைகளாகும்; அவற்றை மீறி நடப்பவர்கள் யாராக இருப்பினும் எனது ஆணைகளை மீறும் த்ரோஹி ஆவான் ; அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்தாலும் அவன் விஷ்ணு கடாக்ஷத்திற்கு உகந்தவன் அல்லன்' – என்கிறான் ஸர்வேஸ்வரன்.

# மேலும், ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன் வெளியிட்ட பாஞ்சராத்ர ஆகம சாஸ்த்திரப்படி, பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தன் திருவாக்கினால் கூறப்பட்டது:

*அவிப்லவாய தர்மாணாம் பால நாய குலச்ய ச, சங்க்ரஹாய ச லோகஸ்ய மர்யாதா ஸ்தாப நாய ச, ப்ரியாய மம விஷ்ணோச்ச, தேவ தேவஸ்ய சாரங்கிண, மநீஷீ வைதிகாசாரம் மநஸா அபி ந லங்கயேத்*

அதாவது, 'தர்மங்கள் மாறாமல் இருக்கவும், குலங்களை காப்பாற்றவும், இந்த உலகை தூய்மையான வழியில் நிலையாக நிறுத்தவும் , சாஸ்த்ரங்களுக்கான மரியாதை என்றும் பாதுகாக்கவும், சாஸ்த்ரத்தில் விதிக்கப் பட்டவைகளை மீறுவதற்கு மனதாலும் நினைக்கக் கூடாது. ஏன் எனில் உகந்து ஏற்றுக் கொள்ளும் எம்பெருமானின் மகிழ்ச்சிக்காக' என்கிறாள் மஹாலக்ஷ்மி தாயார்.

# ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதையில் (16-24) சாஸ்த்ர ப்ரமாணத்தை அடியொற்றியே நடக்க வேண்டும் என வலியுருத்துகிறான் :

*தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்ய அகார்ய விவஸ்திதௌ. க்ஞாத்வா சாஸ்த்ர விதானோக்தம் கர்ம கர்தும் இஹ அர்ஹஸி*

அதாவது,

வேத வேதாந்த சாஸத்ரத்தில் விதித்தபடி 'எது எவ்வாறு செய்ய தக்கது' மற்றும் 'எது செய்யத் தகாதது' என்பதை அறிந்து அதற்கேற்ப செயல் படவேண்டும்.

4. இப்படிப்பட்ட பரம காருணிகனான எம்பெருமானுக்கு, விதி நிஷேத சாஸ்த்திரங்களை மீறுவோருக்கு, அநிஷ்ட பலன்களை அளிக்கிறான் என்பதுவும் ப்ரமாண ஸித்தம்.

# ஸர்வேஸ்வரனான கண்ணன், அஸுர குணம் உடையவனுக்கு ஏற்படும் கதி என்ன என்று இந்த ஸ்லோகத்தில் (16-19) உறுதி படுத்துகிறான்.

*தானஹம் த்விஷத: க்ரூரான் சம்சாரேஷு நராதமான். க்ஷிபாம்யஜஸ்ரம் அஷுபான் ஆஸுரீஷ்வேவ யோனிஷு*

அதாவது,

'என்னிடம் த்வேஷம் உள்ளவர்கள், என்னை பற்றி சிந்திக்காமல் சம்சார ஸுகத்தில் மட்டும் ஈடுபடுபவர்களை நான் கடுமையாகத் தண்டிக்கிறேன், ஆஸுர யோனியில் பிறக்க செய்கிறேன்.' - என்கிறான் கண்ணன்.

# பாபாத்மாக்களை தண்டிக்க, வராஹ புராணத்தில், ஸர்வேஸ்வரன் ருத்ரனிடம் கூறுவதாவது,

***த்வம் ஹி ருத்ர மஹாபாஹோ மோஹ சாஸ்த்ராணி காரய தர்ஷயித்வா அல்பம் ஆயாஸாம் பலம் சீக்ரம் ப்ரதர்சய***

ருத்ரனே ! நீ ஜனங்களுக்கு மோஹம் உண்டாகும் படியான (உண்மையான ஸர்வவேஸ்வரனை உணர முடியாதவாறு) சாஸ்த்திரங்களைச் செய்; அல்பமான செயல்களுக்கு உலக பலன்களை கிடைப்பதற்கு வழி காட்டு.

இவ்வாறு, பாபாத்மாக்களை தண்டிக்கும் பொருட்டு, மோஹன சாஸ்த்திரங்கள் வெளியாகின்றன.

5. இப்படிப்பட்ட கர்ம அநுகுண பல ப்ரதனான எம்பெருமான் சம்சார பந்தத்திலிருந்து விடுகைக்கு, தன் ஸஹேதுக க்ருபையால், உபாயத்தை விதிக்கிறான் :

# ஸர்வேஸ்வரனான கண்ணன், ஸகிஞ்சனர்களுக்கு பக்தி யோகத்தை உபாயம் என்று இந்த ஸ்லோகத்தில் (9-34) உறுதி படுத்துகிறான்.

***மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு மாமேவைஷ்யஸி யுக்த்வா ஏவம் ஆத்மாநம் மத்பராயண:***

என்னிடம் அன்பு உடையவனாய் மனத்தை இடைவிடாமல் என்னிடம் செலுத்தியவனாக இரு ; அதனால், என்னை உபசரித்து ஆனந்தமாய் என்னை ஆராதிப்பவனாகி, அந்த அனுபவத்தினால் என்னை வணங்கு ; இவ்வாறு மனத்தை ஈடுபடுத்தி, என்னையே அடைவாயாக.

# ஸர்வேஸ்வரனான கண்ணன், அகிஞ்சனர்களுக்கு ப்ரபத்தியை உபாயம் என்று இந்த ஸ்லோகத்தில் (18-66) உறுதி படுத்துகிறான்.

***ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ அஹம் த்வாம் ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:***

நிவ்ருத்தி தர்மங்களாக இது வரை கூறப்பட்ட கர்ம ஞான பக்தி யோகங்களை விட்டு கர்தா, ப்ராப்யன், ஆராத்யனான என்னையே எல்லாம் என்றபடி உபாயமாகப் பற்று ; மோக்ஷ பலனுக்கு தடையான எல்லாப் பாபங்களினின்றும் நான் உன்னை விடுவிக்கிறேன் ; துயரப்படாதே

# ஸர்வ ஸ்வதந்திரனான எம்பெருமான், சம்சாரி ஜீவர்களிடமிருந்து ஒரு செயலை எதிர்பார்த்து பலனளிப்பநு உசிதமோ என்னில், ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ***ப்ராதான ப்ரதிதந்த்ராதிகாரத்தில்***

***உடையவன் உடமையை ரக்ஷிக்கையும், ஸமர்த்தன் அஸமர்தனை ரக்ஷிக்கையும் ப்ராப்தமிரே. ரக்ஷிக்கும் போது கர்ம வஸ்யரை ஒர் உபாயத்தில் மூட்டி ரக்ஷிக்கை ஈஸ்வரனுக்கு ஸ்வ ஸங்கல்ப நியதம்***

என்று அருளிச் செய்தார் ; அதாவது, அனைத்து சேதந அசேதநங்களும் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், தன் ஆதார சக்தியாலும், தன் நியமிக்கும் சக்தியாலும், தன் அடிமை கொள்ளும் சக்தியாலும், 'சொத்துக்கு உடையவன்' எனப் பெயர் பெற்றிருந்தாலும், அவனது உடமையான சம்சாரி ஜீவர்களை பிறவிப் பிணியிலிருந்து காக்க, சம்சாரி ஜீவர்கள் செய்து போக, சாஸ்த்திரத்திரத்தில் ஒரு உபாயத்தை விதித்திருப்பது, பரிபூரண சுதந்திரனான எம்பெருமானின் தன் இச்சை காரணமாகவே.

# இவ்விஷயத்தில், பாஞ்சர்த்ர சாஸ்த்திரமானது,

***ஸர்வக்ஞோபி விச்வேச: ஸதா காருணகோபி ஸந். சம்சார தந்திர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே***

என்கிறது ; அதாவது, கருணை உள்ளம் கொண்ட ஸர்வக்ஞனான எம்பெருமான், இந்த சம்சாரத்தை நடத்தும் பொருட்டு, சாஸ்த்திர விதிப்படி, சம்சாரி ஜீவர்களிடம், ஹரி ஸ்மரணத்தோடு, ரக்ஷண ப்ரார்த்தனையை, எதிர் பார்த்து பலனளிக்க காத்திருக்கிறான்.

# ஆக, அகிஞ்சனர்கள் விஷயத்தில், பகவத் கருணையானது லகு உபாயத்தை விதித்து கார்யகரமாகிறது ; அதை பரதமுனியின் வரிகளைக் கொண்டு அறியலாம்:

*அநந்ய ஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாசபூர்வகம் த தேகோபாயதா யாச்நா ப்ரபத்திர் சரணாகதி*

அதாவது, மஹாவிச்வாசத்தை முன்னிட்டுக் கொண்டு சரணாகதி அநுஷ்டானம் அகிஞ்சனர்கள் செய்ய வேண்டுவதாகும்.

# ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன் வெளியிட்ட பாஞ்சராத்ர ஆகம சாஸ்த்திரப்படி,

*நிக்ஷேபாபரபர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுக்த: ஸந்யாஸஸ் த்யாக இத்யுக்த: சரணாகதி ரித்யபி*

என்கிற ப்ரமாணத்தினால், கூறப்படுவது என்னவென்றால், ஐந்து அங்கங்களுடன் கூடிய ஆத்ம சமர்ப்பண அநுஷ்டானம் என்கிற மறு பெயருள்ள ந்யாஸமே, ஸந்யாஸம் என்றும், த்யாகம் என்றும், சரணாகதி என்றும் சொல்லப் படுகிறது.

# ஸாத்யகி தந்த்ரத்தில்,

*அநேநைவ து மந்த்ரேண ஸ்வாத்மாநம் மயி நிக்ஷிபேத் மயி நிக்ஷிப்த கர்தவ்ய: க்ருதக்ருத்யோ பவிஷ்யதி*

எனக் கூறப்படுகிறது. அதாவது, மந்த்ரத்தைக் கொண்டு சரணாகதியாகிற ஆத்ம ஸமர்ப்பணம் செய்ய வேண்டும். ஆக, ஐந்து அங்கங்களோடு சரணாகதன் தன் ஆத்ம ரக்ஷணத்தை ஸர்வேஸ்வரனிடம் ஸமர்ப்பிக்க வேண்டும்.

# பாஞ்சராத்ர ஆகம சாஸ்த்திரப்படி,

*ஆத்மாத்மீய பரந்யாஸோ ஹ்யாத்மா நிக்ஷேப உச்யதே*

என்கிற ப்ரமாண வாக்கியத்தினால், ஆத்மா, ஆத்மாவைச் சேர்ந்தவை ஆகிய இவைகளின் ரக்ஷண பரத்தை பகவானிடம் ஸமர்ப்பிப்பது தான் ஆத்ம ஸமர்ப்பணம் என சொல்லம்படுகிறது, என தெளிவாகிறது.

# பாஞ்சராத்ர ஆகமசாஸ்த்திரப்படி,

*ப்ரபத்திம் தாம் ப்ரயுஞ்சீத ஸ்வாங்கை பஞ்சபிராவ்ருதாம்*

என்கிற ப்ரமாணமும், மோக்ஷத்திற்காக ஐந்து அங்கங்களோடு கூடிய சரணாகதியே செய்ய வேண்டுவதாக விதிக்கிறது.

6. ஆக, பரம காருணிகனான எம்பெருமானுக்கு, நிக்ரஹ ஸங்கல்பம் மற்றும் அநுக்ரஹ ஸங்கல்பம் இரண்டும் உண்டு ; அவன் அடியார்கள் விஷயத்தில், அதாவது அவனிடம் மோக்ஷ உபாயமான சரணாகதி அநுஷ்டித்தவர்கள் விஷயத்தில், நிக்ரஹ ஸங்கல்பம் குறைவாகவும் மற்றும் அநுக்ரஹ ஸங்கல்பம் அதிகமாகவும் இருப்பது ப்ரமாண ஸித்தம்.

# சரணாகதன் விஷயத்தில் கர்மாக்கள் விலகும் காலங்களை, ஸ்வாமி தேசிகனின் ***அபராத பரிஹார*** காரிகை காட்டுகிறது.

*ப்ராரப்தேதர பூர்வபாபமகிலம் ப்ராமதிகம் ச உத்தரம். ந்யாஸேன க்ஷபயன் அநப்யுகத ப்ராரப்த கண்டம் ச ந: தீபூர்வோத்தர பாப்மநாம் அஜநநாத் ஜாதே அபி தந்நிஷ்க்ருதே: கௌடில்யே ஸதி சிக்ஷயா அநகயன் க்ரோடி கரோதி ப்ரபு:*

இதன் பொருளாவது :

***ப்ராரப்தேதர பூர்வபாபமகிலம்* -** ப்ராரப்தத்தை விட வேறான ஸஞ்சித கர்மாக்கள் அனைத்தும்

***ப்ராமதிகம் ச உத்தரம்* -** சரணாகதிக்கு பிறகு செய்கிற அபுத்தி பூர்வக அபசாரங்களான பாபங்கள்

***அநப்யுகத ப்ராரப்த கண்டம் ச ந:* -** மற்றும் முன்பு செய்த அநப்யுபகத ப்ராரப்த கர்மாக்கள்

***ந்யாஸேன க்ஷபயன்* -** சரணாகதி அநுஷ்டானத்தினாலே விலக்கப் படுகிறது

***தீபூர்வோத்தர பாப்மநாம் அஜநநாத்* -** மேலும், ஸாத்வீகர்களான சரணாகதர்களுக்கு பாங்கள் செய்யும் எண்ணம் உதியாது

***ஜாதே அபி தந்நிஷ்க்ருதே:* -** பூர்வ பாப வசத்தினால், அவ்வாறு ஏற்பட்டாலும், அதற்காக வருந்தி, ப்ராயஸ்சித்த ப்ரபத்தி மூலம், மன்னிப்பு கேட்டுவிடுவர்

***கௌடில்யே ஸதி* -** குடிலனாக அந்த சரணாகதன் இருந்து, ப்ராயஸ்சித்த ப்ரபத்தி மூலம், மன்னிப்பு கேட்காத போது

***சிக்ஷயா அநகயன்* -** இப்பிறவியிலேயே தண்டனையால் அப்பாத்தை களைந்து

***க்ரோடி கரோதி ப்ரபு:* -** பரம காருணிகனான எம்பெருமான் தேஹ அவஸாந்த்தில் மோக்ஷமளிக்கிறான்.

# சரணாகதி அநுஷ்டித்த பிறகு தெரிந்தே செய்யும் பாபங்களை விநாசத்திற்கு விஷயமாக்க, இரு வழிகள் சாஸ்த்ரங்களில் கூறப் படுகின்றன:

செய்த பாபத்திற்காக மனதினால் வருந்தி மற்றுமொரு ***ப்ராயச்சித்தமான*** சரணாகதியை அவனிடத்தில் அநுஷ்டிப்பதனால், ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன், அந்த பாபங்களைக் காரணமாகக் கொண்டு துன்பத்தைக் கொடுக்காமல், மன்னித்து விடுகிறான்.

*அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்*

என்கிறது சாஸ்த்ரம்.

மற்றொன்று, அதாவது ***ப்ராயச்சித்தமான*** சரணாகதியை அவனிடத்தில் அநுஷ்டிக்கத் தவறினால், இப்பிறவியிலேயே அதற்காக சிக்ஷா ரூபமான பர்ஹாரம். சரணாகதனுக்கு பரிஹரிக்கப் படாத புத்தி பூர்வக அபசாரத்திற்கான தண்டனைகள் சொல்லும் ஸ்ருதி வரிகள் :

*இஹைவ கேசித் உபக்ளேசா பவந்தி; கஞ்சா பவந்தி; காணா பவந்தி; அவிதேய பார்யா பவந்தி; அவிதேய புத்ரா பவந்தி*

புலன்கள் பாதிக்கப் படுவதும், மனம் நோகப் பெறுவதும், சரணாகதனுக்கு, இங்குள்ள காலம், பரிஹரிக்கப் படாத புத்தி பூர்வக அபசாரத்திற்கான தண்டனைகள் ; இதனை, ஸ்வாமி தேசிகன் ***ஶ்ரீ ரஹஸ்ய ரத்னாவளியில்***

*பிரபத்திக்கு கோரின பலத்துக்கு ஒன்றாலும் பிரதிபந்தம் இல்லை*

அதாவது, எக்காரணத்தினாலும் சரணாகதனுக்கு மோக்ஷ பலன் கிட்டாமல் போகாது,

என தெளிவு படுத்தியுள்ளார்.

7. ஒரு சில ப்ரமாணங்கள், ப்ரபன்னர்களின் உத்தராகமான பாபங்கள், மன்னிக்கப் படுகிறது போன்ற தோற்றமளிக்கிறது :

# விபீஷண சரணாகதியை ஏற்றுக் கொள்ள சுக்ரீவாதிகளிடம் விவாதிக்கும் போது, ஶ்ரீராமனின் கருத்து,

*மித்ரபாவேன ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சன. தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதா வேதத் அஹர்ஹிதௌ*

என்றிருந்தது; அதாவது, 'தோழனாக ஒருவன் என்னிடம் வந்தால் கூட, அவன் தோஷமுள்ளவனாயினும், அவனை நான் காத்தருள்வேன்' என்கிறான்.

# பெரியாழ்வார் திருமொழியில்,

*தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார் என்பர் போலும் மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்கண் வைத்த என்னுடைய திருவரங்கற் கன்றியும் மற்றொருவர்க்கு ஆளாவாரே*

என அருளியிருக்கிறார். அதாவது, பெரிய பிராட்டியரே எம்பெருமனிடத்தில், அவன் அடியார்கள் செய்த குற்றங்களை எடுத்துரைத்தாலும், தன் அடியார்கள் அவ்வாறு குற்றங்களை செய்ய மாட்டார்கள், அப்படி செய்தாலும் அது தனக்கு ஏற்புடையதே, என எம்பெருமான் வாதிடுவதாக,

ஆழ்வார் அருளியிருக்கிறார்.

# அதனால், ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், எம்பெருமானின் வாத்ஸல்யமாவது,

*கேசவம் தோஷ போக்யம்*

அதாவது 'அடியார்களின் குற்றங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வது' எனக் கூறுகின்றனர்.

# இந்த விளக்கம் ப்ரபன்னனுக்கு புத்த பூர்வக அபசார நிவர்த்திக்கான விதிகளைக் கொண்ட பஹுவித ப்ரமாண விரோதமாகும் ; பகவானின் வாத்ஸல்யமாவது, ப்ரபன்னனின் குற்றங்கள் அவனுக்கு மோக்ஷ பலனுக்கு தடையாகாது என உரைப்பதில் தாத்பர்யம் ;

# ஸ்வாமி தேசிகனின், மும்மணிக்கோவையில்

*பாற்கடல் தன்னில் பல் மணி அன்ன சீர்க் கணம் சேர்ந்த சீலம் எல்லை இலை ; அடியவர் பிழைகள் நின் கருத்து அடையாது அடைய ஆண்டு அருளும் அரசனும் நீயே*

என அடியார்கள் விஷயத்தில் பகவத் ஸௌலப்யத்தை விஸ்தரித்து திருவயிந்தையில் மங்களாசாஸநம் செய்துள்ளார்.

*பாற்கடல் தன்னில் பல் மணி அன்ன சீர்க் கணம் சேர்ந்த* - திருப்பாற்கடலில் உள்ள பல வகை ரத்தினங்கள் போல, திருக் கல்யாண குணக் கூட்டம் சேர்ந்த

*சீலம் எல்லை இலை* - உயர்த்திக்கு வரம்பு கிடையாதபடி ஸர்வேஸ்வரன் உள்ளான்

*__அடியவர் பிழைகள் நின் கருத்து அடையாது__* - ப்ரபன்னர்களுக்கு சாஸ்த்திர விதி மீறல்கள் உண்டானாலும், அதனால் மோக்ஷ பலன் ஸித்தியாதோ என்னில், அது ஆகாது ; அவ்வாறு உன் நற்குணங்கள் தவிர்த்து விடும்

*__அடைய ஆண்டு அருளும் அரசனும் நீயே__* - இவ்வாறு அனைத்தையும் நிர்வஹிக்கும் தன்மை உடைய எம்பெருமான் பரம காருணிகனும் ஆவான்.

# பகவத் வாத்ஸல்யத்தின் தாத்பர்யத்தை உணராவிட்டால், அதாவது *__கேசவம் தோஷ போக்யம்__* என அர்த்தம் கற்பித்தால், அது

*__விதி__* (செய்ய வேண்டுவது) மற்றும்

*__நிஷேத__* (செய்யத் தடை)

வேத வேதாந்த வரிகளுக்கு விரோதமாக, அவன் அடியார்களுக்கு பாபச் செயல்களை செய்வதற்கு, ஸர்வேஸ்வரன் அநுமதிப்பதாக அர்த்தம் கொள்ள நேரிடும். இந்த கருத்து பல விதமான ப்ரமாணங்களுக்கு முரணாகும்:

சீக்ஷா வல்லி, தைத்திரீய உபநிஷத்,

*__ஸத்யம் வத__*, *__தர்மம் சர__* (உண்மையே பேசு; தர்மப்படியே ஒழுகு)

என்கிறது.

*__மாத்ரு தேவோ பவ__*,

*__பித்ரு தேவோ பவ__*,

*__ஆசார்ய தேவோ பவ__*,

*__அதிதி தேவோ பவ__*

(அன்னை, தந்தை, குரு அதிதி ஆகியோரை தெய்வமாகப் போற்ற வேண்டும்)

என்பதும் உள்ளன.

இப்படி இருக்க, குற்றங்களை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளும் எம்பெருமானை மகிழ்விக்க, இந்த விதிகளை பின் பற்றாமல், குற்றம் செய்து போக வேண்டும், என அர்த்தமாகும். இது ப்ரத்யக்ஷ பண்பாட்டிற்கும் முரணானது.

மேலும், விதி (செய்ய வேண்டுவன) நிஷேத (செய்யக் கூடாதன) சாஸ்த்திரங்களை பின்பற்றாமல் இருக்க வேண்டுவதான அர்த்தம் தொனிக்கும். அவைகளை பாபச் செயலாக சாஸ்த்திரங்கள் உரைக்கின்றன.

*__ந தைவம் தேசிகாத் பரம்__*

*__தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்__*

******

2.4.2023
ஞாயிறு கிழமை

***ப்ருஹ்மத்தை அறிந்ததாக உரைப்பவன் அறியாதவனாவான் ; அறியவில்லை என்பவன் அறிந்தவனாவான் போன்றதா 'அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம் அவிஜாநதாம்' என்கிற ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரம் ? - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா***

1. ***ப்ரமாணமாவது நம்பத் தகுந்த அத்தாட்சி*** ; ப்ரமாணங்கள் மூன்று வகைப்படும். அவை:

# ***ப்ரத்யக்ஷம்*** : நம் புலன்களைக் கொண்டு ஒரு உண்மையை அறியும்போது, நம் புலன்கள் ப்ரத்யக்ஷ ப்ரமாணமாகும்.

***ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினால் உண்டாகும் அறிவு*** - நம் புலன்களால் அறியக் கூடியவை - உதாரணமாக, 'என் கண்ணால் பார்த்தேன்' என்றும், 'என் காதால் கேட்டேன்' என்றும் உறுதி அளிக்க நாம் கூறக் கேட்டிருக்கிறோம்.

இதில், புலன்களின் செயல்கள் முக்கியமாகிறது ; ஆனால், புலன்களின் குறைபாடுகள் ***விபரீத ஞானத்திற்கு*** ஹேதுவாகிறது.

# ***அநுமானம்*** : ஒரு விஷயத்தை அநுமானித்து ஒரு உண்மையை அறிகிறோம் என்றால் அது அநுமான ப்ரமாணமாகும்.

***அநுமான ப்ரமாணத்தினால் உண்டாகும் அறிவு*** - ஒரு காலத்தில் நாம் புலன்களால் அறிந்தவற்றை வேறொரு காலத்தில் நாம் அநுமானிக்கிறோம் - உதாரணமாக, ஏதோ ஒரு காலத்தில் மழை பெய்வதையும் அதனால் ஏற்படும் தண்ணீர் தேக்கமும் சேர்த்து கண்ட நாம், வேறொரு காலத்தில் தண்ணீர் தேக்கத்தைக் கண்டவுடன் அங்கு மழை பெய்திருந்ததாக அநுமானிக்கிறோம்.

இதில், ஹேது-ஸாத்ய சம்பந்தம் முக்கியமாகிறது ; அதன் குறைபாடுகள் ***விபரீத ஞானத்திற்கு*** ஹேதுவாகிறது. உதாரணமாக : தண்ணீர் தேக்கமானது, மற்ற காரணங்களினாலும் (தண்ணீர் வாகனத்திலிருந்து வெளியேறியதாலும்) உண்டாக வாய்ப்புண்டு.

# ***சப்த ப்ரமாணத்தால் உண்டாகும் அறிவு*** - ப்ரத்யக்ஷம் மற்றும் அநுமானத்தால் நிச்சயிக்கப் பட முடியாதவற்றை, நம்மிடம் அளவு கடந்த அன்பு உடைய, ஒரு நற் பலனையும் நம்மிடம் எதிர்பார்க்காத, நம் நலனில் மட்டுமே ஆர்வம் கொண்ட ஒருவரால் சொல்லப் படும் நல்வார்த்தையைக் கொண்டு நம்புகிறோம் - ஆக, வைதீக மதங்கள், வேத வேதாந்தங்களான சாஸ்த்திர ப்ரமாணமாகக் கொண்டு, நம் புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயங்களை க்ரஹிக்க இயலும்.

ஒரு குணவதியான தாய், தன் குழந்தையிடம் அந்த குழந்தையின் தந்தையை அறிமுகப் படுத்தவதை ப்ரத்யக்ஷ அநுமானத்தினால் அறியப்பட முடியாத 'சப்த ப்ரமாணம்' ஆகும்.

ஆக, ஸர்வேஸ்வரனையும் அவனது ஆணைகளையும் சப்த ப்ரமாணத்தைக் கொண்டே அறிய வேண்டும். அதாவது, வேத வேதாந்த சாஸ்த்திரங்கள் ; ஸர்வேஸ்வரனான கண்ணன், சாஸ்த்ரத்தை அடியொற்றியே நடக்க வேண்டும் என வலியுறுத்துகிறான் பகவத் கீதை (16-24) ஸ்லோகத்தில்.

***தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்ய அகார்ய விவஸ்திதௌ. க்ஞாத்வா சாஸ்த்ர விதானோக்தம் கர்ம கர்தும் இஹ அர்ஹஸி***

அதாவது,

சாஸ்த்திரமே ப்ரமாணம் என கண்ணன் அருளினான்.

‘தர்ம சாஸத்ரத்தில் விதித்தபடி ‘எது எவ்வாறு செய்ய தக்கது’ மற்றும் ‘எது செய்யத் தகாதது’ என்பதை அறிந்து  அதற்கேற்ப செயல் படவேண்டும்’.

அதனால் தான்,

*__மாதாபித்ரு ஸஹஸ்ரேப்யோ வத்ஸலதரம்  சாஸ்த்ரம்__*

எனப் படுகிறது ; அதாவது, ஆயிரம் மாதா பிதாக்களைக்காட்டிலும் ,சாஸ்த்ரம் நம்மிடம் வாத்ஸல்யம் கொண்டது என்பது இதன் அர்த்தம்.

இதில், சப்த ப்ரமாணத்தை, முன் பின் விரோதமற்று க்ரஹிக்கும் போது, அது சம்சய விபர்யயம் அற தெளிவிக்க உகந்தது.

2. இந்த ப்ரமாணங்களால் அறியப்படுவது *__ப்ரமேயம்__*

லோக விஷயத்தில், ப்ரமாணமே ஆதாரமாகிறது ; அதனால் அறியப் படுவது, உண்மை நிலை.

நீதி மன்றங்களில், குற்ற வழக்குகள், பதிவாகும் போது, ப்ரமாணங்களாவது சாக்ஷியங்கள்;  அதனால் நிரூபிக்கப் படும் குற்றம் ப்ரமேயங்களாகிறது.

புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆத்ம விஷயத்தில், இந்த *__சப்த ப்ரமாணங்கள்__* எவை என்றால் வேதம் மற்றும் உபநிஷத்துக்கள் ; மேலும் உப ப்ருஹ்மணங்களான  ஸ்ம்ருதிகள், இதிஹாஸ புராணங்கள், ஆழ்வார்கள் பாசுரங்கள் மற்றும் அவற்றுக்கு ஆசார்யர்கள் செய்த வ்யாக்யானங்கள் அனைத்தும் *__சப்த ப்ரமாணங்களாகும்__*.

# ஸகல உபநிஷத் சாரமான பகவத் கீதையில் (15-15), ஸர்வேஸ்வரனான கண்ணன்,

*__ஸர்வஸ்ய சாஹம் ஹ்ரதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர்  ஞானம் அபோஹனம் ச. வேதேஸ்ச ஸர்வே அஹமேவ வேத்யோ வேதாந்த க்ருத் வேத விதேவ சாஹம்__*

என்கிறான்.

அதாவது,

'அக்நி, சந்திரன் போன்ற ஸகல சேதனர்களின் இதயத்தில் நான் இருக்கிறேன். நான் நியமிக்கிறேன். நினைவு, அறிவு, மாறுபட்ட அறிவு, ஊகம் முதலியவை என்னாலேயே உண்டாகிறது. எல்லா வேதங்களாலும் அறியப்படுபவன் நானே. பலன் தருபவனும் நானே’ - என்கிறான் கண்ணன்.

ப்ரமாண - ப்ரமேய விவரம் :

*__ஸர்வை: வேதை: ச வேத்ய: அஹம் ஏவ__* - எல்லாத் வேதங்களாலும் அறியப்படும் பொருள் நான்

*__ப்ரமாணம்__* : வேத வேதாந்த சாஸ்த்திரங்கள்
*__ப்ரமேயம்__* : வேதங்களால் அறியப் படும் ப்ரமேயமான கண்ணன்

3. ஸ்வாமி தேசிகன், *__தத்வபதவீ__* என்கிற சில்லரை ரஹஸ்யத்தில்,

*__முக்திக்கு அருள் சூட மூன்றைத் தெளி முன்னம் இத்திக்கால் ஏற்கும் ஹிதம்__*

என்று, மோக்ஷத்திற்கான பகவத் க்ருபையை பெறும் முன் தத்வ த்ரயத்தை (சேதநம், அசேதநம், ஈஸ்வரன்) அறிவதால், உபாயம் ஸித்திக்கும் என அருளினார்.

ஒரு விஷயத்தை அறிய அதன் தன்மைகளை அறிய வேண்டும் ; அது ***ஸ்வரூப நிரூபக தர்மம்*** என்றும் ***நிரூபித ஸ்வரூப விசேஷம்*** என்றும் இரு வகைப்படும்.

# ***ஸ்வரூப நிரூபக தர்மம்*** - பத உரை :

***ஸ்வரூபம்*** - வஸ்துவின் (இருப்பை)

***நிரூபகம்*** - நிரூபிக்க ஆதாரமான

***தர்மம்*** - தன்மைகள்

ஆக, தன் இருப்பை நிரூபிக்க ஆதாரமான தன்மைகள் ***ஸ்வரூப நிரூபக தர்மம்***

அதாவது, இந்த ***ஸ்வரூப நிரூபக தர்மம்*** என்கிற தன்மையின் இருப்பே அதை அந்த வஸ்துவாக தெளிவிக்கிறது.

# ***நிரூபித ஸ்வரூப விசேஷம்*** - பத உரை :

***நிரூபித*** - ஆதாரம் கொண்டு நீரூபிக்கப் பட்ட

***ஸ்வரூபம்*** - வஸ்துவின்

***விசேஷம்*** - மற்றுமுள்ள விசேஷித்த தன்மைகள்

ஆக, ஆதாரம் கொண்டு நிரூபிக்கப் பட்ட வஸ்துவின் மற்ற விசேஷித்த தன்மைகள் ***நிரூபித ஸ்வரூப விசேஷம்***

அதாவது, இந்த ***நிரூபித ஸ்வரூப விசேஷம்*** என்பது, நிரூபித்த வஸ்துவின் மற்ற தன்மைகளை தெளிவிக்கிறது.

# உதாரணம் :

வஸ்து : குடம்

***ஸ்வரூப நிரூபக தர்மம்*** : அதனுடைய ஆக்ருதி (உருவம்)

இந்த, ஆக்ருதி (உருவம்), அதாவது அதன் ***ஸ்வரூப நிரூபக தர்மம்*** என்கிற தன்மையின் இருப்பே அதை குடம் என தெளிவிக்கிறது. அந்த உருவம் இல்லாதவற்றை குடம் என்று கூறுவதில்லை.

***நிரூபித ஸ்வரூப விசேஷம்*** - குடம் என்று நிரூபிக்கப் பட்ட வஸ்துவின் மேலும் உள்ள விசேஷ தன்மைகள்:

அந்த குடம் மண்ணால் செய்யப் பட்டது; அந்த குடம் 5 லிட்டர் அளவு தண்ணீர் கொள்ளளவு கொண்டது; அதன் எடை சுமார் 500 கிராம் கொண்டது போன்றவைகள்.

4. இதையே, ***தத்வ த்ரய சிந்தனாதிகாரத்தில்*** ஒவ்வொரு தத்வத்தை விளக்கும் போதும், அதற்கு ***ப்ரதியோகியான*** மற்ற தத்வங்களின், ***ஸ்வரூபம்*** (இருப்பு), ***ஸ்திதி*** (வாழ்வு) மற்றும் ***ப்ரவ்ருத்தி*** (செயல்கள்) ஆகியவற்றின் பேதங்களைக் கொண்டு விளக்க வேண்டுவதாகிறது.

# தத்வங்களை அறியும் போது, அததற்கே அஸாதாரண தன்மைகளாலும், மற்ற தத்வங்களோடு உள்ள பேதங்களாலும் அறியப் படுகிறது என்பதனை, பகவத் ராமானுஜர்,

*ஸ்வாதீன த்ரிவித சேதந அசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம்*

என அருளியுள்ளரா ; தத்வங்களாவது, அதனுடைய ***ஸ்வரூபம்*** (இருப்பு), ***ஸ்திதி*** (வாழ்வு) மற்றும் ***ப்ரவ்ருத்தி*** (செயல்களைக்) கொண்டே அறிய வேண்டும் ; அவற்றில் முக்கியமானது, அவற்றுக்குள் உள்ள பேதங்கள்.

***மூன்று வித சேதநர்கள்*** (பத்தர், முக்தர், நித்யர்) மற்றும்

***மூன்று வித அசேதந வஸ்துக்களின்*** (ப்ரக்ருதி, காலம், சுத்த ஸத்வம்)

***ஸர்வ நியந்தாவான ஈஸ்வரன்***

# ஈஸ்வர (ப்ருஹ்மம்) ஸ்வரூப நிரூபக தர்மம் - அதாவது,

***ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ருஹ்ம*** ***ஆனந்தம் ப்ருஹ்ம*** ***அமலம் ப்ருஹ்ம*** ***ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ***

என்கிறது தைத்ரீய உபநிஷத் வரி.

***ஸத்யம்*** (மாறுதலற்றது) ***ஞானம்*** (அறிவு கொண்டது), ***அனந்தம்*** (அனைத்திலும் வ்யாபித்திருப்பது), ***ஆனந்தம்*** (இன்பமயமானது), ***அமலம்*** (குற்றமற்றது) மற்றும் ***ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ*** பெரிய பிராட்டியை பத்நியாக உடையவன் - பகவத் இலக்கணம்.

# ஈஸ்வர (ப்ருஹ்மம்) நிரூபித ஸ்வரூப விசேஷணம் - அதாவது,

***மோக்ஷப்ரதத்வம்* -** விதிப்படி உபாயத்தை அநுஷ்டித்தவர்களுக்கு மோக்ஷ பலனளித்தல்

***ஸர்வ ஆதாரத்வம்* -** அனைத்து சேதந அசேதந வஸ்துக்களையும் உள்ளபடி தாங்கி இருத்தல்

***ஸர்வ நியந்த்ருத்வம்* -** அனைத்து வஸ்துக்களையும் தன் ஆதிக்கத்தில் கொண்டு இருத்தல்

***ஸர்வ சேஷித்வம்* -** அனைத்து வஸ்துக்களையும் தன் உபயோகத்திற்கு கொண்டு இருத்தல்

***ஸர்வ சரீரித்வம்* -** அனைத்து சேதந அசேதந வஸ்துக்களுக்கும் அந்தர்யாமியாய் இருத்தல்

***ஸர்வ சப்த வாச்யத்வம்* -** அனைத்து சப்தங்களாலும் அறியப் படுபவனாய் இருத்தல்

***ஸர்வ வேத வேத்யத்வம்* -** வேதங்களால் மட்டுமே அறியப் படுபவனாய் இருத்தல்

***ஸர்வ லோக சரண்யத்வம்* -** அனைவரும் சரணம் புக ஏற்றவனாய் இருத்தல்

***ஸர்வ முமுக்ஷூ உபாஸ்யத்வம்* -** மோக்ஷத்தை அடைய உபாஸிக்க தகுந்தவனாய் இருத்தல்

***ஸர்வ பல ப்ரதத்வம்* -** அனைத்து பலனையும் கொடுக்க வல்லவனாய் இருத்தல்

பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகள் அளவற்றது ; ப்ரமாணங்களால் இறுதியாக அறிய முடியாதது ; அளவற்றதை அளவிடமுடியாது என அறிவதே ஸர்வக்ஞத்வ தன்மை. ஆக, பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகள், ஸர்வேஸ்வரனாலும் அளவிட ஒண்ணாது.

5. பகவத் ஸ்வரூபம் அளவற்றது என்பது ப்ரமாண ஸித்தம் ; தைத்திரீய உபநிஷத் (நாராயண ஸூக்தம்)

***அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:***

என்கிறது.

ஆக, எம்பெருமான் அனைத்து வஸ்துக் களிலும், அவன் இல்லை என்று சொல்ல ஒண்ணாதபடி, உள்ளும் புறமும் நிறைந்திருக்கிறான் ; ஆக, த்ரிவித பரிச்சேதமும் அற்ற ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன், வஸ்துக்களின் விகாரத்தால், அந்தர்யாமித்வத்வம் பாதிக்கப் படச் செய்ய முடியாது. ஆக, உள் ப்ரதேசம் உள்ள வஸ்துக்களில் உள் ப்ரதேசத்திலும் வெளி ப்ரதேசம் உள்ள வஸத்துக்களில் வெளி ப்ரதேசங்களிலும் ஸகல காலத்திலும் நிறைந்து இருக்கிறான், என்பது ப்ரமாண ஸித்தம் ; பகவத் விபுத்வத்தை, திருமங்கை ஆழ்வார், பெரிய திருமொழியில் (3-8-1)

***நந்தா விளக்கே அளத்தற்கு அரியாய் நர நாரணனே! கருமா முகில் போல் எந்தாய், எமக்கே அருளாய், என நின்று இமையோர் பரவும் இடம், எத்திசையும் கந்தாரம் அத்தேனிசை பாட மாடே களி வண்டும் இழற்ற நிழல் துதைந்து, மந்தாரம் நின்று மண மல்கு நாங்கூர் மணிமாடக் கோயில் வணங்கு என் மனனே***

என அருளினார்.அதாவது,

‘நித்யமாய் ஸ்வயம் ப்ரகாசமான ஞானத்தை ஸ்வரூபமாகவுடையவனே! ***அளவிட முடியாதவனே*** ! நர நாரயணாவதாரம் செய்தருளினவனே! கறுத்துப் பெருத்த மேகம் போன்ற எம்பெருமானே (தூய்மையான நீரை வழங்குபவனே) ! எங்களுக்கே அருள் செய்ய வேணும் என்று சொல்லி தேவர்கள் இந்நிலத்தில் வந்து நின்று துதி செய்யும் இடமானதும், அழகிய தேன் ஜாதி வண்டுகள் எல்லா இடங்களிலும் தேவகாந்தாரி ராகம் பாடவும், களி வண்டு ஜாதியில் பிறந்த வண்டுகள் பக்கங்களில் ஆலாபனை பண்ணவும், பாரிஜாத மரங்கள் நிழல் தர நெருங்கி நின்று பரிமளம் நிறைந்து இருக்கப் பெற்றதுமான திருநாங்கூரிலுள்ள மணிமாடக் கோயிலை என் மனனே வணங்கு !’

உலகத்தில் வஸ்துக்கள் மூன்று விதங்களில் அளவிற்கு உட்படுகின்றன :

***தேச பரிச்சேதம்*** - ஒரு தேசத்தில் உள்ளது மற்றதில் இல்லாமற் போவது.

***கால பரிச்சேதம்*** - ஒரு காலத்தில் உள்ளது மற்றதில் இல்லாமற் போவது.

***வஸ்து பரிச்சேதம்*** - ஒரு வஸ்துவில் உள்ளது மற்றதில் இல்லாமற் போவது.

ஆனால் ஸர்வேஸ்வரன், ***அளத்தற்கு அரியாய்*** என்கிறபடி, தேசங்களாலும், காலங்களாலும், வஸ்துக்களாலும் அளவிட முடியாத படியால், அவன் எல்லை அற்றவன் என சாஸ்த்திரங்கள் உரைக்கின்றன.

6. பகவத் ரூபம் அளவற்றது என்பது ப்ரமாண ஸித்தம் ; பகவத் அவதாரங்கள் பல ; அதில் பல திருமேனிகளோடே அவதரித்து தர்மத்தை நிரை நாட்டுகிறான் ; ஸர்வேஸ்வரனான கண்ணன் தானே, தன் வாக்கால், பகவத் கீதையில் (4-8) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

# கண்ணனின் அவதார காரணம் பற்றிய விளக்கம் :

***பரித்ராணாய ஸாதூனாம் வினாஷாயச துஷ்க்ருதாம் தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே***

அதாவது,

‘அடியார்களை காக்கவும், துஷ்டர்களை அழிக்கவும், தர்மத்தை நிலை நிறுத்தவும் யுகம் தோரும் நான் அவதரிக்கிறேன் ’

# ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி (6-9-5),

***விண் மீதிருப்பாய்! மலைமேல் நிற்பாய்! கடற்சேர்ப்பாய்! மண் மீது உழல்வாய்! இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்! எண்மீதியன்றபுற வண்டத்தாய்! எனதாவி உள்மீதாடி உருக்காட்டாதே ஒளிப்பாயோ***

என உள்ளது. அதாவது,

***விண்மீதிருப்பாய்* - *பரம பதம்*** (நித்ய விபூதி) - பர ரூபம் - ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள பரவாஸுதேவன் என்ற திவ்ய மங்கள ரூபம்

***கடல் சேர்ப்பாய்* - *திருப்பாற் கடல்*** - வ்யூஹ ரூபம் - வாஸுதேவனைத் தவிர மூன்று ரூபங்களை கொண்டு லோகங்களை வழி நடத்துவது - அதாவது, ஸங்கர்ஷணன் ( சமஷ்டி ஸம்ஹாரம் மற்றும் சாஸத்ரத்தை வெளியிடுவது), ப்ரத்யும்னன் (சமஷ்டி ஸ்ருஷ்டி மற்றும் தர்மத்தை நிலை நாட்டுவது) மற்றும் அநிருத்தன் (ரக்ஷணம் மற்றும் தத்வ உபதேசம் செய்வது)

***மண்மீது உழல்வாய்* - *ப்ராக்ருத லோகம்*** - விபவம் - ஸ்ரீராம கண்ணன் போன்ற அவதாரங்கள்

***மலைமேல் நிற்பாய்* - *கோவில்கள்*** - அர்ச்சா ரூபமான ***மந்த்ர-பிம்பம்*** (ப்ராக்ருத லோகம்)

***மறைந்துறைவாய்* - *அந்தர்யாமி*** - எல்லோருடைய ஹ்ருதயத்தில் இருக்கின்ற ஸுக்ஷ்ம ரூபம் (***அங்குஷ்ட மாத்ர ப்ரமித:*** - ஸ்ரீபாஷ்யம் - பிரமிதாதிகரணம்)

இந்த பகவத் ரூபங்கள் அனைத்தும் பரம்-வ்யூஹம்-விபவம்-அர்ச்சை-அந்தர்யாமியாக நித்ய ஸங்கல்பத்தினால் நித்யமாகவும், அநித்ய ஸங்கல்பத்தால் அநித்யமாயும் ஸங்கல்பிக்க அவன் வல்லவன்.

# கடோபநிஷத்தில்,

***நித்யோ நித்யானாம் சேதநஸ்சேதநானாம் ஏகோ பஹூனாம் யோ விததாதி காமான் தமாத்மஸ்தம் யேனுபஷ்யந்தி தீராஸ் தேசாம் சாஸ்வதீ நேதரேசாம்***

எந்த ஒன்று அழிவனவற்றுள் அழியாததாகவும், பல உயிரினங்களுக்குள் உயிராகவும், அனைவருடைய ஆசைகளையும் பூர்த்தி செய்கிறதோ, அந்த ஒன்றாகிய பரமாத்மாவை எந்த தீரர்கள் அறிகிறார்களோ, அவர்களுக்கு நிலையான அமைதி கிடைக்கிறது. மற்றவர்களுக்கு இல்லை, எனப்படுகிறது.

ஜீவ பஹுத்வம் சொல்லப் பட்டிருக்கிறது ; அவன் ஸர்வ அந்தர்யாமி.

7. பகவத் குணங்கள் அளவற்றது என்பது ப்ரமாண ஸித்தம் ; பகவத் ராமானுஜரின் சரணாகதி கத்யம் :

***ஸ்வாபாவிக அநவதிகாதிசய ஞான பல ஐச்வர்ய வீர்ய சக்தி தேஜஸ் ஸௌசீல்ய வாத்ஸல்ய மார்த்தவ ஆர்ஜவ ஸௌஹார்த்த ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்ய ஔதார்ய சாதுர்ய ஸ்தைர்ய தைர்ய சௌர்ய பராக்ரம ஸத்யகாம ஸத்ய ஸங்கல்ப க்ருதித்வ க்ருதக்ஞதா அஸங்க்யேய கல்யாண குணகௌக மஹா ஆர்ணவ !***

# ***ஸ்வாபாவிக அநவதிகாதிசய ஞான பல ஐச்வர்ய வீர்ய சக்தி தேஜஸ்*** - இயல்பானதுவும் எல்லை அற்றதுவுமான ***ஞானம்*** (அனைத்தையும் எப்போதும் அறிபவன்), ***பலம்*** (ஸர்வத்தையும் தாங்குபவன்),

*ஐஸ்வர்யம்* (அனைத்தையும் நியமிப்பவன்), *வீர்யம்* (மாறுதல் அற்றவன்), *சக்தி* (மிக எளிதாக எதையும் செய்வபவன்), *தேஜஸ்* (கண்டவுடன் வணங்கச் செய்பவன்) என்று பரத்வ உபயுக்மான தன்மைகளைக் கொண்டவன் ஸர்வேஸ்வரன் ; இதனால் அவன் ப்ராப்யனாகவும் ப்ராபகனாகவும் ஆகிறான்.

# *ஸௌசீல்ய வாத்ஸல்ய மார்த்தவ ஆர்ஜவ ஸௌஹார்த* - எளியவனாகவும், குற்றங்களை பொறுப்பவனாகவும், அடியார்களை பிரிய மனம் அற்றவனும், மனம் வாக்கு காயங்களில் ஏக தன்மை கொண்டவனும், ஜீவர்களிடம் நல் எண்ணம் கொண்டவனும்

# *ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்ய ஔதார்ய சாதுர்ய ஸ்தைர்ய தைர்ய சௌளர்ய பராக்ரம* - பாரபக்ஷமற்றவனும், பிறர் துக்கங்களை களைபவனும், எதிர்ப்பவர்களையும் நேசிப்பவனும், ஜீவர்களுக்கு அவன் செய்யும் உபகாரங்களை அளவிட முடியாத படி உள்ளவனும், உபகாரகனும், ஜீவர்களின் குற்றங்களை பெரிதாகக் கொள்ளாதவனும், அடியார்ளை ரேஇக்கும் போது உள்ள இடர்களை போக்குபவனும், ரக்ஷிப்பதில் உறுதி உடையவனும், எதிரிகளை அழிப்பதில் வீரம் சாமர்த்யம் உடையவனுமானன் என்று காருண்ய உபயுக்மான தன்மைகளைக் கொண்டவன் ஸர்வேஸ்வரன்

# *ஸத்யகாம* - ஜீவர்களுக்கு நலன் பயப்பதையே தனக்கு இச்சையாகக் கொண்டவன் ஸர்வேஸ்வரன்.

# *ஸத்ய ஸங்கல்ப* - அகர்மவச்யனானவன் கர்ம வச்யர்கள் உள்ள ப்ரபஞ்சத்தில் அவதாரங்களைச் செய்தும் ஜீவர்களை ரக்ஷிக்க வல்லவன் ஸர்வேஸ்வரன்

# *க்ருதித்வ* - தானே சம்சாரி ஜீவர்களை, ஒரு ஸுஹ்ருத விசேஷத்தால், உபாயத்தில் மூட்டி ரக்ஷிப்பவன் ஸர்வேஸ்வரன்

# *க்ருதக்ஞதா* - ப்ரபத்தி அனுஷ்டித்தவனிடம் குற்றங்களை காணாது பரம புருஷார்த்தத்தை அளிப்பவன் ஸர்வேஸ்வரன்

# *அஸங்க்யேய கல்யாண குணகநௌக மஹா ஆர்ணவ !* - எண்ணில் அடங்காத நற் குணங்களை ஆஸ்ருதர்களுக்கும் பூரணமாக விஷயமாகாதபடி உள்ளவன் ஸர்வேஸ்வரன்

ஆக, *அஸங்க்யேய கல்யாண குணகநௌக மஹா ஆர்ணவ* என்பதில் உள்ள எண்ணில் அடங்காத நற் குணங்களை உடையவன்

8. பகவத் விபூதி அளவற்றது என்பது ப்ரமாண ஸித்தம் ; ஸர்வேஸ்வரனான கண்ணனின் அளவற்ற விபூதியை (சொத்தை) அறிய அர்ஜுனன் விரும்புகிறான். அதற்கு கண்ணன் பகவத் கீதையில் (10-40) பதில் அளிக்கிறான்.

***நாந்தோஸ்தி மம திவ்யானாம் விபூதிநாம் பரந்தப. ஏஷ தூத்தேசத: ப்ரோக்தோ விபூதேர் விஸ்தரோ மயா***

அதாவது,

'என்னுடைய விபூதிக்கு (சொத்துக்கு) அளவில்லை. முக்கியமானவற்றையே இங்கு கூறினேன்.'

9. ஆக, இவ்விஷயத்தை ஸ்ருதி சொல்கிறதாவது :

# ப்ருஹ்மத்தைப் பற்றின கேநோபநிஷத் வரி :

***யஸ்ய அமதம் தஸ்ய மதம், மதம் யஸ்ய ந வேத ஸ:, அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம் அவிஜாநதாம்***

ப்ருஹ்மம் அறியப்படவில்லை என எவன் சொல்கிறானோ அவனால் அறியப்பட்டதாம். எவன் ப்ருஹ்மத்தை அறியப்பட்டது என்கிறானோ அவனால் அறியப்படாததாம்.

இந்த ஸ்ருதி வாக்யத்தை, ஸ்வாமி தேசிகனின் ஶ்ரீமத் ரஹஸ்ய த்ரய சார க்ரந்தத்துக்கு உயர்த்தியைச் சொல்லும் வகையில் சில ஆசார்யர்கள் அருளியுள்ளனர்.

*அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம் அவிஜாநதாம் ; ரஹஸ்ய த்ரய சாராக்யம் பரம் ப்ருஹ்மாஸ்து மே ஹ்ருதி*

அதாவது, ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரம் என்னும் நூல் ப்ருஹ்மத்துக்கு துல்யம் என்றும் ; அதனால் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரம் என்னும் நூல் அறியப்படவில்லை என எவன் சொல்கிறானோ அவனால் அறியப்பட்டதாம். எவன் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரம் என்னும் நூல் அறியப்பட்டது என்கிறானோ அவனால் அறியப்படாததாம், என இந்த நூல் ப்ரஷம்சிக்கப் படுகிறது.

இதன் தாத்பர்யத்தை நன்கு உணர வேண்டும் :

ப்ரமாணத்தினால் அறியப் படுவது ***ப்ரமேயம்*** ;

ப்ருஹ்மம் ***ப்ரமேயம்*** அதாவது அறியப் படுவது ;

ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரம் என்னும் நூல் ப்ரமாணம், அதாவது தத்வ ஹித புருஷார்த்தங்களை அறிவிப்பது.

7. இந்த கேநோபநிஷத் வரியை தவறாக புரிந்து கொண்ட அத்வைதிகள், மற்ற ஸ்ருதி வாக்ய விரோதமாக, ***ப்ருஹ்மத்துக்கு ஞேயத்வம் (அறியப் படும்) கிடையாது*** என்றனர் ; அதாவது, ***அத்வைத தத்த்வத்தின்*** சாரமாக, வேதங்களிலிருந்தும் உபநிஷத்துக்களிலிருந்தும், ***நான்கு அபேத வாக்யங்களைத்*** தனிப்படுத்தினார் சங்கரர். பேத ஸ்ருதிகளுக்கு தௌர்பல்யத்தை விபரீதமாக விளக்கினார் ; ப்ருஹ்மத்தைத் தவிர மற்றதெல்லாம் அவித்யா கல்பிதம் என்றனர்.

***ப்ரக்ஞானம் ப்ரஹ்ம*** (ரிக் வேதம் – ஐத்தரேய உபநிஷத்) - ‘உயர்ந்த ஞானமே ப்ரஹ்மன்’ என்று பரமாத்மாவை அளவிடற்கரிய ஞானஸ்வரூபமாக ரிக் வேதம் காட்டுகிறது.

***அஹம் ப்ரஹ்மாஸ்மி*** (யஜுர் வேதம் -ப்ருஹதாரண்யக உபநிஷத்) -‘நான் (அஹம்) ப்ரஹ்மாஸ்மி (பரப்ரஹ்மனாக இருக்கிறேன்)’ என்று, ஜீவாத்மா பரமாத்மா வேறுபாடின்மையைக் குறிக்கிறது.

***தத்வமஸி*** (ஸாம வேதம் – சந்தோக்ய உபநிஷத்) - ‘நீயும் அதுவாக இருக்கிறாய்’ என்ற பொருளைக் குறித்து, (உலக ரீதியில்) ‘நீயும் அதே பரம்பொருளாய் இருக்கிறாய், என்கிறது இந்த வாக்யம்.

***அயமாத்மா ப்ரஹ்ம*** (அதர்வண வேதம் – மாண்டூக்யோபநிஷத்) - ’இந்த ஆத்மா தான் பரப்ரஹ்மம்’, யாராக இருந்தாலும் சரி, அவ்வவர் உடல், பொறி, மனம், எண்ணம், உயிர் இவற்றைத்தாண்டி ‘நான்’ என்று இருக்கிற பாவமே பரப்ரஹ்மம் என்பதை எள்ளளவு ஐயமும் இன்றி நிறுவுகிறது.

ஶ்ரீராமானுஜர் நிர்வஹித்த ***விசிஷ்டாத்வைதத்தில்*** வேத வரிகளுக்குள் ஏற்ற தாழ்வு கிடையாது; அனைத்து வரிகளும் சம வலிமை கொண்டனவே என அருளி, ***பேத ஸ்ருதி*** மற்றும் ***அபேத ஸ்ருதி*** இரண்டையும் ***கடக ஸ்ருதியைக்*** கொண்டு இணைத்து, சரீர-ஆத்ம சம்பந்தத்தைக் கொண்டு, ***இதி ஸர்வம் ஸமஞ்சஸம்*** அதாவது ‘இவ்வாறு முரண்பாடுகள் களையப் பட்டன' என ஶ்ரீ ராமானுஜரின் ஶ்ரீபாஷ்யத்தில் உறுதி செய்தார்.

ஆக, ப்ரமேயமான பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை அளவிட முடியாது என்பதனை ***அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம் அவிஜாநதாம்*** (ப்ருஹ்மத்தின் ஸ்வரூப ரூப குண விபூதிகளை முழுமையாக அறியவில்லை என்பவர்கள் கப்ருஹ்மத்தை அறிந்தவர்கள் ஆவார்கள் ; ப்ருஹ்மத்தின் ஸ்வரூப ரூப குண விபூதிகளை முழுமையாக அறிகிறார்கள் என்றால் அவர்கள் ப்ருஹ்மத்தை அறியாதவர்கள் ஆவார்கள்) எனப் படுகிறது.

8. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரம் என்னும் ப்ரமாணம் தத்வ ஹித புருஷார்த்தங்களை திருவஷ்டாக்ஷர, த்வய, சரமஸ்லோக மந்திரங்களால் விளக்கப் பட்டிருக்கிறது ; இந்த க்ரந்தம், அகிஞ்சனர்களான சம்சாரி ஜீவர்களுக்கு தத்வ ஹித புருஷார்த்த விஷய ஞானம் அளிக்கும் ப்ரகாரமாகிறது ; இதனால், மோக்ஷ உபாய அநுஷ்டானம்

# ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் *சார நிஷ்கர்ஷ அதிகாரத்தில்*

***சாரக்ஞோ யதி கஸ்திதஸ்தி புவநே நாதஸ்ய யூதஸ்த ந:***

என அருளினார் ; அதாவது, இந்த ரஹஸ்ய த்ரயத்தின் சாரத்தை தெளிவாக அறிந்த ஒருவன், இப்புவியில் இருப்பனேயானால், அவன் வேத மார்க்கத்தை தழுவிச் செல்லும் கூட்டத்திற்கே தலைவனாகிறான் ; இதனால் ***அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம் அவிஜாநதாம்*** என்பதனைக் கொண்டு தெளிவற்ற ஞான அநுஷ்டான பரமாக்க முடியாது.

# ஸ்வாமி தேசிகனின் ***ப்ரபத்தி யோக்யாதிகார*** வரி :

***இப்படி அபிமத பலத்துக்கு உபாயாந்தர நிஸ்ப்ருஹனாய் ந்யாஸ வித்யையிலே இழியுமவனுக்கு இவ்வித்யைக்கு அதிகார விசேஷம் முதலானவை இருக்கும் படி அறிய வேண்டும் ; அதிகாரமாவது அவ்வோ பல உபாயங்களிலே ப்ரவ்ருத்தனாம் புருஷனுக்குப் பலத்தில் அர்த்தித்வமும் உபாயத்தில் ஸாமர்த்யமும் ; இவற்றில் ஸாமர்த்யமாவது சாஸ்த்திரத்தை அறிகையும், அறிந்தபடி அநுஷ்டிக்க வல்லவனாகையும்***

இதனால் ***அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம் அவிஜாநதாம்*** என்பதனைக் கொண்டு தெளிவற்ற ஞான அநுஷ்டான பரமாக்க முடியாது.

# ஸ்வாமி தேசிகன், மேலும்

***உபயுக்தேஷு வைஷத்யம் த்ரிவர்க்க நிரபேக்ஷதா கர்ணத்ரய ஸாரூப்யம் இதி ஸௌக்ய ரஸாயனம்***

என அருளினார்.

அதாவது,

***தத்வ*** (சேதந அசேதந ஈஸ்வர) ***ஹித*** (மோக்ஷ சாதனமான சரணாகதி அநுஷ்டானம்) ***புருஷாத்ததில்*** (மோக்ஷ பலனில்) தெளிவான ஞானம், அதற்கேற்ற அநுஷ்டானம்

***தர்ம அர்த்த காமம்*** , என்கிற பலன் விஷயங்களில் பற்றற்று இருத்தலும்

***மனோ வாக் காயத்தின்*** ஒற்றுமை இருத்தலும்

சம்சார காலத்தில், ஸௌக்யம் அளிக்கும்.

அதனால் அறிய வேண்டுவது என்னவென்றால், உலக இன்பத்தில் ஈடுபாடும், மனம் சொற் செயலில் ஒற்றுமை இல்லாததும், இங்குள்ள காலம் பல துன்பங்களுக்கு காரணமாகிறது. ஆக, பர தத்வ - பரம ஹித - பரம புருஷார்த்த விஷயங்களில் கலக்கமற்ற தெளிவு, ஆத்ம உஜ்ஜீவனத்திற்கு, ஒவ்வொரு சம்சாரி ஜீவனுக்கும் தேவையாகிறது.

இதனை ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரம் அளிக்கிறது.

அதனால், ப்ரமாணமான ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சார நூலை ***அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம் அவிஜாநதாம்*** என்பதாவது, தத்வ ஹித புருஷார்த்த விஷயங்களில் தெளிவின்மையை குறிப்பதாகாது ; அது விபரீத ஞானத்துக்கும் செயலுக்கும் விஷயமாகி அநர்த்தாவகமாகும் ;

# ஸ்வாமி தேசிகன், ***நிகமனாதிகாரத்தில்***

***ஸ்ருதி ஸம்ருதி ப்ரமாணரான பூர்வாசார்யர்கள் கண்டக சோதனம் பண்ணி நடந்த வழியிலே நடக்கையாலே, நமக்கு வருவதொரு தப்பில்லை*** என அருளினார் ;

ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரம் - ***ஆசார்ய க்ருத்யாதிகாரத்தில்*** ,

***இப்படி ரஹஸ்யத்ரயத்தைப் பற்றின கீழும் மேலும் உள்ள பாசுரங்களை எல்லாம் வேதாந்த உதயன ஸம்பரதாயமான மடைப் பள்ளி வார்த்தையை ஆசார்யன் பக்கலிலே தாம் கேட்டருளினபடியே கிடாம்பி அப்புள்ளார் தன்னை கிளியைப் பழக்கி வைக்குமாப் பொலே பழக்கி வைக்க அவர் திருவுள்ளத்திலே இரக்கமடியாக பெருமாள் தெளிய ப்ராகாசிப்பித்து மறவாமற் காத்து பிழையற பேசுவித்த பாசுரங்கள்***

என்று ஸ்ரீராமானுஜ ஸ்ரீஸூக்திகளை ப்ரமாணங்களாகக் கொண்டு, தனது க்ரந்தங்கள் இருப்பதாக அருளியுள்ளார்.

8. ஆக, ***அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம் அவிஜாநதாம்*** என்கிறபடி ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தை ஸ்லாகிப்பதற்கு ப்ரதான காரணங்களாவது :

# ப்ரமேயமான ஸர்வேஸ்வரன் ஜீவனுக்கு எவ்வளவு உத்தேச்யமோ, அதே அளவிற்கு, பர தத்வ பரம ஹித பரம புருஷார்த்தங்களை, திருவஷ்டாக்ஷர, த்வய, சரமஸ்லோக விளக்கங்களால், பூர்வ பக்ஷ நிரசன பூர்வகமாக, சம்சயம் விபர்யயம் அற, தெளிவு படுத்திய ஸ்வாமி தேசிகனின் ***ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரம்*** உத்தேச்யம் என்றபடி ; இந்த க்ரந்தத்தில், பகவத் அதீனாமன சேதந அசேதநங்களை விளக்கி, பரம ப்ராப்யனான ஈஸ்வர ஸ்வரூபத்தை தெளிவித்து, அவனை அடைவதற்கு அவனே உபாயமாகிறான் என்பதனை புரிய வைத்து, ஸாத்யோபாயம் ஈஸ்வரன் அதீனமாக அநுஷ்டேயம் என நிர்வஹித்து, வேத மார்க்கமாக, பூர்வாரார்யர்கள் வழியிலே அருளப் பெற்ற படியால்,

***தத் குண ஸாரத்வாத்து தத் வ்யபதேச: ப்ராக்ஞவத்***

என்கிற ஸூத்ர பாஷ்யபடி, ஒருவனுக்கு எது சாரமான குணமோ, அதனைச் சொல்லியே வ்யவஹரிக்கப் ப்ராப்தம் ; அதனால், ப்ரமாணத்தையே ப்ரமேயமாக வ்யவஹரித்து ***அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம் அவிஜாநதாம்*** எனக் கூறக் குறையில்லை.

# பர பக்ஷ நிரசன பூர்வகமாக, பூர்ணமாக இந்த க்ரந்தத்தை க்ரஹிப்பது அஸாத்யம் ; இந்த சந்தர்பத்தில், இதிஹாஸ ஸமுச்சயத்தில், மஹரிஷி,

***ஏகம் யதி பவேத் சாஸ்த்திரம் ஞானம் நிஸ்ஸம்சயம் பவேத் பஹுத்வாதிஹ சாஸ்த்ராணாம் ஞாநதத்வம் ஸுதுர்லபம்***

என அருளியது நினைவில் கொள்ள வேண்டும் ; அதாவது, சாஸ்த்திரம் ஒன்றை மட்டுமே உரைப்பவையாக இருத்தால், எந்த விதமான ஐயமும் இன்றி அனைவருக்கும் சரியான ஞானம் உண்டாகும். ஆனால் சாஸ்த்திரங்கள் பலவாக உள்ளதால் உண்மையான ஞானம் பெறுவது மிகவும் கடினமான செயலாகும்,

என அருளிகிறார். ஆக, ஆட்சேப-சமாதானம் பூர்ணமாக இந்த க்ரந்தத்தில் ஸித்தித்தாலும், ***நிக்ஷேபரக்ஷை*** மற்றும் ***விரோத பரிஹாரம்*** போன்ற க்ரந்தங்களை ஸ்வாமி தேசின் அருளியதாலே உணரலாம்.

அதனாலும், ***அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம் அவிஜாநதாம்*** எனக் கூறக் குறையில்லை.

# ஆனால், ***அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம் அவிஜாநதாம்*** என்பதற்கு ***ஶ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம்*** அறிய முடியாதது என்கிற சாமான்ய விளக்கம், ஸம்ப்ரதாய பாமரர்களுக்கு விபரீத அர்த்த ஹேதுவாகும்.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******